செப்ரெம்பர் 12 – 18, 2004 24 பக்கங்கள் 16.00

September 12 - 18, 2004

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

14/09/2004

உலகை உலுக்கிய அனர்த்தம்

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

அருள் பாலிக்கும் நல்லைநகர் கந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகனின் குத்துக் கரணம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், ஐயா சௌமியமூர்த்தி தொண்டமானின் வாரிசு என்பதை அச்சொட்டாக உறுதிப்படுத்தி விட்டார்.

மரக்கொப்பின் மீது அமர்ந்து கொண்டிருந்த குரங்கு அதோ பாய்கிறேன், இதோ பாய்கிறேன் என்று பாசாங்கு காட்டிக்கொண்டிருந்ததுபோல, இ.தொ.காவும் அப்படிச் செய்து கொண்டிருந்துவிட்டு, இப்போது ஒரே பாய்ச்சலாக ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பக்கம் பல்டியடித்து விட்டது.

பாட்டனார் அடித்த பல்டி

இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸுக்குப் பல்டி என்பது ஒன்றும் புதியவிடயம் அல்லவே. 'மலையகத்தின் ஏக தலைவர் நானே!' என்று கூறி மார்தட்டிக்கொண்டே, தனது சரித்திரத்தை முடித்துக் கொண்ட இ.தொ.காவின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் 'பல்டி அடிக்கும் வித்தைக்கு அப்போதே பிள்ளையார் சுழி போட்டிருந்தார்.

1994 பொதுத்தேர்தலில் ரணிலுடன் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு; ஐ.தே.க. ஆட்சி அமைக்க முடியாமல் போனபோது, அப்படியே காலை வாரிவிட்டு அம்மையாரின் மடியில் குந்திக்கொண்டவர் பாட்டனார்.

மலையக மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களுடைய எதிர்காலத்திற்காகவுமே ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து கொண்டதாக அப்பொழுது அவரால் கூறப்பட்டது.

ஆனால், உண்மை அதுவல்ல. எதிர்க்கட்சியில் தாம் இருக்கும் போது, மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் அம்மாவின் பக்கம் இருக்கின்றார். ஆளும் கட்சியில் அமைச்சராகவும் இருப்பதால் மலையகத்தில் இ.தொ.கா.வின் செல்வாக்கு மங்கிவிடும், சந்திரசேகரன் வளர்ந்துவிடுவார் என்ற அச்சமே காரணமாக இருந்தது.

எனவே கௌரவம், இலட்சியம், கொள்கை எது போனாலும் பரவாயில்லை, தான் அமைச்சராக வேண்டும். சந்திரசேகரன் செல்வாக்குப் பெறக்கூடாது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே பெரியவர் பல்டி அடித்தார் என்பது பரவலான கருத்து.

பாட்டன் வழியில்

பாட்டாவின் பின்பு பேரன் அமைச்சரானார். அப்போது என்ன நடந்தது? ஆட்டம் கண்ட அம்மணியின் அரசு ஜே.வி.பியினருடன் கூடித் தகுதிகாண் அரசு ஒன்றை அமைத்தது.

இதனால் சந்திரிகாவின் அமைச்சரவையில் இருந்த மூத்த அமைச்சர்களான பேராசிரியர் பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்கா, பந்துல குணவர்த்தன ஆகியோருடன் பலர் ஐ.தே.கவுடன் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்கினர். அப்போது கூட, அங்கும் இங்கும் வாலையும் தலையையும் காட்டிக் கொண்டிருந்துவிட்டு, அம்மையார் ஆட்சியைக் கலைத்த பின்பு ஐ.தே. முன்னணியுடன் ஒட்டிக்கொண்டார்.

(இ.தொ.காவுக்கும், ஐ.தே.கவுக்கும் இடையில் புரோக்கர்போல் ஓடித்திரிந்து இணைப்புக்குக் காரணமானவர் சந்திரசேகரன் என்பதும், தேர்தலின் பின்பு ஆறுமுகன் அவரை வெட்டிவிட்டார் என்பதும் ஊர் அறிந்த கதை.)

தகுதிகாண் அரசு கவிழ்ந்தது. அம்மையாரின் ஆதரவு சரிந்தது. இனிமேல் ரணிலின் பக்கம் தான் வெற்றி. எங்கிருந்தாலும் நாம் அமைச்சரே என்று ஐ.தே.கவுடன் இணைந்து தேர்தலில்வென்று அமைச்சரானார்.

அந்த மெதமெதப்பில் இருக்கும் போதே, சந்திரிக்கா அம்மையார் எதிர்பாராதவேளையில் இரண்டே வருடத்தில் ரணிலின் அரசைக் கலைத்துவிட்டார். ஆறுமுகனின் அமைச்சு சுகபோகமும் இரண்டே வருடத்தில் தடைப்பட்டது.

ஆட்சிமாறியது. அம்மையார் சிறுபான்மை அரசை அமைத்தார். பெரும் பான்மைக்காக ஆறுமுகனின் ஆதரவையும் நாடினார்.

அப்போதே ஆறுமுகன் பல்டி அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், அறுதிப்பெரும்பான்மை இல்லாமல் தொங்கிக்கொண்டிக்கும் போது, தானும் போய் மாட்டிக்கொள்ள வேண்டுமோ என்று சிறிது தயங்கினார்.

அத்தோடு நின்றுவிடவில்லை. இரண்டு அமைச்சர்கள், இரண்டு பிரதி அமைச்சர்கள் வேண்டும் எனத்தூதுவிட்டார்.

39 உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பியினருக்கே நான்கு அமைச்சுக்கள் தான் வழங்கப்பட்டுள்ளன. ஆக, எட்டுப்பேரைக் கொண்ட இ.தொ.காவுக்கு எப்படி இரண்டு அமைச்சுக்களைக் கொடுக்க முடியும் என உள்ளுக்குள் போர்க் கொடிதூக்கி விட்டனர்.

அதே வேளை ஜே.வி.பியினரும், அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25க்கும் மேல் அதிகரிக்கக் கூடாது என்று கழுத்துப்பிடியாகப் பிடித்து விட்டனர்.

அப்போதும் கூட அமைச்சரவை ஆசனமும் இன்றி, அங்கும் இங்கும் தடுமாறிக் கொண்டே இருந்தது இ.தொ.கா.

ஆறுமுகன் தொண்டமான்

ரணிலின் காய்நகர்த்தல்

இந்த சமயத்தில் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சமயோசிதமாகக் காய் நகர்த்தினார். ஜாதிக ஹெல உறுமய உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து உறுதியான அமைப்பு ஒன்றை ஏற்படுத்திவிட்டார்.

இந்த அமைப்பில் ஆறுமுகன் தொண்டமானின் இ.தொ.காவும் கையெழுத்திட்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்தியதோடு, அனைத்துக் கூட்டங்களிலும் தவறாமல் கலந்தும் கொண்டது. அதேவேளை அமைச்சர் பதவிகளுக்கான தூண்டில்களையும் வீசிக் கொண்டே இருந்தனர்.

எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்தையே சிதறடிக்கும் வகையில் ஆறுமுகன் தொண்டமான் ஆளும்கட்சிக்கு ஆதரவு வழங்கப் போவதாக தற்பொழுது அறிவித்துவிட்டார். இது படுத்திருந்த பாய்க்கே தெரியாமல் எழும்பி ஓடிய கதைபோல் இருக்கிறது.

ரணில் ஏமாற்றம்

வியாழக்கிழமை மாலையில் கூட ஆறுமுகன் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்ட நேரம் தொலைபேசி மூலம் உரையாடிக் கொண்டிருந்தார். ஆனால் அப்போதும் கூட இப்படி பல்டி அடிக்கப்போவதைப்பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை.

தொண்டமான் பல்டி அடித்தவிடயம் ஊடகச்செய்திகளின் மூலமே தெரியவந்தது என ஐ.தே.க.தலைமை அதிர்ச்சி தெரிவித்துள்ளது. இதுதான் வேடிக்கை.

''ஆளும் கட்சியிலோ அல்லது எதிர்க்கட்சியிலோ எங்கே இருந்தாலும், நாங்கள் சுதந்திரமாகவே செயற்படுவோம்.

இணைவதோ, பிரிவதோ எங்கள் விருப்பம். தீர்மானம் எடுப்பது நாங்கள். எவரிடமும் அறிவிக்கவோ அல்லது அனுமதி பெறவோ வேண்டிய அவசியம் இல்லை'' என்பது இ.தொ.காவின் பதில். இது எப்படி இருக்கு?

ராகம் மாறியது

வழமையாகவே எமது மலையகமக்களின் நன்மைகள் கருதியும், அவர்களுடைய பாதுகாப்புக் கருதியுமே பல்டி அடித்தோம் எனக் கூறும் இ.தொ.கா., இம்முறை வேறு கதை கூறுகிறது.

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும், இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர வேண்டும், அதற்கு ஸ்திரமான ஒரு அரசாங்கம் [illegible] களாக எதையுமே செய்து கொள்ள முடியாமல் சிறுபான்மை அரசு தடுமாறுகின்றது. எனவே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ஏற்படுத்தி, ஸ்திரமான ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்காகவே ஜனாதிபதியின் சுதந்திரக்கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம் என்று சப்பைக்கட்டு கட்டி உள்ளது.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ''எனது பாட்டனார் அப்போதே ஆலோசனை கூறியது போல், புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும்'' என்றும் தெரிவிக்கப்பட்டிருந்ததே.

பூனை கண்ணை மூடிக்கொண்டால், பூலோகமே இருண்டுவிட்டது என்பது போல் கதைவிடுகின்றனர்.

இவர்கள் எந்த உலகத்தில் இருக்கின்றனர்?

ஜே.வி.பி சும்மா இருக்குமா?

சுதந்திரக் கூட்டணியின் அதிமுக்கிய பங்காளர்களான ஜே.வி.பியினரும், அரசுக்கு ஆதரவு வழங்கிடுவோம் எனக் கூறிக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமயவும் இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கின்றன. அரசாங்கம் அப்படி ஒரு பேச்சை ஆரம்பித்தால் ஆதரவை விலக்கிக் கொள்வோம். வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம் என்று கூறி விட்டனர். ஊர் ஊராகக் கூட்டங்களை நடத்துகின்றனர். போஸ்டர்களை ஒட்டுகின்றனர்.

எட்டுப் பேர்களை மட்டுமே கொண்ட இ.தொ.கா.வின் பேச்சைக் கேட்டு, இடைக்கால அதிகாரசபை ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமா?

அப்படியே ஆரம்பித்து விட்டால் 39 ஜே.வி.பி.யினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் தொடர்ந்தும் ஆதரவை வழங்குவார்களா? நிச்சயமாக வெட்டிக் கொள்வார்கள்.

அப்போது ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அமைக்கும் இ.தொ.காவின் இலட்சியக் கனவும் நோக்கமும் நிறைவேறுமா?

இவை எதுவுமே நடக்காது என்பது இ.தொ.காவுக்கு ஒன்றாகவே தெரியும். நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகின்றோம் என்று கூறுவது ஒரு பம்மாத்து.

ஹெல உறுமய கூறுவது போன்று ஆதரவு வழங்குவோம், எந்த ஒரு அமைச்சையும் ஏற்கமாட்டோம், என வெட்டு ஒன்று துண்டு இரண்டு என இவர்கள் கூறவில்லை.

இவர்களுடைய அடிப்படை நோக்கம் அமைதிப் பேச்சுவார்த்தை அல்ல. அமைச்சுப்பதவிகளே. அது தான் உண்மை. அமைச்சர்களாக அதிகாரத்தில் இருந்து சொகுசு சுகங்களை அனுபவித்தவர்களுக்கு சாதாரண எம்.பி.மாராக இருப்பதால் தூக்கமே வருவதில்லை. ஆசன அதிகார வெறி இவர்களை ஆட்டிப்படைக்கின்றது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இது தான் இவர்களுடைய நிபந்தனைகள்.

இவர்களை நம்பித்தானே யானைக்கு வாக்குப் போட்டோம். அதனால் அடிபட்டோம், உடைமைகளை இழந்தோம், எமது இளம் பெண்கள் காடையர்களால் சீரழிக்கப்பட்டனர், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன, பல உயிர்களை துப்பாக்கி வேட்டுக்கள் பறித்தன.

ஆனால், இவர்கள் எங்களை எல்லாம் அடகுவைத்து விட்டு, எமது சமூகத்தை முட்டாளாக்கிவிட்டு, குத்துக்கரணம் அடித்துவிட்டார்களே! அதுதான் இ.தொ.கா.வின் இலட்சியமா என்று இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். அதற்கு யார் பதில் சொல்வது?

இ.தொ.காவின் நிலைப்பாடு மாறுமா?

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்னுமொருவிடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் ஒரு வாக்கு வித்தியாசத்தால் வெற்றிபெற்றாலும் அரசியல் அமைப்பை மாற்றுவேன். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று கூறியதில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா இன்னும் விலகிவிடவில்லை.

''இப்படி ஒருநிலை ஏற்பட்டால் சிறுபான்மை, குறிப்பாக மலையகப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டுவிடும். எனவே அரசமைப்பை மாற்றி அமைக்க இடமளிக்க மாட்டோம்'' என்று இ.தொ.கா கொக்கரித்தது. அதன் இன்றைய நிலைப்பாடு என்ன?

அமைச்சுப்பதவிகளும், அற்ப சொற்ப சலுகைகளும் ஆறுமுகனின் கண்களை மழுங்கச் செய்து விட்டனவா?

இவற்றை எல்லாம் விட, இன்னும் ஒரு விடயமும் கசிந்துள்ளது. இப்பொழுது முன்னாள் அமைச்சர்கள் திடீர் திடீர் எனக் கைது செய்யப்படுகின்றனர். சிறையில் தள்ளப்படுகின்றனர். இந்தப் பீதியும் ஆறுமுகனைப் பிடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இன்றைய அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருக்கும் போதே, ஆறுமுகனின் கீழ் இருந்த முகாமைத்துவம் தொடர்பான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை லொரி லொரியாக நாடாளுமன்றத்தில் இறக்கிவிட்டது.

இன்று அதிகாரம் அவர்கள் கையில். எனவே, இவ்விடயம் தொடர்பான மிரட்டல்களுக்குப் பயந்து அம்மணியின் பக்கம் சாய்ந்து விட்டாரா என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பி உள்ளனர். இக்கேள்விகளுக்குப் பதில் அளிப்பது யார்?

இரா.புத்திரசிகாமணி.

வாசகர் இதயம் பேசுகிறது

தர்ஜான்சன், அராலிதெற்கு.

சுடர் விட்டெரியும் சுடர் ஒளியே! உனக்கு எனது பல கோடி வந்தனங்கள். திங்கள் தோறும் வரவை எதிர்பார்க்கும் வாசகர்களில் நானும் ஒருத்தன். பித்தன் பதில், சிறுகதை, கவிதைப்புனல் என்பவற்றை தவறாமல் வாசிப்பேன் உன்சேவை தொடர வாழ்த்துக்கள். வாழ்க பல்லாண்டு.

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

பல காத்திரமான செய்திகளை வாரம் தோறும் தாங்கிவரும் சுடர் ஒளிப் பத்திரிகை ஒரு சிறந்த சேவையை மக்களுக்குச் செய்து வருவது வரவேற்கவேண்டிய விடயம். பக்கத்து வீட்டு சமாச்சாரத்தையும் நடுநிலைமையோடு நோக்கும் தன்மை நம்வீட்டு விவகாரங்களையும் வெகுவாக அலசி ஆராய்ந்து வருவது குறிப்பிடதக்க ஒன்றாகும். அரசியல் அம்பலம் பகுதியில் சுவாரஸ்யமாய் கதைகள் விளக்கப்படுகின்றன. மலையகக்கண்ணோட்டத்தில் இரா.புத்திரசிகாமணியின் கட்டுரைகளில் எம் மக்கள் படித்து சிந்தித்து செயல்படுத்த வேண்டிய விடயங்களை தெளிவுறசொல்லும்தலைப்புக்கள் பிரமாதம். பல புதிய தகவல்களையும் தரும் உன் பணி ஓங்கி உயரவேண்டுமென வாழ்த்துகிறேன். வளர்க நின் புகழ் விண்ணுயர....

மஹீனா, புத்தளம்.

சுடர் ஒளி!
சுடர் ஒளியே
சுடர்வீசும்
[illegible] – நீ
சுமந்து வரும்
ஆக்கங்கள்
ஆதரிக்க வேண்டியவை!
நெற் கற்பனை
நெற் குறும்பு
சிரிக்க வேண்டியவை!
கவிதைபுனல்
பித்தன் பதில்கள்
சிந்திக்கக்கூடியவை!
அரசியல்
அற்புதங்கள்
அறியக் கூடியவை!
இவைகளை சுமந்துவரும்
உன்னை
வாழ்த்த வேண்டும்!
வாழ்க சுடர்வீசி.

தே.ஆரணி, மல்லாவி மத்திய கல்லூரி.

படரும் இருள் அகற்றும் சுடர் ஒளியே, உன் பக்கங்கள் ஒவ்வொன்றும் அற்புதம். காத்திருப்போம், கண்ணில் கனவுகளோடு கண்டுவிட்டால் போதும் பூத்த மலராக புன்னகைப்போம். ஆயிரம் கரங்கள் கொண்டு அகிலத்திற்கு ஒளி ஊட்டும் ஆதவனாய் நீ எழுக. உன் புகழ் பெருக, வாழ்த்துகிறேன்.

முகுந்தன், பதுளை.

சூடு சுவை சுவராசியம்கொண்ட சுடர் ஒளியே!

நீ தாங்கி வரும் செய்திகள் அனைத்தும் மிகச் சிறப்பானவை. அதிலும் என்னைக் கவர்ந்தவை பித்தன் பதில்கள், கவிதைப் புனல், சிறுகதை மற்றும் அரசியல் கட்டுரைகள் போன்றவை. இவற்றை சிறப்புற எழுதிவரும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

மேலும் நீ உன் சேவையை சிறப்புற ஆற்றி மென்மேலும் சுடர் விட்டெரிய எனது நல்வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

கவிதைப் புனல்

சிநேகிதியே...

*கனவினிலேனும் கடவுளை
கண்டிட வேண்டும்- நாம்
பிரியாவரமொன்றை
வாங்கிட வேண்டும்!

*விழியோரம் வழிகின்ற
நீராக வேண்டும்- உன்
மடி மீது தானே- என்
மரணம் வேண்டும்!

*யாரோடு வாழ்ந்தாலும்-நீ
நலம்வாழ வேண்டும்
என் நினைவாக ஜென்மங்கள்
நீயே வேண்டும்!

*இவ் ஜென்மம் நம் உறவு
பிரிந்திட நேர்ந்தால்- மறு
ஜென்மம் உன் மகனாய்
பிறந்திட வேண்டும்!

*தாயாய் நீ என்னை
தாலாட்ட வேண்டும்
சேயாய் உன் மடியில் -நான்
தூங்க வேண்டும்!

*செல்லக் குறும்புகள்- நான்
செய்ய வேண்டும்
சிரித்தபடி நீ என்னை
அணைத்திட வேண்டும்!

*தவறுகள் நான் செய்தால்
நீ தண்டிக்க வேண்டும்
தண்டித்து நான் அழுதால்
அன்பாய் தலைகோத வேண்டும்!

*தாய் உறவாக ஜென்மங்கள்- நீ
வாழ வேண்டும்- சேய்
உறவாக உன் மடியில்
உயிர் போக வேண்டும்!

*வயதாகி விட்டால் இருகை சுமந்து
குளிப்பாட்ட வேண்டும்- உனை
துவட்டி கூறைகட்டி
அழகு பார்க்க வேண்டும்!

*கவிஞர்கள் நம் அன்பை
கவிபாட வேண்டும்
காலங்கள் நம் உறவை
கதையாக்க வேண்டும்!

*இது என்ன உறவென்று
நான் கேட்க வேண்டும்- போன
ஜென்மத்து உறவொன்று
நீ சொல்ல வேண்டும்!

க.கௌரி சங்கர்
கொழும்பு.

அன்பு

கால மெல்லாம்
காத்திருந்து
கைக்கு
வந்த ....நீ
பின்னர்
கைநழுவிப்
போனதென்ன
காலங்கள் மறைந்து
காணாமல் போனாலும்
கோலங்கள்
சிதைந்து
அழிந்து
போனாலும்
கோபுரம்
இடிந்து
தகர்ந்து
போனாலும்
அகிலமே
தகர்ந்து
ஒழிந்து
போனாலும்
ஆழ்கடல்
வற்றினாலும்
உன் மீது
நான் கொண்ட
அன்பு மட்டும்
தீர்ந்துபோகாது.

ரீ.அஞ்சலோ, கல்முனை

புனிதமான காதல்

காதல் என்பது
மூன்று எழுத்து என்று
மட்டுமே அறிந்து
வைத்திருந்த எனக்கு
இன்று
உன்னைக் காதலித்து
நிஜ வாழ்கையின்
கற்பனை கனவுகளை
கவித்துளியாக வர்ணிக்க
கற்றுக் கொண்டது
உன்னை கண்ட பிறகே
இன்று உருமாறி மலர்கிறது
நம் காதல்...
என்று புரியவைத்தவள் நீ
புரிந்து கொண்டவன்
நான்
என்று புரிவார்கள் நம்
தாய் தந்தையர்
புனிதமான
நம் காதலை

இரா. மோகனசுந்தரம்.
போட்மோர்

விடுதலைக்காகவே!

விடுதலைக்காகவே சிலுவையில்
அறையப்பட்ட தேவனே– நீ
சிந்திய இரத்தத் துளிகளே–உனது
விடுதலைக்கும் சாட்சியாம்...
நாம் எத்தனை சிலுவைளை
சுமக்கின்றோம் – ஏன்?
எமக்கென்னும் கிடைக்கவில்லை
விடுதலை!
நத்தார் பாப்பா வரும் போது
சமாதானம் வருமா?என்று
கேள்வி கேட்டு நிற்போம்–இன்று
சமாதானம் வந்தும்
சொந்த ஊர் சென்று
குந்தியிருக்க முடியாது உள்ளோம்
ஆண்டவரே!
எம்மையும் சிலுவையில்
அறைந்து....
விடுதலை தா
எமக்கல்ல– எம்
உயிர்களுக்கு என்றாலும்!

யாழவன்.

காதல் கடிதம்

அன்புள்ள காதலி
உனக்காய் வரையும்
உயில்களுள் ஒன்று...
கடிதங்கள் சிலருக்கு
காகிதங்களாய் மட்டுமே
தெரியும்-அது
நமது காதலுக்காய்
தூவும் உரம்...!
நான்
யாருக்காகவும்...
எதற்காக்வும்...
இதுவரை கடிதம்
எழுதியதில்லை!
உனக்காக மட்டுமே
எழுதுகிறேன்...
என் இதயத்தில்...
உன் வீணையின்
ஓசை கேட்காவிட்டால்
பைத்தியமாய்
அலைகிறேன் புரிகிறதா...!
என்னை நீ அடையும் வரை
என் மன வானில்
சூரிய உதயமில்லை
சந்திர உதயமில்லை- உன்னை
மலர்ந்த பூக்களின்னும்
வாடவுமில்லை;- புதுப்
பூக்களின்னும் மலரவுமில்லை
கோடை -மழை-தென்றல்- புயல்
வெயில்- குளிர்
இவைகளை விட-உன்
நினைவே எனக்கு
அதிக இன்பம் தருகிறது...
துன்பமும் தருகிறது...!

முஹம்மது ஏ.றினாஸ்
மருதக் குயில்

எனது நிலை

என்ன செய்வேன்
ஆரம்பமும் முடிவும்
நீ ஆனதாய் என்
வாழ்க்கை எனும்
வட்டம் உனக்குள்
முடிந்து போனதாய்
தோன்றுகிறது
விதியை கூட மதியில்
வெல்லலாம் ஆனால்
என் மதி கூட
மண்டியிட்டு கிடக்கிறது
உந்தன் காலடியில்
இந்த உலகமே எனை
விட்டு பிரிந்தாலும்
நம் நினைவுகள்
எப்போதும் நிரந்தரமாய்
என்னிடம்

ஏ.சிவரஞ்சினி, ஆரயம்பதி.

வாழ்க்கை

ஜாதி, மதம், வேதம், பணம்
அழித்து சந்தோசத்துடன்
வாழ்வது

காதல்

இரு இதயங்களில் பூக்கும்
புனிதமான பூ

உரிமை

அடக்குபவனிடம் இருந்து
போராடி எடுப்பது

மரணம்

மண்ணில் பிறந்த ஒவ்வொரு
உயிருக்கும் வருவது

சிவரூபன்,வவுனிக்குளம்.

மாற்றம்

நான் சிறுபிள்ளை அப்போது
சின்னத் தனமாய்
சிந்தித்தேன்;
சிறுபிள்ளை போல்
பேசினேன்
அப்போது என்
பிரயாணம்
துணையோடு கூட
இப்போ நான்
வயதுக்கு வந்தவன்
என் சிந்தனையில் வளர்ச்சி
பேச்சிலும்
வளர்ச்சி
பிரயாணம் கூட
கண்டி,காலி கொழும்பு
என்று
தனியாக
இப்போது!
அப்போது
சிறுபிள்ளைப் பிரயாணம்
புகைப்பிடித்தல்
தடை என்று
பேரூந்தின் நெற்றியில்
கண்டேன்
இப்போது தனியாக
பிரயாணம்
அதே பேரூந்தில்
அதே நெற்றியில்
அருகிலுள்ள பொதிகள்
குண்டாக இருக்கலாம்
அவதானமாக இருங்கள்
என்று கண்டேன்

பாபு,கல்முனை.

பருவ நினைவுகள்

பதினாறு வயது
அந்தப்
அறிமுகக் காதல்
எப்படியெல்லாம்- நம்மை
ஆட்டி வைத்தது
அந்த வயதில்
எந்தளவிற்கு
அறிந்திருந்தோம்
காதலைப் பற்றி!
புல்வெளி, பூங்கா
கடற்கரை எங்கெல்லாம்
சுற்றித்திரிந்தோமே!
இருபதை கடந்து விட்ட
இளைஞன் போல்-உன்
பிஞ்சுக்கரம் பிடித்து
சுற்றித்திரிந்த- அந்த
இனிய நாட்களை
எப்படித்தான்
மறந்து விடமுடியும்

கு.தவசீலன், விசுவமடு.

நிஜத்துள் நினைவு

வாழ்ந்து கொண்டு சாகவும்
செத்துக் கொண்டு
வாழவும்
கற்றுத் தரும் யுத்தம்!
கனவுகளில் ஜெயித்து
நிஜத்தில் தோல்வியுற
இழுத்து செல்லும் விதி!
கண்ணுள்
கனவைவிதைத்து
ஆணிற்குள்
நினைவைப்பதித்து
கண்ணீரால் வரையும்
ஓவியம்
காகிதத்தைக் கடவுளாக்கி
கவிதைகளை
மாலையாக்கி
இதயகோவிலை இடிக்கும்
புதிய மதம்
நினைவுகளை
ஆக்கிரமித்து
பிரிவுகளை அரவணைத்து
வாழும்
அகதியின் மனம்!
சொந்தத்தை தூரமாக்கி
வாழ்வை வெறுமை படுத்தி
சோகத்திற்கு
அடிக்கப்படும்
அபாயமணி!
தூர நின்றால் நெருங்க
தோன்றும்
நெருங்கி நின்றால்
மகிழ்வை விரட்டும் தீ!
சுமையாக இருக்கும்–
அதுவும்
சுவையாக இருக்கும்
நினைவுக்குள் மட்டும்
நிஜத்துள் அல்ல
அதுதான் காதல்!

ம.துளசி,செல்வரபும். பளை.

கொடியது

பெற்ற அன்னையின்
பேரிழப்பைவிட
ஊர் அழிக்கும் பகையைவிட
உயிர் பறிக்கும் விஷத்தைவிட
உடன் பிறந்தோன் உயிர்
இழப்பைவிட
என்னை மிகவும் வேதனைப்
படுத்தியதுஉன் நட்பு

க.குகப்பிரியன்,பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிக்கப்பட்ட நியாயம்!

''அண்ணா எனக்கு அன்பையும், பாசத்தையும் காட்டி பூப்போல என்னைவைத்திருந்தீர்கள். ஆனால், கானலை காதலென்று நம்பி சாக்கடையில் விழுந்துவிட்டேன். உங்களிடம் எதையுமே மறைக்காத நான், இதை மட்டும் சொல்லாதது என்குற்றம்தான். என்னை நம்பவைத்து ஒருவன் ஏமாற்றிவிட்டான். யாதொரு கவலையும் இல்லாமல் சிட்டுக் குருவியாக சிறகடித்துப் பறந்துகொண்டிருந்த என் சிறகுகளை உடைத்து மூலையில் உட்கார வைத்து விட்டான். எல்லாத் தவறுகளுக்கும் நானே காரணம். யாரும் பொறுப்பல்ல. என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா. மாசுபட்ட இந்த உடல் மண்ணுக்குள் போவதுதான் சரி.''

தன் ஒரே தங்கை சர்மிளா எழுதிவைத்து விட்டுத் தற்கொலை செய்து கொண்ட அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் மணிவேலு வாசித்தான். அவன் கண்களில் கண்ணீர் பெருகியது . தாய், தந்தை இல்லாத சர்மிளாவை எப்படி எல்லாம் வளர்த்தான். 'அண்ணா' 'அண்ணா' என்று சுற்றிச் சுற்றி வந்தவள் இப்போது எங்கே போனாள்? அவளை மண்ணுக்கு சவமாக இறக்கி இதுவரை மூன்று வாரமாகிவிட்டது. அவளை நாசப்படுத்தியவன் யார் என்று இதுவரை தெரிய வில்லை. அவன் சர்மிளாவின் உடமைகளையெல்லாம் பரிசோதித்துப் பார்த்து விட்டான். இந்தக் கடிதத்தைத் தவிர வேறு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

மணிவேலு சோர்வுடன் எழுந்தான். அலுமாரியைத் திறந்தான், அதில் சர்மிளாவின் உடைகள் இருந்தன. அலுமாரியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்ட உடைகளின் ஒரு பகுதி சற்று மேடாக இருந்ததை அவன் அவதானித்தான். போன வாரம் அவன் அலுமாரியைப் பரிசோதனை செய்த போதும் இதைச் சரியாகக் கவனிக்கமறந்துவிட்டான். அவன் மேடான அந்தப் பகுதியிலிருந்த ஆடைகளை விலக்கினான். அங்கு பெண்கள் உபயோகப்படுத்தும் அழகான ஒரு சிறிய கைப்பை இருந்தது. அவன் அதைப் பரபரப்புடன் எடுத்து, பிரித்துப் பார்த்தான். அதில் கொஞ்சம் பணத்துடன் கடவைச்சீட்டளவிலான ஒரு புகைப்படமும் இருந்தது. அவன் புகைப்படத்தைப் பார்த்தான். அதில் அரும்பு மீசையுடன் அழகானதொரு வாலிபன் காட்சியளித்தான். மணிவேலுவுக்கு எங்கோ பொறி தட்டியது. அவனுக்கு இவனைத் தெரியும். பெயர் பாபு. வங்கியொன்றில் காசாளன். இன்னும் இரண்டு நாளில் அவனுக்குத் திருமணம் நடக்கவிருக்கின்றது. அப்படியானால் தங்கையின் மரணத்திற்கு இவன் தான் காரணமானவனா? என் தங்கை மண்ணுக்குள் இருக்க, இவன் மட்டும் மணவறையில் ஏறப்போகிறானா? விடக்கூடாது. பழிக்குப்பழி!

இப்படியான துரோகிகளுக்கு கொடுக்கும் தண்டனை மற்றவர்களுக்குப் பாடமாக இருக்க வேண்டும். அவன் தீர்மானித்துவிட்டான். பாபுவின் தங்கை மதளாவும், சர்மிளாவும் நெருங்கிய தோழிகள்தான். ஆனால், அதற்காக அவனை விட்டுவிடக் கூடாது. சர்மிளாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால், அவன் நிச்சயமாகச் செய்த குற்றத்துக்கான தண்டனையை அடைந்ததேயாக வேண்டும்.

மணிவேலு மணியைப் பார்த்தான். நேரம் காலை பத்து மணி. உடனடியாகப் புறப்பட்டான். பாபு திருமணம் செய்யவிருந்த பெண் வீடு அதிக தூரத்தில் இருந்தது. ஆகவே, அவன் பஸ்ஸில் புறப்பட்டான். அவன் கையில் கஷ்டப்பட்டுத் தேடிப்பிடித்த பாபுவின் திருமண அழைப்பிதழ் இருந்தது. அவன் பெண் வீட்டை அடைந்த போது, அங்கே பெண்ணின் அப்பா மட்டும் இருந்தார். மற்றவர்கள் திருமண அழைப்பிதழ் கொடுக்கச் சென்று விட்டதாக அறிவித்தார். மணிவேலு பெண்ணின் தந்தையிடம் பாபுவைப் பற்றிய விடயங்களை ஆதாரங்ளுடன் விபரித்தான். பெண்ணின் தந்தை அதிர்ச்சியடைந்து விட்டார். அவரால் எதுவுமே பேச முடியவில்லை. மணிவேலு கடைசியாகச் சொன்னான்.

''ஐயா நான் சொன்னதெல்லாம் உண்மை. உங்களோட மகள் யாருன்னு எனக்கு தெரியாது. என் தங்கச்சிக்கு நேர்ந்தது, அவங்களுக்கும் நேரக்கூடாது. ஒருத்தன் குடிகாரனா, திருடனா இருக்கலாம். ஆனா, பெண்ணோட மானத்தோட விளையாடுற கயவ்னா மட்டும் இருக்கக் கூடாது. நான் இவ்வளவு தூரம்சொல்லியும், நீங்க இந்தக் கல்யாணத்தை நடத்த நினைச்சா, மணமேடையிலேயே மானத்தை வாங்கிடுவேன்.....''

மணிவேலு மனம் இப்போதுதான் ஆறுதலடைந்தது. அவன் நிம்மதியுடன் பஸ் ஏறினான். அவன் மறுபடியும் வீட்டுக்கு வந்த போது மாலை நேரமாகிவிட்டது. அடுத்தநாள் காலை மணிவேலு வேலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். கடந்த இரண்டு வாரமாக அவனால் ஒழுங்காக வேலைக்குச் செல்ல முடியவில்லை. அந்தளவுக்கு தங்கையின் இழப்பு அவனைப் பாதித்திருந்தது. காலை மணி எட்டிருக்கும். அப்போது வாசலில் ஓட்டோ ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து மதளா பரபரப்புடன் இறங்கினாள். மணிவேலு அவளை எதிர்பார்க்கவில்லை. இவள் எதற்காக இங்கே வருகிறாள்.

''வா மாதளா உள்ளே வா....''

''நான் அவசரமாகப் போகணும்.... மிஸ்டர் மணிவேலு, ஏன் இப்படிச் செய்தீங்க. என் அண்ணன் பாபு உங்களுக்கு என்ன கெடுதல் செஞ்சாரு. மணம் முடிச்சி மகிழ்ச்சியா இருக்கவேண்டிய எங்க அண்ணன், மனசுடைஞ்சி போயிருக்காரு. பொண்ணு வீட்டுக்குப் போய் நீங்கதான் எங்க அண்ணனைப் பத்தி ரொம்ப மோசமா சொன்னதாக கேள்விப்பட்டேன். கல்யாணம் நின்னுடுச்சி. அவமானத்தால பொண்ணு வீட்டுக்காரங்க ஊரையே காலி பண்ணிட்டு எங்கேயோ போயிட்டாங்க, ஏன் இப்படிச் செஞ்சீங்க.''

மணிவேலு ஆத்திரத்துடன் அவளைப் பார்த்தான். ''என் தங்கச்சியோட சாவுக்குக் காரணமானவனே உன் அண்ணன் தான்...''

''என்ன உளர்றீங்க... எதை வச்சி சொல்லுறீங்க...?''

''ஆதாரமில்லாமல் நான் எதையும் சொல்ல மாட்டேன்... இரு வாரேன்...''

அவன் உள்ளே சென்று அந்தக் கைப்பையை எடுத்து வந்தான்.

''இதோ பாரு, இது தான் சாட்சி. இந்தக் கைப்பையில உன் அண்ணனோட புகைப்படம் இருக்கே... நல்லாப் பாரு...''

கைப்பையைக் கண்ட மதளா அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

''ஐயோ... அவசரப்பட்டீங்களே... இது சர்மிளாவோட கைப்பை இல்ல, என்னோடது. சர்மிளா சாகிறதுக்கு ஒரு கிழமைக்கு முன்னால ரெண்டு பேரும் ஒரு கல்யாணத்துக்கு போயிருந்தோம். அப்போ சர்மிளா தன்னோட கைப்பையை எடுத்துவர மறந்துட்டா. மணமகளுக்கு மொய் பணம் குடுக்க அவகிட்ட பணம் இருக்கல்ல. அதுனால நான் அவகிட்ட என் கைப்பையைக் கொடுத்து தேவையான பணம் எடுத்துக் கிட்டு, கைப்பையைத் தரச்சொன்னேன். அவ பணம் எடுத்துக்கிட்டு கைப்பையை அப்புறமாக குடுக்கலாம்னு நினைச்சிக்கிட்டு தன்னோடையே வைச்சிக்கிட்ட. ஆனா நான் அவசரமாகப் போகவேண்டியிருந்தனால அவகிட்ட சொல்லிக்காம போயிட்டேன். அதுக்கப்புறம் நான் என்னோட மாமா ஒருத்தரோட கல்யாணத்துல கலந்துக்கப் போய் அங்கேயே தங்கிட்டேன். சர்மிளாவை அப்புறம் சந்திக்கல . கைப்பையும் மறந்துட்டேன். சர்மிளாவோட சாவுக்கு வந்தபோது தான் கைப்பை ஞாபகம் வந்திச்சி . ஆனா கவலையில கலங்கி நிற்கிற உங்ககிட்ட நான் அதை கேட்கத் தயங்கினேன்.

கடைசியில என் அண்ணனோட வாழ்க்கையே, இந்தக் கைப்பையால் நாசமாகும்னு நான் நினைக்கல. அதுல எப்பவும் என்னோட அண்ணனோட படம் இருக்கு. நீங்க இப்படியொரு அவசர முடிவு எடுத்து நெஞ்சில் நெருப்பையள்ளிக் கொட்டிட்டீங்களே.

மத்தவங்களுக்கு எந்நேரமும் உதவிகரமா, உறுதுணையா இருக்கிற எங்கண்ணன், இப்போ அவமானத்தால சிறகொடிஞ்ச பறவையா, மூலையில முடங்கிக்கிடக்காரு. உங்கா தங்கச்சி யோட சாவுக்கு யார் காரணம்னு எனக்குத் தெரியாது. ஆனா யாரோ செஞ்ச தவறுக்கு என் அண்ணன் தண்டணை அனுபவிக்கிறது எந்த விதத்துல நியாயம்... எதையும் தீரவிசாரிக்காம கண்ணுல பார்த்ததை மட்டும் சாட்சியா வச்சி, ஒரு மரத்தையே சாச்சிட்டீங்களே! இது நியாயமா ... சொல்லுங்க ... பதில் சொல்லுங்க.''

அவள் சத்தமிட்டு அழுதாள். மணிவேலு என்ன பேசுவது, எதைப் பேசுவதென்று ஒன்றுமே புரியாமல் நெருப்பில் விழுந்த புழுவைப்போல துடித்தான். தன்னுடைய அவசரத்தால் என்ன, எதுவென்று ஆராயாமல் எடுத்த முடிவினால், இப்போது, எதையும் பேச முடியாமல் தலை கவிழ்த்திருந்தான். அதுவரை கருமேகங்களுடன் மூடியிருந்த வானம் இப்போது சோவென மழையைப் பொழியத் தொடங்கியது.

(அனைத்தும் கற்பனையே)

சந்தோஷ சமாச்சாரம்

சந்தோஷமாக வாழமுடிவது மனிதனுக்கு இறைவன் அளிக்கும் மாபெரும் கொடை என்றே சொல்ல வேண்டும். கவலை இல்லாத மனிதனாக வாழ முடிவது எப்பொழுதுமே அற்புதமான அனுபவமாகத்தான் இருக்கும். மனதில் மகிழ்ச்சி பிரவாகமெடுக்க, ஒருவரால் புன்முறுவல் பூத்தபடி நடமாட முடிகின்றது என்றால், அவர் நிச்சயம் அதிஷ்டசாலியகத்தான் இருக்க வேண்டும். குறிப்பாக எமது சமூகத்தினருக்கு பல சுமைகள் பல ருபங்களில் வந்து சேர்வதால், சந்தோஷத்தையும், நிம்மதியையும் தொலைத்தவர்கள்தான் எம்மைச் சுற்றி அதிகமாக வட்டமிடுகின்றார்கள்.

பிரித்தானியாவில் New Scientist என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார்கள். இந்தச் சஞ்சிகை காலத்திற்கு காலம் பல ஆய்வுகளை மேற்கொண்டு, மனிதர்களின் குணங்களை நாடி பிடித்துப் பார்ப்பதுண்டு.

இந்தத் தடவை இவர்கள், உலகில் எந்த நாட்டவர்கள், அதிகமான சந்தோஷத்தோடு வாழ்கின்றார்கள் என்ற ஆய்வை நடத்தி இருந்தார்கள். அதுவும் உலக நாடுகள் பலவற்றை இவர்கள் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தினார்கள். மொத்தம் 65 நாடுகளைப் பரவலாக எடுத்து, இவர்கள் ஆய்வை நடத்தினார்கள்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் மக்கள்தான் அதிக சந்தோஷத்துடன் வாழ்கின்றார்கள் என்பதே இவர்கள் ஆய்வின் முடிவாக இருந்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடான ருமேனிய நாட்டு மக்கள்தான், அதிக அளவு அதிருப்தியோடு வாழ்ந்து வருகின்றார்கள். கிழக்கு ஐரோப்பிய நாட்டவர்களையும், ரஷ்யர்களையும் விட, மேற்கு ஐரோப்பியர்களும், இலத்தீன் அமெரிக்க நாட்டவர்களும் அதிக சந்தோஷத்தோடு வாழ்கின்றார்கள்.

சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்று இவர்கள் பட்டியல் போட்ட நாடுகளில், நைஜீரியாவைத் தொடர்ந்து வருவது மெக்ஸிக்கோ. மூன்றாவது இடம் வெனிசுலாவுக்கு. நான்காவது இடமும் எல் சல்வடோர் என்ற இலத்தீன் அமெரிக்க நாட்டுக்கு. கருபியன் தீவான பியூட்டோ றிக்கோ ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ளது.

இவர்கள் சந்தோஷவானிலே பறப்பது எமக்கு சந்தோஷம்தான். ஆனால், எந்த அடிப்படையில் இவர்களின் சந்தோஷம் அளவிடப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது அல்லவா? நாட்டுக்கு நாடு இது வேறுபடுகின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள். அவரவர் வாழ்வில் தனிப்பட்டரீதியாகக்கிடைத்த வெற்றிகள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றமை, குடும்ப அங்கத்தவர்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாகநிறைவேற்ற முடிந்தமைஎன்றபலகாரணிகள்சந்தோஷ அளவை கூட்டியோ குறைத்தோ வைத்து இருக்கின்றன.

தொழிற்சாலைகள் நிறைந்த நாடுகளில், இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து ஓய்ந்த காலம் தொடக்கம் இன்று வரையில் சந்தோஷ நிலை, பாரியளவு இருப்பதாகவும் இவர்கள் கண்டறிந்துள்ளார்கள். வருமானம் உயர்ந்து பெரிய மாற்றங்களைக் கண்டிருந்தாலும், இவர்களது குதூகல நிலை மாத்திரம் மாறாது இருப்பது வியப்பூட்டும் தகவல்தான்.

சந்தோஷமாக எப்படி இருப்பது?

நல்ல நண்பர்களை வைத்திருப்பதுடன் அவர்களை மதிக்கவும் மறந்து விடாதீர்கள். அதிகம் ஆசைப்படாதீர்கள். அதாவது ஆசைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். மத நம்பிக்கை இருப்பது அவசியம். யாருக்காவது எதையாவது நல்லது செய்யுங்கள். அடிக்கடி உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, உங்களைக் குறைவாக மதிப்பிட முயலாதீர்கள். நேர்மையான வழியில் உழைப்பை அதிகரிக்கும் வழியைப் பாருங்கள். நான்திறமைசாலி இல்லையே என்று மனம் நொந்து கொள்ளாதீர்கள். இதையெல்லாம் செய்ய முடிந்தால் சந்தோஷ வானில் நீங்களும் பறக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை உலுக்கிய



அனர்த்தம்

அடக்கி ஆளும் நாடுகளுக்கெதிராக, அடக்கப்படும் நாடுகள் கொந்தளித்து எழுவதும், போராட்டங்களில் ஈடுபடுவதும், தீவிரவாதச் செயல்கள் புரிவதும் வரலாற்றில் வழக்கமான விடயமாகிவிட்டது.

இந்த வகையில் ரஷ்யாவில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல் உலகையே கலங்க வைத்துவிட்டது.

தனிநாடு கோரிப்போராடும் ரஷ்யாவின் ஒரு பிராந்தியம் தான் செச்சினியா. செச்சினியப் பிரச்சினை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல.

பதின்மூன்று வருட காலமாகவே ரஷ்யாவுக்கு இருந்துவரும் பெரும் தலையிடி இது. சோவியத் யூனியன் காலப் பகுதியிலேயே செச்சினியா மிகத் தீவிரமாக அடக்கப்பட்டு வந்த நாடாகும்.

1991இல் சோவியத் யூனியன் உடைக்கப்பட்டபோது, செச்சினியாவும் ரஷ்யாவில் இருந்து தனிநாடாக விலகுவதாக அறிவித்தது.

இதனைப் பொறுக்க முடியாமல் ரஷ்யா செச்சினியா மீது படையெடுத்துச் சென்றது. இருப்பினும், தோல்வியடைந்த நிலையிலேயே ரஷ்யா தனது போர்ச் செயற்பாட்டை நிறுத்திக்கொண்டது.

செச்சினியர்கள் என்றால் தீவிரவாதிகள் என்ற மனநிலை ரஷ்ய மக்கள் மனதில் ஆழமாக வேருன்றி இருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே அண்மைய சம்பவம் அமைந்துள்ளது.

தமது தேவைக்காக மனித உயிர்களை ஈவிரக்கமின்றி கொலை செய்துவிடுமளவுக்குத் தற்போது மனிதாபிமானமற்ற செயல்கள் உலகெங்கும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. மனித உயிர்களை அரக்கத்தனமாகக் கொல்லும் இந்த நிகழ்வுகளால் உலகமே இன்று கதிகலங்கி நிற்கிறது.

அண்மையில் தென் ரஷ்யாவில் வடக்கு ஒஸ்டியாவிலுள்ள பெஸ்லன் நகரப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலில் 394 குழந்தைகள் பரிதாபகரமாக உயிர் இழந்துள்ளனர்.

இச்சம்பவமானது உலக நாடுகளையே வேதனைக்குள்ளாக்கும் விடயமாக அமைந்திருந்தது.

பெஸ்லன் நகரப் பாடசாலையை ஆயுததாரிகள் சுற்றி வளைத்துக்கொண்டனர்.

செச்சினிய விடுதலைக்காகப் போராடும் தீவிரவாதிகளே அவர்கள் எனப்பின்னர் தெரிவிக்கப்பட்டது.

மூன்று நாட்களாகத்தொடர்ந்த இந்தக் கடத்தல் நாடகம், ரஷ்ய அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலால் முற்றுப்பெற்றது.

திடீரெனப்பாடசாலைக்குள் நுழைந்த படையினர் அதிரடித்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு தாக்குதல் நடத்தி ஒரு மணித்தியாலத்துக்குள் பாடசாலை முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் இராணுவத்தினர் கொண்டு வந்தனர். பணயக் கைதிகளாக இருந்த பலரையும் அவர்கள் மீட்டெடுத்தனர்.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ரஷ்ய அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த போதே, திடீரெனத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது. ஆனால், காரணங்கள் தெளிவாகக்கூறப்படவில்லை.

இத்தாக்குதலில் முப்பது தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாமெனவும், அவர்களில் பத்துப் பேர் சண்டையில் உயிரிழந்துள்ளனர் எனவும் ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் கூறப்படுகிறது.

நானூறு பேர் மட்டுமே பணயமாக பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் என ரஷ்ய அதிகாரிகளால் முதலில் தெரிவிக்கப்பட்ட போதும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தப்பி வந்தவர்களால்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் மேலும் கூறுகையில் "ஆரம்பத்தில் தீவிரவாதிகள் எம்மை நன்றாகக் கவனித்துக் கொண்டாலும், சிறிது நேரத்தில் அவர்கள் போக்கில் மாற்றம் தென்பட்டது.

குடிப்பதற்கு நீர் கூடத் தரவில்லை. தண்ணீர்த்தாக மிகுதியால் பல மாணவர்கள் மயக்க முற்று விழுந்தனர். பலர் தாக மிகுதியால், தமது சிறு நீரையே பருக வேண்டிய துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்" எனநடந்தநிகழ்வுகளை வேதனையுடனும், விரக்தியுடனும் கொட்டித் தீர்த்தனர்.

இம்மோதலால்பாடசாலைக்கட்டடத்துக்குள் இரத்த வெள்ளமாகக்காணப்பட்டது. உடல்கள் ஆங்காங்கு சிதறிக் கிடந்தன.

அதிகமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முதுகுகளில் துப்பாக்கி பதம் பார்த்திருந்தன. அவர்கள் தப்பியோடிய வேளையில் தீவிரவாதிகள் அவர்களை நோக்கி வெறித்தனமாகச் சுட்டிருந்தனர். இச்சம்பவத்தில் காயமடைந்தோர் எண்ணிக்கை 650 ஆகக் காணப்படுகிறது.

தமது குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோரின் கதறல் காட்சிகளும், உறவுகளை இழந்த சொந்தங்கள் உடல்களை அடையாளம் காண முயன்ற காட்சிகளும் பார்ப்பவர்கள் கண்களில் கண்ணீரை வரவழைத்துச் சென்றன.

தீவிரவாதிகளிடமிருந்து பாடசாலைக் குழந்தைகளை மீட்கும் முயற்சியில் அதிரடித்தாக்குதல் நடத்திய இராணுவத்தின் செயற்பாட்டுக்கு, பல ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தீவிரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியதாலேயே உயிர்ச் சேதம் அதிகமாகியுள்ளதென பல்வேறு உலக நாடுகளும் சுட்டிக் காட்டியுள்ளன.

இதேவேளை இத்தாக்குதலை அதிரடிப் படையினர் ஆரம்பிக்கவில்லையென்றும், பாடசாலையைச் சுற்றி நின்ற பொதுமக்கள், தமது பொறுமை எல்லை மீறப்பெற்றவர்களாக முதலில் தீவிரவாதிகளை நோக்கித் தாக்கிய வேளை, தீவிர வாதிகளும் தாக்குதல் நடத்தினர் என்றும் அதனாலேயே பதில் தாக்குதலை அதிரடிப்படைகள் மேற்கொள்ள நேர்ந்ததெனவும் ரஷ்ய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இத் தீவிரவாதத் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் புஷ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயர், இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து ரஷ்ய அதிபர் புடின் மீது பத்திரிகைகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இப்பிரச்சினையை அவர் கையாண்ட விதம் குறித்து அந்நாட்டுப் பத்திரிகைகள் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

இந்தச் சம்பவத்துக்கு அதிபர் புடின், பாதுகாப்புப்படை, உள்துறை போன்றவைதான் பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவை கூறியுள்ளன.

இந்தச் சம்வத்துக்கு பொறுப்பேற்காது, 1991 இல் சோவியத் யூனியனை உடைத்தவர்களைக் காரணம் காட்டும் அதிபர் புடினை, ரஷ்யப் பத்திரிகைகள் வெகுவாகக் கண்டித்துள்ளன.

இதற்குப் பதிலளிக்கும் முகமாக, அதிபர் புடின் தொலைக்காட்சியில் கவலை தோய்ந்த முகத்துடன் உரையாற்றினார். "உலக நாடுகள் அனைத்தும் கண்டிக்கும் இந்நிகழ்வு, ரஷ்ய இராணுவப் படையினரின் கவனக்குறைவாயே ஏற்பட்டது. அத்துடன் ஆயுததாரிகளின் எச்சரிக்கையை ரஷ்யா அலட்சியம் செய்ததும் இவ்வாறானதொரு துரதிஷ்டமான நிகழ்வொன்று ஏற்படக் காரணமாகிறது." என்றும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின், தனது ரஷ்ய இராணுவம் பற்றிய கண்டனத்தை வெளியிடுவது இதுவே முதல் தடவை எனவும் கூறப்படுகியது.

இத் தீவிரவாதத்தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தவர்களில் மூன்று தீவிரவாதிகள் பிடிபட்டனர்.

தீவிரவாதிகளில் ஒருவர், அப் பாடசாலையில் கல்வி கற்ற முன்னாள் மாணவன் என்றும், ஆசிரியர்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக அவன் தனது கறுப்பு முகமுடியைக் கடைசிவரை அகற்றவில்லை எனவும் கூறப்படுகிறது.

பிடிபட்ட தீவிரவாதிகளில் ஒருவரை ரஷ்ய அரசு தொலைக்காட்சியில் காட்டியது.

"அல்லாஹ் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் உயிர் வாழ விரும்புகின்றேன்! அல்லாஹ் மீது ஆணை, நான் குழந்தைகளைச் சுடவில்லை." என்று அவர் கூறியுள்ளார்.

அவருடைய உச்சரிப்பு செச்னியர்கள் பாணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்புக் கொடுத்த அத்தீவிரவாதி மூலம், பல பயனுள்ள தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்கோரச் சம்பவத்தையடுத்து ரஷ்யாவில் செப்டெம்பர் 6, 7 ஆம் திகதிகளை துக்க தினமாக மக்கள் அனுஷ்டித்தனர்.

கிரம்ளின் அரண்மனை, நாடாளுமன்றம், அரசு அலுவலகக் கட்டடங்களில் அரைக் கம்பத்தில் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. அனைத்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன. தொலைக்காட்சியில் கூட பொழுது போக்கு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படவில்லை.

குழந்தைகளை இழந்த பல தாய்மார்களினதும்,தமது உறவினர்களை இழந்த சொந்தங்களினதும் வேதனைக் கதறல்களுக்கு மத்தியில் இறுதி ஊர்வலங்களும் இடம் பெற்றன.

உலகை ஆட்டிப் படைக்கும் தீவிரவாதம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ண முள்ளது.

இதனைச் சீர்செய்யும் வகை அறியாது உலக நாடுகள் திண்டாடும் இவ்வேளையில், தீவிரவாதத் தாக்குதலின் உச்சக் கட்டமான, மிகக் கொடுமையான தாக்குதலாக ரஷ்யாவில் இடம் பெற்ற சம்பவம் அமைந்துள்ளது.

பதின்மூன்று வருட காலமாகப் புரையோடிப் போய் புண்ணாகக் காணப்பட்ட ரஷ்யாவின் செச்சினிய விவகாரம், இன்று மிகப் பெரும் உயிர் இழப்புக்களை ஏற்படுத்தி உலகையே கலங்க வைத்துவிட்டது.

-தர்ஷனா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு- கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம்!

பகுதி 11

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்புவட்டம் மாதம்தோறும் பூரணை விடுமுறை தினத்தில் சமூக விஞ்ஞானத் துறைகள் சார்ந்த கருத்தரங்குத் தொடர்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தி வருகிறது.

கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் நகரில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் 'வடக்கு கிழக்கின் பேண் தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம்' என்னும் விடயத்தின் கீழ் சமூகவிஞ்ஞான படிப்புவட்டம் கருத்தரங்கை நடத்தியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வி.நித்தியானந்தன் அப்பொழுது ஆற்றிய கருத்துரையின் முதல் பகுதி, கடந்த வாரம் சுடர்ஒளியில் பிரசுரமாகி இருந்தது. இந்த வாரம் இரண்டாவது பகுதி பிரசுரமாகிறது தொகுத்து வழங்குபவர் யாழ்.ஆத்மா

வடக்கு – கிழக்கு பேண்தகு அபிவிருத்தியை எந்த அரசாங்கமும் கருத்தில் கொள்ளவில்லை. இதனால் இலங்கைத் தீவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு– கிழக்கின் பேண்தகு அபிவிருத்தியை கருத்தில் எடுக்காமல் விட்டதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய ஒரு அகநிலை மதிப்பீடு சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டு பிரச்சினைகளைத் துல்லியமாக இனங்கண்டு கொள்ள வேண்டும். வடக்கு – கிழக்கு பிராந்தியத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான ஒரு முதல் நிலைப் படிவத்தை (Blue Print) முன்வைப்பதாக இருந்தால் அவ்வாறான ஒரு அகநிலை மதிப்பீடு அவசியம்.

நான்கு பிரதான காரணிகள்

அபிவிருத்தி, வளர்ச்சி ஆகியவற்றை ஒன்றாகப் பார்த்தால் பொருளாதார மேம்பாடு என்று அதை அழைக்கலாம். அவ்வாறான பொருளாதாரமேம்பாடு எவ்வாறு ஏற்படலாம். பொருளியல் ரீதியாக பிரதானமான நான்கு காரணிகளில் அது தங்கியுள்ளது.

1. பௌதீக வளங்கள் – இயந்திர சாதனங்கள் போன்றன. வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்கள் என்று கூறலாம். எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான பௌதீக வளமாக செக்கு அமைகிறது.

2. மனித வளங்கள் – எம் எல்லோரையும் உள்ளடக்கும்.

3. இயற்கை வளங்கள் – எமது கடல், நிலம் போன்ற வளங்கள்.

4. தொழில் நுட்பம் – தொழில் நுட்பம் தான் இன்றைய பொருளாதார மேம்பாட்டின் முக்கிய கருவியென்றே கூறிவிடலாம்.

ஜப்பான் எப்படி பொருளாதார வல்லரசு ஆனது?

ஜப்பானில் பௌதீக வளங்கள், இயற்கை வளங்கள் பெருமளவில் இல்லை. ஆனால், அது அமெரிக்காவுடன் போட்டி போடக் கூடிய பொருளாதார வல்லரசாக மாறியமைக்கு அதன் தொழினுட்ப வளர்ச்சியே முக்கிய காரணமாகும். தொழினுட்பத்துக்கும் மனித வள மேம்பாட்டுக்கும் இடையில் ஒரு தொடர்பு உள்ளது. மனித வளம் மேம்பட்டுச் செல்ல, தொழினுட்பமும் கூடியளவுக்கு அபிவிருத்தியடையும். அதனூடாக பொருளாதார மேம்பாடு ஏற்படும். அந்தவகையில் தான் ஜப்பான் முன்னணியில் நிற்கிறது.

அமெரிக்கா இயற்கை வளங்களால் முன்னேறியது

ஏனைய நாடுகளைப் பெறுத்தவரையில் இயற்கை வளங்களும் கை கொடுத்துள்ளன. ஐக்கிய அமெரிக்கா இதற்கு ஒரு முக்கியமான உதாரணமாகும். ஜப்பானுடன் ஒப்பிடுகின்ற போது அங்கு எந்தவிதமான வேறு திறமைகளும் இருப்பதாகக் கூற முடியாது. மனிதவளம் பொருமளவுக்குத் திறமை பெற்றது என்றும், தொழினுட்பத்தை வளர்த்தது என்றும் கூற முடியாது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு என்று சவால்கள் எதுவும் இருக்கவில்லை.

சவால்கள் நிறைந்தால்தான் பெருளாதார வரலாறு ஆர்வம் மிக்கதாக இருக்கும். ஜப்பான் எவ்வாறு மனித வளங்களையும், தொழினுட்பத்தையும் வைத்துக் கொண்டு முன்னேறியது என்பது ஆர்வம் மிக்க விடயம். ஆனால், ஐக்கிய அமெரிக்கா இயற்கை வளங்களைக் கொண்டு முன்னேறிய நாடு ஆகும். அதற்காக அங்கு ஏனைய வளங்கள் முற்றாக இல்லை என்பது அல்ல.

வடக்கு - கிழக்கு தமிழினத்தின் மனிதவளம் ஏன் பயன்படவில்லை?

மனித வளம் மட்டும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்திவிட முடியாது என்பதற்கு நாங்கள்தான் சிறந்த உதாரணம். உலகில் மனித வளம் நிறைந்த இனங்களுள் நாங்கள் சிறப்பான இடத்தில் இருக்கிறோம். சில வாரங்களுக்கு முன்பு ஜி.சி.ஈ. (உயர்தரம்) பரீட்சை பெறுபேறுகள் வந்தபோது பெரும் வெற்றிகளைக் குவித்தது போன்ற எவ்வளவு பெரிய உணர்வுபூர்வமான சம்பவங்களை குடும்பங்களில் கண்டிருக்கலாம். அதற்குரிய காரணம் என்ன? உண்மையில் இந்த உணர்வுபூர்வமான நிலைக்குக் காரணம் மனித வளத்துக்கு கூடியனவான பங்களிப்புச் செய்யக்கூடிய சில மாணவர்களைத் தயாரித்துவிட்டிருக்கிறோம் என்பதாகும்.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பல் வைத்தியர்கள், மிருக வைத்தியர்கள் முதலிய பல்வேறு துறைசார்ந்தவர்களை வருடா வருடம் உருவாக்கியிருக்கிறோம். பலவகைகளில் தொழின்மை நிலைப்பட்ட பங்களிப்பைச் செய்திருக்கிறோம் என்பதை வெற்றியாகக் கொண்டாடியிருந்தால் அதில் ஒரு நியாயம் இருக்கிறது. எத்தனையோ வருடங்களாக வருடா வருடம் செய்து வருகின்றோம். அதன் மூலம் நாங்கள் மனித வளத்தைக் கூட்டிவிட்டிருக்கின்ற எல்லைக்கு ஓர் அளவு இல்லை. அத்தனை மனித வளக் கூட்டல்கள் உரியவகையில் உற்பத்தியாகப் பெயர்க்கப்பட்டிருக்குமாயின் எங்களைவிட வளர்ச்சி மிக்க சமூகம் இருந்திருக்க முடியாது. இந்த உயர்தரப் பரீட்சைக்கு ஊடாக மனிதவளத்தைமேம்படுத்துவதற்கு எவ்வளவு முதலீடுகளைச் செய்து அவர்களைக் கஷ்டப்பட்டு வெளியேற்றியிருந்தாலும் அவர்கள் எல்லோரும் தமது உயர்படிப்பையோ நிபுணத்துவக் கல்வியையோ பூர்த்தி செய்த பின்னர் வடக்கு கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் மனித வள மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்துள்ளனரா? அவர்கள் எல்லோரும் தமது பங்களிப்பைச் செய்திருந்தால் நாங்கள் அபிவிருத்தி நோக்கி கணிசமான அளவில் முன்னேறியிருக்க முடிந்திருக்கும்.

ஆனால், உண்மையில் அவ்வாறான முன்னேற்றம் எங்களிடம் இருக்கிறதா? இதிலிருந்து தெரிவது என்னவென்றால் மனித வளம் மட்டும் அபிவிருத்தியையோ, வளர்ச்சியையோ ஏற்படுத்திவிட முடியாது. மனித வளங்களை பௌதீக வளங்கள், எம்மிடமுள்ள இயற்கை வளங்கள் ஆகியனவற்றுடன் எவ்வாறு இணைக்கின்றோம்? அந்த இணைப்புச் சரியாக இருந்தால் உற்பத்தி தானே பெருகும். அபிவிருத்தி அடைந்த எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் அதுதான் நடக்கிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்ன செய்தன?

மனித வளத்தை ஜப்பான் கூடிய அளவு பௌதீகவளங்களுடனும், ஐக்கிய அமெரிக்கா கூடியளவு இயற்கை வளங்களுடனும், இங்கிலாந்து பௌதீக வளங்கள், இயற்கை வளங்கள் ஆகிய இருவகை வளங்களுடனும் இணைத்தே அபிவிருத்தியை முன்னெடுத்தன. அபிவிருத்தியடைந்த ஏனைய நாடுகளைப் பார்த்தாலும் இவ்வாறான இணைப்புக்களைப் பார்க்கலாம். அந்த இணைப்புச் சரியாக இருந்தால் உற்பத்திகளும், சேவைகளும் பொருத்தமான வகையில் வளரும். இதனையே ஆங்கிலத்தில் Marrying the Human Resources with the physicaland Natural Resources என்று கூறுவார்கள். மனித வளங்களை ஏனைய வளங்களுடன் பொருத்தமாக மணம் முடிப்பது என்பதே அதன் கருத்தாகும்.

எங்கள் நிலைமை என்ன?

நாங்களும் மனித வளங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். மனித வளங்கள் எல்லாம் எங்கே? எல்லாம் வடக்கு – கிழக்கு பிரதேசத்துக்குப் புறம்பாக வெளியாகவே உள்ளன. கொழும்பில் வள ஆளணியினர் சிலர் உள்ளனர். மிகுதி அனைவரும் வெளிநாடுகளில்.

நாங்கள் எவ்வளவு டாக்டர்களை உருவாக்குகின்றோம். ஆனால், சமூகத்துக்குரிய தேவைக்கு எத்தனை டாக்டர்கள் யாழ்ப்பாணத்திலோ, வடக்கு – கிழக்கின் ஏனைய பகுதிகளிலோ இருக்கிறார்கள். டாக்டர்கள் என்று கூறும் போது சாதாரண தகைமை பெற்றவர்கள் மட்டுமல்ல. விசேட நிபுணர்களாக உள்ளவர்கள் இங்கே எத்தனை பேர் உள்ளனர். என்ன என்ன தகைமைகள் மருத்துவத்துறையில் இருக்கின்றன, அவை எல்லாவற்றிலுமே பாண்டித்தியம் பெற்ற தமிழர்கள் உலகின் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். இந்த அளவுக்கு இருந்தும் எங்கள் மருத்துவத்துறை வளர்ச்சி எங்கே போய்விட்டது? சமூக அபிவிருத்தி இங்கே ஏற்படவில்லை. மனித வளம் மட்டும் அபிவிருத்தியை ஏற்படுத்தி விட மாட்டாது. அதனை உரியவகையில் ஏனைய வளங்களான பௌதீக வளங்கள், இயற்கைவளங்களுடன் இணைக்கவேண்டும்.

குறுக்குவழிகள் சமூகத்துக்குப் பயன் தருமா?

இங்கு எவரைக் கேட்டாலும் 'கொம்பியூட்டர் படித்தால்தான் வேலை கிடைக்கும், ஆங்கிலத்தில் கல்வியூட்டல் செய்தால்தான் வேலை கிடைக்கும்' என்று சொல்லுவார்கள். இவையெல்லாம் தான் வேலையைத் தருகின்றனவா? அவையெல்லாம் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான சில குறுக்கு வழிகளே தவிர, அவை உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய வேலைகளை இங்கு கொடுக்கப் போவதில்லை. நாங்கள் எங்களுடைய வளங்களை இவற்றுடன் இணைப்பதால் தான் உற்பத்தியையும் வேலை வாய்ப்புக்களையும் பெருக்கலாம் தவிர, குறுக்கு வழிகளில் மட்டும் அல்ல.

யாழ்ப்பாண இராச்சிய காலப் பொருளாதாரமும் அதன் வீழ்ச்சியும்

அவ்வாறானால் எங்கே தவறு நிகழ்ந்திருக்கிறது. யாழ்ப்பாண இராச்சிய காலத்தை எடுத்துப் பார்த்தால் மனிதவளமும், உற்பத்தி வளங்களும் இணைக்கப்பட்ட ஒரு பொருளாதாரக் கொள்கை இருந்துள்ளது. இன்றைய பருநிலைப் பொருளாதாரம் (Macro Economic) சார் கொள்கையளவுக்கு செழுமையுள்ள அல்லது சீர்திருந்திய ஒன்று என்று அதனை வாதிட முடியாது என்றாலும், அதனுடைய சில சாயல்களை நாங்கள் நிச்சயமாக அங்கு காணமுடியும்.

உற்பத்தியை அதிகரித்தால் தான் அரசாங்கம் வரியாக வருமானத்தை கூட்டமுடியும். இன்று அரசாங்கம் வருமானமின்றி திணறுகிறது என்றால் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியமையே காரணமாகும். உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இன்றைய நிலையில் நீங்கள் வன்னியில் கிளிநொச்சிக்குச் சென்றால் தெரியும். விடுதலைப்புலிகள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் முயற்சிக்கிறார்கள் என்பதை அங்கு தரிசிக்கலாம்.

அரச அக்கறையை இழந்த வடக்கு - கிழக்கு!

யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியுடன் மனித வளம், பௌதீக வளம், இயற்கை வளம் என எல்லாமே அரச வரையறை அல்லது அரச அக்கறை என்பதற்கு அப்பாற்பட்டு போய்விடுவதை நாங்கள்பார்க்கிறோம். போர்த்துக்கேயர் யானை, முத்து போன்றவற்றில் அக்கறை காட்டினர்;

ஒல்லாந்தரின் முழு அக்கறையும் கறுவாவில் தான் இருந்தது. பிரித்தானியர் கோப்பி, தேயிலை, இறப்பர் போன்றவற்றில் அக்கறை செலுத்தினர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் அக்கறைப்பட்ட உற்பத்திப் பொருட்கள் வடக்கிலும், கிழக்கிலும் பெரும்பாலும் இருக்கவில்லை. அந்நியர் ஆதிக்கம் இலங்கைத் தீவில் காலூன்றிய போது வடக்கு கிழக்கில் காணப்பட்ட ஏனைய வளங்களுக்கு என்னநிகழ்ந்தது? இங்கிருந்த மனித வளங்களுக்கு என்ன நிகழ்ந்தது? இங்கிருந்த இயற்கை வளங்களுக்கு என்ன நிகழ்ந்தது? அந்நியர்கள் எங்களைக்கைவிட்டுவிட்டார்கள். என்பதனால் நாங்கள் மனித வளங்களையும், இயற்கை வளங்களையும் இணைக்காமல்இருக்க முடிவில்லை. எங்கள் வளங்களை நாங்களேதான் முகாமைசெய்யவேண்டியிருந்தது. அதன் மூலம் எங்களுக்குரிய உற்பத்திகளைப் பெற வேண்டியிருந்தது.

அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் வடக்கு – கிழக்கில் என்ன செய்தோம்? எங்கு எங்கு இந்த வளங்களைச் சுலபமாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்ததோ, அங்கெல்லாம் வளங்களை இணைத்து உற்பத்திகளைச் செய்தோம்.

வளங்களை ஒருங்கிணைக்க அரச உதவி கிடைத்தா?

யாழ்ப்பாணக் குடாநாட்டை மட்டுமே நாங்கள் எடுத்துப் பார்த்தால், பயன்படுத்தக் கூடிய நிலப்பகுதியில் மட்டும் தான் எல்லாமே உள்ளது. நாங்கள் வீடுகளையும் பண்படுத்தக்கூடிய வளமான நிலங்களில் தன் கட்டியிருக்கிறோம்; கல்விக் கூடங்கள், பல்கலைக் கழகம் போன்ற கட்டடங்களையும் அவ்வாறான நிலங்களில்தான் கட்டியிருக்கிறோம். இன்று அரசாங்கப் படையினர் உயர் பாது காப்பு வலயம் என்று கையகப்படுத்தி வைத்திருக்கும் நிலப்பகுதி கூட பண்படுத்தக் கூடிய வளமான மண்தான். எஞ்சியிருக்கும் வளமான நிலத்தைக் கூட பொருளாதார சிக்கனமற்ற முறையில் துண்டு துண்டுகளாகப் பிரித்து சந்ததிகளுக்குக் கொடுத்து வருகிறோம்.

சீதனமுறைமை இதற்கு ஒரு காரணமாகும். எங்களுடைய பொருளாதார சமூக வாழ்க்கையில் யாழ்ப்பாணத்தில் பார்த்தால் நிலவளத்துக்கும் அதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை அவதானிக்கலாம். பருத்தித்துறை வீதியூடாகப் பயணம் செய்தால் சில மைல்கள் செல்ல வல்லை வெளி நருகிறது.

அங்கு ஏதும் அபிவிருத்தி இத்தனை காலத்தில் நடந்துள்ளதா? கோப்பாயூடாகப் போனால் கோப்பாய் – கைதடி வெளி வருகிறது. அங்கு ஏதும் அபிவிருத்தி நடந்துள்ளதா? யாழ்ப்பாணத்தின் தீவுகள் எல்லாவற்றையும் பாருங்கள்! எவ்வித அபிவிருத்தியும் நிகழவில்லை. காரைநகருக்குச் செல்லுகின்றபோது கல்லுண்டாய் வெளி வருகிறது. அங்கு ஏதாவது நிகழ்ந்திருக்கிறதா? அந்தக் காலம் தொடக்கமே அவையெல்லாம் இருந்தவாறே இருக்கின்றன. அபிவிருத்தி எங்கே? வளர்ச்சி எங்கே? வளங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கங்களின் உதவி கிடைத்ததா?

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

-யாழ். ஆத்மா-

'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

அளவு	கறுப்பு/வெள்ளை	கலர்
முழுப்பக்கம்	ரூ.30,000.00	ரூ. 45,000.00
அரைப்பக்கம்	ரூ.15,680.00	ரூ. 23,520.00
C.M.	ரூ. 98.00	ரூ.147.00
Page Specified C.M.Cl	ரூ.122.50	ரூ. 183.75
Contract ADV.	ரூ. 70.00	ரூ. 110.00
(250-300 Col. Cms)		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அம்பலம்

மும்மொழியும் சமம் என்று பேச்சு மேடையிலே எல்லாம் போச்சு

ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கையிலும் இறுதிவரை மறக்க முடியாத ஒரு நாள் தான் கல்லூரிப்பட்டமளிப்பு விழா. உற்றார், பெற்றோர், படிப்பித்த ஆசான்கள் மத்தியில் பட்டம் பெறும்போது ஏற்படும் ஆனந்தமும், பெருமிதமும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை.

அப்படியான ஒரு வைபவத்தில் விழா நிகழ்வுகள், தமது தாய் மொழியில் இடம்பெற்றால் அதன் மகிழ்ச்சியே தனியானது தான்.

அண்மையில் சப்பிரகமுவ பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா(சிறப்பாக) நடைபெற்றது. அங்கு தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என மூன்று சமூகங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாகவே கல்வி பயில்கின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று.

பட்டமளிப்பு விழாவுக்கு நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஆனால், விழா நிகழ்வுகள் அனைத்தும் தனிச்சிங்களத்திலும் இடைக்கிடை ஆங்கிலத்திலும் இடம்பெற்றனவாம். இரண்டாம் மொழியாகவும், அரச கரும மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழிக்கு அங்கு இடமே இல்லையாம்.

உரைகளில் பெரும்பகுதி ஆங்கிலத்திலேயே இடம்பெற்றனவாம். முக்கிய அறிவித்தல்களும் அப்படியே.

இப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுள் 80 வீதமானோர் பின் தங்கிய கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்களே! அங்கிருந்து வரும் பெற்றோர் எல்லோருமே ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்று எடை போடக்கூடாது.

நிகழ்வுகளும், பேச்சுக்களும் தனியாகச் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே நடைபெற்றதால், தமிழ்ப் பெற்றோர்களுக்கு அங்கு என்ன நடைபெறுகின்றது, என்ன பேசுகின்றார்கள் என்பதே புரியவில்லையாம். இறுதியாகப் பட்டம் பெறும்போது தமது பிள்ளைகளின் பெயர்களைக் கூறி அழைத்தது மட்டும் தான் புரிந்ததாம்.

மேடையில் மட்டும் அல்ல, கல்லூரியில் நடைபெறும் கூட்டங்களும், கலந்துரையாடல்களும் கூட புரியாத மொழியில் தான் நடைபெறுமாம். அங்கே தமிழ் மொழிபெயர்ப்புக்கு இடமில்லையாம்.

அரசும், கல்வி அமைச்சும் ஏன் இப்படித் தமிழ் மொழியைப்புறக்கணிக்கின்றன என்பது தான் புரியாத புதிர். சிங்கள மொழிக்குரிய சகல அந்தஸ்துகளும் தமிழ் மொழிக்கும் உண்டு என்பது வெறும் பேச்சளவில் மட்டுமே. ஆனால், நடைமுறையில் இல்லை. எதிர்காலத்திலாவது இப்படியான முக்கிய நிகழ்வுகளில் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது ஆதங்கம்.

ஐயோ பாவம் ஆறுமுகசாமி அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டார்

என்ன தான் இருந்தாலும் இந்தத் தம்பிக்கு இப்படி ஒரு அவசரம் கூடாது. அதைத் தாறோம், இதைத் தாறோம் என்று ஆசை காட்டிவிட்டு, அம்போ என்று விட்டுப்புட்டாங்க.

இரண்டு பேருக்கும் இடையில் தப்புத் தாளம்போட்டுக்கொண்டிருந்த மங்கள மேளத் தாரும்ஒதுங்கிக்கொண்டாராம்.

வேற என்னங்க செய்யிறது. கட்சியில பிரதமர் உட்பட எத்தனையோ பெரிய மூத்த தலைவர்கள் எல்லாம் இருக்க, இந்த ஆறுமுகனார் மங்கள மேளத்தாருக்குப் புகழ்பாடிக் கடிதம் எழுதிப் போட்டாராம்.

இப்ப என்ன நடக்குது என்றால், நாங்கள் எவரும் எங்களுடைய அமைச்சுகளைப் பங்குபோட்டுக் கொள்ளத் தயாராக இல்லை. வேண்டுமானால் மங்களத்தாரை கொடுக்கச் சொல்லுங்கள் என்று அடம் பிடிக்கின்றனராம்.

தன்னிச்சையாகத் தானே வந்தாய், நாங்கள் தருவதைப் பெற்றுக் கொள். இல்லையேல் வாலை மடக்கிக் கொண்டு இரு என்று சிரேஷ்ட அமைச்சர்கள் கூறுகின்றனராம்.

சுகவீனப்பட்டிருக்கும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி. ஆரின் ஆசனத்தையாவது ஆட்டப் பார்த்தனராம். ஆனால் அவரோ ஆசனத்தைக் கேட்டால் கட்சிக்கே முழுக்குப் போட்டுவிடுவேன் என்று மிரட்டுகின்றாராம்.

தம்பியாரும் அதி உயர் அம்மணியிடம் இரண்டு முறை காவடி எடுத்துப் பார்த்தும்விடயம் கைகூடவில்லை. கடைசியில் அம்மணி பார்க்கவே நேரம் ஒதுக்கவில்லையாம்.

ஆறுமுகத் தம்பியார் யானைக்கும், வெற்றிலைக்கும் இடையில் டபிள் கேம் அடிக்க முனைந்தார். இப்போ ரெண்டும் கெட்டனாகிவிட்டார்.

கடைசியாகக் கிடைத்த தகவல், காதர் ஹாதியாரின் கதவைத் தட்டியவர்கள் தம்பியாரின் கதவையும்தட்டப்போகின்றார்களோ என்ற பீதி ஏற்பட்டுள்ளதாம்.

கன்னிவேட்டையில் கண்ணன்கள் அதிலும்ஒரு சாதனை

அலுவலகத்தில் பணிபுரிபவர்களாகட்டும், இல்லை அங்கத்தினர்களாகட்டும் எவரையும் மரியாதைக் குறைவாகப் பேசுவதில் முத்தரும், தம்பியாரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்பதில்லை. உதாரணமாக 'வாங்க', 'நீங்க' என்ற பதங்களை உச்சரிக்கும் போது,இவர்களுடைய வாயில் மட்டும் "ங்க" என்ற இரண்டு எழுத்துகள் நுழைவதே இல்லையாம். அதைமுத்தர் அப்பட்டமாகவேசொல்லுவாராம்.எனக்குளென்னமோ அந்த 'ங்க' என்ற இரண்டு எழுத்துக்களும் சின்னக் காலத்தில் இருந்தே வாயில்வருவதில்லை என்றுபெருமையாகக் கூறிக்கொள்வாராம்.

இப்படி அலுத்துக் கொள்கிறார் அண்மையில் தம்பியாரிடம் செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண்ட இராகமார்த்தாண்டன்.

அது போகட்டும், துச்சாதனனாகதுயில் உரிதலும், கண்ணனாக லீலா வினோதம் புரிவதிலும் இருவருமே சாதனை படைக்கின்றனராம்.ஒருவர் என்னடா என்றால், இலங்கையிலும், இந்தியாவிலும் குட்டி நடிகைகளை தட்டிப்பார்த்து ருசிக்கின்றனராம்.

மற்றவரோ, நான் ஏன் கையில் கனியை வைத்துக்கொண்டு தேடி அலைய வேண்டும் என்று இராகலை முதல் வட்டவளை வரை வரிசையாகச் சின்ன வீடுகளைக்கட்டிச் சாதனைபடைக்கிறாராம்.

அண்மையில் சின்னவர் தனது வாரிசிடம் வளமாக மாட்டிக்கொண்டு, இனிமேல் அப்படி இல்லை என்று வாரிசிடம் கையில் அடித்துச் சத்தியம் செய்தாராம்.

அந்தச் சூடு மாறும்முன் ஹைதராபாத் அழகி விடயம் அம்பலமாகிவிட்டதாம். எப்படி இருக்கு இந்த அரசியல்வாதியின் சத்தியம்?

விற்பனைக்கு

80 LANA 124

நல்ல நிலமையில் உள்ள Printing மெசின் ஒன்று விற்பனைக்கு உள்ளது.

விலை ரூபா 1,50,000/=

விபரங்களுக்கு:-
Maria Printers
116 B, Reclamition Road,
Colombo - 11.
Tel: 2392837

தொடர் மாடி வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட தொடர்மாடி வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

- 3 BED ROOMS ATTACH BATH ON THE FIRST & SECOND FLOOR
- COMPLETE WITH ALL FACILITIES INCLUDING AIR CONDITIONERS
- TILES FLOORS
- HOT WATER
- QUALITY SANITARY WARE FITTINGS
- CAR PARKING
- ROOF GARDEN
- 24 HOURS SECURITY ETC

மேலதிக விபரங்களுக்கு
0777-803146 என்ற
தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

முதலாவது பிறந்ததின வாழ்த்து

நெல்லியடியைச் சேர்ந்த
ஸ்ரீ சிவநாதசர்மா - அனுசுயா
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
செல்வி
அம்சவர்த்தனா

11.09.2003

தனது முதலாவது பிறந்த தினத்தை பாண்டியன்குளத்திலுள்ள தனது வதிவிடத்தில் வெகுசிறப்பாக கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தப்பா, சித்தி, அன்பு அண்ணா ஹரிஸ், ஆசை அக்கா ஹரினி, குட்டி அண்ணா சோபன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பாண்டியன்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் அருளோடு பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்
சித்தப்பா, சித்தி (நாதன், ரேனு)
சிவபுரம், வவுனிக்குளம்.

பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்ினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்படடு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...	கல்முனையில்..
செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம் New Ahmed Turist Inn, Bang Bang Building 10 - 1/A, Bankshall Street, Colombo - 11. TEl No. 5368426, 368427, Cell. 0722 910796 Hot Line: 0777 569205	ஒக்டோபர் 02 - 03 திகதிகளில் சந்திக்கலாம் T.M.M. பாமசி கல்முனை Tel No. 067 2229329 Hot Line: 0777 569205

வவுனியாவில்...	யாழ்ப்பாணத்தில்...
செப்டெம்பர் 10 - 11 ஆம் திகதிகளில் Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு வவுனியா, Tel No. 024 2222074 Hot Line: 0777 569205	செப்டெம்பர் 14 - 18 A.S.N. சுற்றுலா விடுதி 392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் Hot Line: 0777 569205 Tel No. 021 2223181 021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்

ரூபா.275/- தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1500/-

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 275/-

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 2421398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

செப். 12 – 18, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

யதார்த்த நிலையை புரிந்து கொள்ள வேண்டும்

பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பணியகத்தின் தலைவரான ஜே.கோபர் ப்ளெக் இலங்கை வந்துள்ளார்.

இவர் இராஜாங்க திணைக்களத்தின் பயங்கரவாதத்துக்கு எதிரான ஒருங்கிணைப்பாளராக 2002 டிசெம்பரில் இருந்து பணியாற்றிவருகிறார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படும் அமெரிக்காவின் முன்னணி முகவர் நிலையமாக இராஜாங்க திணைக்களம் இருந்து வருகிறது.

ஆகவே கோபர் ப்ளெக்கின் விஜயம் முக்கியமானதாகவே கருதப்பட்டது.

ஆனால், வழமை போன்று பழைய பல்லவியையே இவரும் பாடுவதுதான் ஏமாற்றம் தருகிறது.

புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதை சொல்லிலும் செயலிலும் காட்ட வேண்டும் என்று கோபர் ப்ளெக் இலங்கை வந்ததும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசுடன் தெளிவான, சாதகமான இணக்கப்பாட்டுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பு வரவேண்டும். அதுவரை வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து அந்த அமைப்பின் பெயரை நீக்க முடியாது என்றும் அவர் கூறி இருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினையின் யதார்த்த நிலைமையை அமெரிக்கா இன்னும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இலங்கைக்கு வந்து செல்லும் எந்த ஒரு அமெரிக்க உயர் அதிகாரியாவது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்குவது குறித்து இதுவரை ஆக்கபூர்வமான ஆலோசனை எதனையும் தெரிவிக்கவில்லை. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நிலைமையே இருந்து வருகிறது.

தனிநாடு, தமிழீழம் என்று கூறிவந்த விடுதலைப்புலிகள் தற்பொழுது அவற்றை எல்லாம் ஒரு புறம் தள்ளிவைத்து விட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வு ஒன்றுக்கு இணங்கி இருக்கிறார்கள்.

அதுமட்டும் அல்ல கடந்த இரண்டு தசாப்த காலப் போராட்டத்தில் முதல் தடவையாக தீர்வு யோசனை ஒன்றை ஆவணமாக வெளியிட்டிருக்கிறார்கள். அந்த யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதே புலிகளினது மட்டும் அல்ல முழு தமிழ்ச் சமுதாயத்தினதும் கோரிக்கை. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உண்மையில் பின்னடிப்பது அரசுதான்.

கடந்த ஆண்டு நவம்பர் முற்பகுதியில் புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் கையளித்த கையோடேயே ஜனாதிபதி அதற்கு முட்டுக்கட்டை போட ஆரம்பித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் மூன்று அமைச்சுப் பதவிகளைப் பறித்தது, நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தியது எல்லாம் இவற்றின் தொடர் நிகழ்வுகளே.

தற்பொழுது இனவாதக் கட்சியான ஜே.வி.பியின் தயவில் முற்றுமுழுதாகத் தங்கி இருந்து கொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை உடைக்க முடியாத நிலையில் ஜனாதிபதி தடுமாறுகிறார்.

புலிகள் சொல்லிலும் செயலிலும் தாம் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதை மிகவும் தெளிவாகவே காட்டி வருகின்றனர்.

கிழக்கில் புலிகளுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் ஆத்திரமூட்டும் சம்பவங்கள், தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் புலிகள் யுத்த நிறுத்தத்தைப் பேணுவது புலிகள் சமாதானத்தில் வைத்துள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது. ஆகவே அமெரிக்கா யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத எந்த தீர்வையும் புலிகள் ஏற்க மாட்டார்கள் என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும். பயங்கரவாதம் பற்றிப் பேசும் அமெரிக்கா, ஈராக்கில் தான் என்ன செய்கிறது என்பதை மறந்து விட்டது.

அபாயகரமான நகர்வு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்கும் முயற்சியில் நோர்வே மீண்டும் இறங்கியுள்ளது. நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 13ஆம் திகதி இலங்கை வருகிறார்.

சொல்ஹெய்மின் முன்னைய வருகைகளின் போது அரசு சிறுபான்மை அரசாக இருந்தது. சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்ல முடியாததுக்கு அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லாததும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது இ.தொ.காவின் ஆதரவு காரணமாக அந்த நிலைமை மாறிவிட்டது. ''மீண்டும் யுத்தம் வராது. இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கிட்டும்'' என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இப்படியான நிலையில், சமாதான முயற்சிகளை பின் தள்ளும் சம்பவங்கள் தொடர்வது தான் வேதனை அளிக்கிறது. அரசின் இரட்டை வேடத்தை எடுத்துக் காட்டுகிறது.

மட்டக்களப்பு, புல்லுமலையில் உள்ள புலிகளின் நிலை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் புலி உறுப்பினர்கள் இருவர் காயம் அடைந்துள்ளனர். புலிகள் திருப்பித் தாக்கியதில் தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஆயுதம் தரித்த துணைப்படையின் உதவியுடன் இராணுவக் கொமாண்டோக்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று புலிகள் குற்றஞ் சுமத்தியுள்ளர்.

தாக்குதல் நடத்தியவர்கள் அடுத்து உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான திம்பிட்டிய இராணுவ முகாமை நோக்கித் தப்பிச் சென்றதற்கான நேரடிச் சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புல்லுமலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி. மட்டக்களப்பு நகரில் இருந்து 65 மைல் தூரத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சமீபமாக இருக்கிறது. ஏ–5 வீதியில் உள்ள புலிகளின் கடைசிநிலையே தாக்கப்பட்டுள்ளது.

துணைப்படையின் உதவியுடன் ஊடுருவிய ஆயுததாரிகள், தமது நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் தமது தரப்பில் இருவர் காயம் அடைந்தனர் என்றும் தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் உயிரிழந்தனர் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

கருணா விவகாரத்தை அடுத்து கிழக்கில் புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். போராளிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்தத் தொடரில் இறுதியாக நடந்த சம்பவம் தான் புல்லுமலைச் சம்பவம்.

இதற்கு முன்னர் மட்டக்களப்பு, காயங்கேணி இராணுவ முகாமுக்குச் சமீபமாக புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டனர். வழமையான இராணுவப் பரிசோதனையை முடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம் கிளைமோர்த் தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட்டனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஜூன் மாதம் மட்டக்களப்பு தன்னாமுனையிலும் புலிகளின் இரு உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் சுட்டுக்கொல்லப்பட்டனர். புலிகளின் ஊனமுற்ற போராளிகள் தங்கியிருந்த முகாம் ஒன்றும் முன்னர் தாக்கப்பட்டு சிலர் உயிரிழந்தனர்.

கிழக்கில் படையினரின் உதவியுடன் துணைப்படையினர் நடத்தும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று புலிகள் அரசுக்கு அடிக்கடி எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

அரசு மறுத்தாலும், தாக்குதல் நடத்துபவர்கள் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் தப்பிச் செல்வதில் இருந்து படையினரின் பங்கு இதில் தெரிகிறது.

புல்லு மலையில் தாக்குதல் நடத்தியவர்கள் காயம் அடைந்த தமது சகாக்களை ஏற்றிச் செல்ல 'மக்' கண்ணி அகற்றும் ஊழியர்களை அழைத்துச் சென்றதால் தாக்குதல் நடத்தியோர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வந்தது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

'மக்' கண்ணி அகற்றும் நிறுவனம் ஒரு பிரிட்டிஷ் நிறுவனம்.

தாக்குதல் நடத்தியோரால் அழைத்துச் செல்லப்பட்ட 'மக்' ஊழியர்களை திம்பிட்டிய இராணுவ முகாமுக்கு மிகவும் சமீபமாக வைத்து திருப்பி அனுப்பிவிட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புத் தலைவரிடம் முறையிடப்பட்டதை அடுத்து கண்காணிப்புக்குழுவின் விசாரணைகள் ஆரம்பமாகி உள்ளன.

தமிழ்த் தேசியத்துக்குப் பெரும் துரோகம் செய்த கருணா, தனது சகாக்களை கைவிட்டு விட்டு வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்று விட்டார். எஞ்சியுள்ள அவரது ஒரு சில சகாக்களை இராணுவம் பயன்படுத்துவது பெரும் ஆபத்தான சமிக்ஞை ஆகும்.

''அபாயகரமான நகர்வு, சம்பவம் குறித்து ஆராய்ந்து வருகிறோம்.'' என்று புல்லுமலைச் சம்பவம் குறித்து மட்டு– அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்திருப்பது நிலைமை மோசமடைந்து வருவதைக் காட்டுகிறது. விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

-சஞ்சாரன்-

பிசுபிசுத்துப் போன கிழக்கின் உதயம்

17 வருடங்களுக்கு முன்பு இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தனித்தனியே பிரித்து விடுமாறு கோரி கடந்த முதலாம் திகதி கல்முனையில் இடம்பெற்ற 'கிழக்கின் உதயம்' எனும் பெயரிலான பிரகடன மாநாடும், ஆர்ப்பாட்டப் பேரணியும் பிசுபிசுத்துப்போன விவகாரம் பேரினவாதிகளுக்குப் பலத்த அடியைக் கொடுத்திருப்பதோடு, தமிழ் – முஸ்லிம் உறவுக்குக் கட்டியமும் கூறியுள்ளது.

இலங்கையில் நிலவி வருகின்ற நீண்ட கால இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான தமிழ்ச் சமூகத்தின் அபிலாஷைகளுள் மிகப் பிரதானமாக முன்வைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாகவே இவ்விரு மாகாணங்களும் தற்காலிகமாக இணைத்து விடப்பட்டன.

இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகிய இருவரும் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் ஒரு வருடத்திற்கு எனத் தற்காலிகமாக இணைக்கப்பட்டன.

இதன்படி, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையில், வடக்கு – கிழக்கு இணைந்த மாகாணத்திற்கு ஒரே அலகாகக் கொண்ட மாகாண சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

இம்மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்று ஒரு வருடத்தில், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமா? அல்லது தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா எனக் கோரும் சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன முரண்பாட்டுத் தீர்வின் அடிப்படை

இவ்வாறு ஒரு வருடத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள போதிலும், 17 வருடங்களாகியும் அதற்கான பிரகடனம் வெளியிடப்படவில்லை. ஒவ்வொரு வருடத்தில் டிசம்பர் மாதத்திலும் தற்காலிக இணைப்பை நீடிப்பதற்கான பிரகடனமே ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளான ஆர்.பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க ஆகியோரும், தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் விரும்பியோ, விரும்பாமலோ இணைப்பை நீடிக்கும் பிரகடனத்தையே வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது, இருந்து வருகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டும் முயற்சிகளுக்கு, வடக்கு – கிழக்கு இணைப்பு என்கின்ற விடயமே அடிப்படையானதாகும். இப்புறச்சூழ் நிலையில் அம்முயற்சிக்குக் குறுக்காகவோ, குந்தகமாகவோ எந்தவொரு அரசோ, ஜனாதிபதியோ செயற்பட முடியாது.

இதனை ஜே.வி.பி, ஹெல உறுமய உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் நன்குணர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அதனாலேயே வடக்கு – கிழக்கைப் பிரிக்க வேண்டும் என அக்கட்சிகள் ஒற்றைக்காலில் நிற்கின்றன. அதன் மூலம் இன முரண்பாட்டை மேலும்

சிக்கலாக்கவே அவை முயற்சிக்கின்றன.

ஆடு நனைகிறது என ஓநாய் அழுத கதையாகவே, முஸ்லிம்கள் மீதான ஜே.வி.பி.யின் அனுதாபம் உள்ளது. வடக்கு – கிழக்கு இணைப்பைத் துண்டிக்க வேண்டும் என ஜே.வி.பியினர் கோரும் விவகாரத்தை ஓநாயின் கதைபோன்றே நோக்கவேண்டியுள்ளது.

முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு

1987 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்துடன், கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்ட போது, அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் அபிலாஷைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இணைப்புக்கான இலங்கை – இந்திய ஒப்பந்தம் முஸ்லிம் சமூகத்தின் முதுகில் எழுதப்பட்ட அடிமைச்சாசனம் என்று அப்பொழுது முஸ்லிம்களினால் வர்ணிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு ஒன்றிணைப்பினால் கிழக்கில் 37 வீதமாக இருந்த முஸ்லிம்களின் விகிதாசாரம் 15 வீதமாக வீழ்ச்சி அடைந்து விட்டது என்பதே இவர்களின் பிரதான குற்றச்சாட்டு.

இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்பு, தீர்வுப் பொதியில் முஸ்லிம் தன்னாதிக்க அதிகார அலகு, இடைக்காலத் தீர்வில் தனியான தன்னாட்சி அதிகார சபை என்பவற்றை முஸ்லிம்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவே முஸ்லிம் புத்திஜீவிகளும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நுஆ, துஆ, போன்ற முஸ்லிம் கட்சிகளும் முயற்சி செய்து வருகின்றன.

இப்போதைய சூழ்நிலையில் தமிழ் சமூகத்தின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் தலைவர்கள் பேச்சு நடத்த வேண்டும் என்பதே முஸ்லிம் மக்களின் வலுவான கோரிக்கை ஆகும்.

இந்த நிலையிலேயே சிங்களப் பேரினவாதம், தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்க ளையும் மூட்டிவிட்டு வேடிக்கைப் பார்க்க முற்பட்டிருக்கிறது. யுத்த காலத்திலும் இப்போதைய சமாதான சூழலிலும் வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் உயிர், உடமை இழப்புகளை வெகுவாகச் சந்தித்துள்ளனர். கடந்த சில மாதங்களாக பெரியளவில் பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவுமின்றி ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுடன் அவர்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலையிலேயே பேரினவாத சக்திகளின் பிரித்தாளும் சதி வேலைகள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

பேரினவாதிகளின் பிரித்தாளும் தந்திரம்

சென்ற முதலாம் திகதி கல்முனையில் நடைபெற்ற 'கிழக்கின் உதயம்' மாநாடும், பேரணியும் ஜே.வி.பியினரால் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகவே அரசியல் அவதானிகளால் நோக்கப்படுகிறது.

கொழும்பு, கண்டி, அம்பாந்தோட்டை, திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜே.வி.பி.

(18 ஆம் பக்கம் பார்க்க)

- அஸ்லம் எஸ். மௌலானா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் போதும் படி ஏறும்போதும் மூச்சுவாங்குவது ஏன்?

கேள்வி:– இது ஒரு நோய்பற்றிய கேள்வி அல்ல. ஒரு மருத்துவ கருத்து பற்றிய விளக்கம் தேவை. என்னைப் போல் பலரும் இந்த அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள். எனது 4 வயது மகனுக்கு தொடர்ந்து மூன்று நாட்களாக விடாமல் காய்ச்சல் காய்ந்தது. ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு முறை 'பரசற்றமோல்' (PARACETAMOL) மாத்திரை கொடுத்தேன். குணமாகவில்லை. எனவே, எனது மருத்துவரிடம் கூட்டிச் சென்றேன். அவர் நான் பரசற்றமோல் மாத்திரை கொடுத்ததைக் கண்டித்து விட்டு காய்ச்சல் வந்தால் பச்சைத்தண்ணீரில் துணியைப் போட்டெடுத்து உடல் முழுவதும் SPONGING செய்யச் சொன்னார். காய்ச்சல் அதிகம் இருந்தால் மாத்திரம் அந்த வேளையில் மாத்திரை கொடுக்கப் பணித்தார். இப்போது மகன் குணமாகி விட்டான். ஆனால், காய்ச்சல் என்றால் பரசற்றமோல் உபயோகிப்பதுதான் பொதுவாக அனைவரும் பின்பற்றும் வழக்கம். எதற்காக எமது மருத்துவர் பரசற்றமோலை உபயோகிக்க வேண்டாம் என்றார்? அப்படியென்றால் காய்ச்சலுக்கு என்ன மருந்தை உபயோகிப்பது?

பதில்:– உங்களைப் போல் பலருக்கும் விளக்கமளிப்பதற்காக இந்த விஷயம் பற்றி விபரமாக விளக்கவுள்ளேன்.

காய்ச்சல் என்பது எமது தேகத்தினுள் தொற்றுகளுக்கெதிராக நடைபெறும் போராட்டத்தின் விளைவும், வெளிப்பாடும் ஆகும். இந்தப் போராட்டத்தில் இரத்தத்தில் உள்ள வெண் அணுக்கள் மற்றும் பிற பொருளெதிரிகள் (ANTIBODIES) என்பவையின் மூர்க்கத்தனமான எதிர்ப்பில் அழிந்தொழிந்து போன தொற்றுக்களின் பகுதிகள், வெண் இரத்த அணுக்களின் பகுதிகள் என்பன தரும் இரசாயன மாற்றத்தின் விளைவு உடலின் வெப்பநிலை அதிகரிப்பாகும். இதனையே நாம் காய்ச்சல் என்கிறோம். உடலின் வெப்பநிலையைக் குறைக்கும், கூட்டும் கட்டுப்பாட்டு பகுதி மூளையில் இருக்கிறது. காய்ச்சலுக்கு நாங்கள் கொடுக்கும் மருந்துகள் இந்தப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு– காய்ச்சலைக் குறைக்கின்றன். காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளை ANTIPYRETICS என்பார்கள். PYREXIA என்பது காய்ச்சலுக்கு மருந்துவப் பெயர். அதிலிருந்து மருவியது தான் அன்ரிபைரெட்டிக்ஸ். இந்த வகை மருந்துகள் சில – அஸ்பிரின் (ASPRIN), பரசற்றமோல், மெவ்நேமிக் அசிட் (MEFNAMIC ACID) இபூரோவன் (IBUPROFEN) என்பவை. இவற்றுள் அதிகமாக உபயோகமானவை அஸ்பிரினும் – பரசற்றமோலும். இந்த இரண்டு மருந்துகளும் மருத்துவரின் கையொப்பமிடப்பட்ட மருந்து சீட்டில்லாமலே (WITHOUT PRESCRIPTION) நேரடியாகப் பெறக்கூடிய மருந்து வகைகள். இதனால்தான் சில வேளைகளில் இவற்றின் பாவனை, அளவுக்கதிகமாக நடைபெற்று, வேண்டத்தகாத பின்விளைவுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக பரசற்றமோலை அளவுக்கதிகமாக உட்கொண்டால் ஈரல் கலங்கள் அழித்து ஈரல் செயலிழந்துவிடும். அஸ்பிரின் மாத்திரைகள் அளவுக்கதிகமாக எடுக்கப்பட்டால் வயிற்றில் அழற்சி (GASTRITIS) ஏற்பட்டு, புண் உண்டாகி – இரத்தம் கசியும். இரத்தம் உறையும் ஆற்றல் குறைந்து வெட்டுக் காயங்களில் இருந்து இரத்தம் உறையாமல் தொடர்ந்து வெளியேறும். இன்னும் முக்கியமாக அஸ்பிரின் குழந்தைகளுக்கும், 12 – 15 வயதுக்கு உட்பட்ட பிராயத்தினருக்கும் (ADOLESCENTS) காய்ச்சலுக்கு கொடுக்கக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் REYES SYNDROME என்ற மூளையைத் தாக்கி உயிராபத்துத்தரும் நோய்க்கு ஆளாக்கும் என்ற காரணத்தால், சாதாரண காய்ச்சலுக்கு மேற்குறிப்பிட்ட பிராயத்தினருக்கு அஸ்பிரின் கொடுப்பதில்லை.

இந்த அடிப்படை கருத்துக்களை மனதிற்கொண்டுதான் – மருத்துவர்கள் இந்த மருந்துகளை காய்ச்சல் ஏற்படும் பொழுதெல்லாம் கண்ட மாதிரி உபயோகிப்பதை விரும்புகின்றதில்லை. இன்னும் சில மருத்துவர்கள் உடம்பில் காய்ச்சலை காய விட வேண்டும். உடனே குறைக்கக் கூடாது. மிகவும் அளவுக்கு மீறிப் போனால் மாத்திரம் மருந்துகளை உபயோகிக்கவேண்டும். காய்ச்சல் காயும் போது ஏற்படும் வெப்பத்தினால் உடலில் சுரக்கும் PROSTAGLANDIN போன்ற நொதியங்கள் – உடலின் எதிர்ப்புச் சக்தியை தூண்டுவித்து – தொற்றுகள் அழிதற்கு உதவுகின்றன என்று நம்புகின்றார்கள். காய்ச்சலினால் ஏற்படும் வெப்பநிலையில் – தொற்றுகள் விரைவில் மடிந்துவிடுவதாகவும் – அந்த வெப்பநிலையில் தொற்றுகளை எதிர்க்கும் எமது பாதுகாப்பு அரணுக்கு – வலுவூட்டப்படுவதாகவும் நம்புகின்றார்கள்.

என்றாலும் சிலருக்கு முக்கியமாகக் குழந்தைகளுக்கு உடல் வெப்பநிலை 101° அதிகரித்தால் வலிப்பு நோய் ஏற்படுவதுண்டு. இப்படிப்பட்டவர்களுக்கு காய்ச்சல் 100°F வரும்

போது மாத்திரைகள் கொடுத்து குறைப்பது அவசியம்.

சாதாரணமான காய்ச்சலுக்கு காய்ச்சல் உள்ளபோது மாத்திரம் மாத்திரைகள் கொடுக்கப்படவேண்டும். அதுவும் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவைக்கு மேல் பரசற்றமோல் மாத்திரைகள் உபயோகிக்கக்கூடாது.

மாத்திரை கொடுத்தும் காய்ச்சல் குறையவில்லை என்றால், ஈரத்துணியால் உடலைத்துவட்டலாம். இதனை SPONGING என்று கூறுவர். முக்கியமாக அக்குள், கைகள், கால்கள் என்பவற்றை ஈரத்துணிகொண்டு துவட்டும்போது வெப்பநிலை 1 டிகிரி தொட்டு 2 டிகிரி வரை குறையும். முன்னர் ஒடிக்கொலோன் (EAU DE COLOGNE) நனைத்த துணித்துண்டை நெற்றியில் போடுவார்கள். இது மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் வெப்பநிலையை குறைத்து தலைவலியைத் தீர்க்க உதவும் என்று நம்பினார்கள். இதில் எவ்வளவு நன்மை உண்டு என்பது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படவில்லை என்றாலும் – அந்தக் கால ஒடிக்கலோன் 75 வீதம் மதுசாரத்தைக் கொண்டது. மதுசாரம் உடல் வெப்பத்தால் ஆவியாகும் போது துணி போட்ட இடம் குளிரப்படுகின்றது. இதனால் ஒரு வேளை இரத்த ஓட்டத்தின் வெப்பநிலை குறைந்து காய்ச்சலுடன் வரக்கூடிய தலைவலி குறையலாம். EAU DE COLOGNE என்ற பதத்தின் கருத்து கொலோன் என்ற ஜெர்மனிய நதியின் நீர் என்பதாகும். இன்று கிடைக்கும் அநேகமான ஒடிக்கலோன் வெறும் நீருக்கு நறுமணம் ஊட்டியிருப்பதால், அது வெப்பத்தில் ஆவியாகும் தன்மை எதுவும் கொண்டிருப்பதில்லை. எனவே இவற்றை உபயோகிப்பதில் எதிர்பார்த்த பலன் எதுவும் கிடைப்பதில்லை.

இது தவிர காய்ச்சலைக் குறைப்பதற்கு மலவாசலினுள் செருகும் DICLOFENAC SODIUM SUPPOSITORIES உபயோகப்படுத்தப்படுகின்றன. குறைந்த நேரத்தில் காய்ச்சலைக் குறைக்க இம் மருந்து உபயோகமாகின்றது. ஆனால் அடிக்கடி அதிகளவில் இம்மருந்து உபயோகிக்கப்படும் பொழுது மலவாசலில் எரிவு, அழற்சி, புண் மற்றும் ஈரல் தாக்கம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு.

எமது பாட்டி வைத்தியத்தில் கொத்தமல்லி கஷாயம் ஒரு கைகண்ட மருந்தாகக் காய்ச்சலுக்கு உபயோகப்படுகின்றது. வெறும் கொத்தமல்லி விதைகளை நன்றாக அவித்த நீரை காய்ச்சல் நேரத்தில் பருகினால் நன்றாக உடல் வியர்த்து வெப்பநிலை , இறங்குகின்றது. இந்த விதைகளில் அஸ்பிரினில் காணப்படும் SALICYLATES இரசாயனம் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. ஆயுள்வேதவாகடப்படி கொத்தமல்லி, காய்ச்சலைக் குறைக்கும் உடல் உபாதைகளைக் குறைக்கும் சிறுநீரைப் பெருக்கும் (ANTI PYRETIC, ANTI INFLAMATORY, DIURETIC) பண்புகளைக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே ஆங்கில மருந்துகளுடன் கொத்தமல்லி நீரையும் காய்ச்சல் நேரத்தில் நாங்கள் உபயோகிக்கலாம். அஸ்பிரினைப் போல் கொத்தமல்லி நீர் செயல்பட்டாலும், அஸ்பிரின் மாத்திரைகளுக்குரிய எதுவித பக்க விளைவுகளும் இதற்கு இல்லை.

கேள்வி:– வயது 50. நீரிழிவு நோய் உண்டு. அது தவிர வேறு நோய்கள் இல்லை. கடந்த ஒரு மாதமாக நடக்கும் போது, மாடிப்படி ஏறும் போது மூச்சு வாங்குகின்றது இதற்கு காரணம் என்ன?

பதில்:– நீரிழிவு நோய் மட்டும் தான் உள்ளது என்கின்றீர்கள். உங்களுக்கு இருக்கும் நீரிழிவு நோய்க்கு மருத்துவ உலகில் இன்னொரு பெயர் "நோய்களின் இராணி" QUEEN OF THE DISEASES. ஏனென்றால், கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவு நோயும் நீண்டகாலமாக உள்ள நீரிழிவு நோயும் உடலில் உள்ள சகல உறுப்புகளையும் பாதித்து மருத்துவ பாடப்புத்தகங்களில் உள்ள சகல நோய்களுக்கும் வழிவகுக்கும் தன்மையினால் நீரிழிவு நோயை நோய்களின் இராணி என்கின்றார்கள்.

முக்கியமாக நீரிழிவு நோயினால் இரத்த கொலஸ்திரோல் அளவு அதிகரிக்கும். இதனால் இதயத்திற்கு செல்லும் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படலாம். சிறுநீரக இரத்தக் குழாய்களின் பாதிப்பால் சிறுநீரகம் செயலிழக்கலாம். குளுக்கோசு கலந்த இரத்தத்தில் நரம்புகள் தொடர்ந்தும் மூழ்கி கிடப்பதினால் நரம்புகளில் கடத்தும் தொழில் பழுதுபட்டு NEURITIS நோய்கள் உண்டாகும். உங்களுக்கும் திடீரென்று ஏற்பட்டுள்ள மூச்சு இளைப்பு நீரிழிவு நோயினால் மேற் கூறிய விதத்தில் இதயம் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கலாம். மற்றும் சிறுநீரக செயலிழப்பும் கூட காரணமற்ற மூச்சு வாங்கலைத் தரலாம்.

இது தவிர நீரிழிவு நோயாளர்களின் எடை அதிகரிப்பதாலும் மூச்சு இளைப்பு ஏற்படலாம். எனவே காலதாமதம் செய்யாமல் வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெற்று இருதயம், சிறுநீரகம், இரத்த அழுத்தம் என்பவற்றைப் பரிசோதிக்கவும். நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கின்றதா என்பதையும் அடிக்கடி பரிசோதித்துக் கொள்ளவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி,
உடனே என்னை வந்து சந்தியுங்கள்

K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெட் குழப்பம்



இந்தப்படத்தில் குறுக்காகவும்-கிடையாகவும் உள்ள கோடுகள் வளைந்திருப்பது போல் தோன்றுகின்றதே! உண்மையிலே வளைந்தவையா? இல்லை அவை நேரான கோடுகள். வளைந்திருப்பது போல் தோன்றுகின்றன.

வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பினான் ஜானி. அப்போது அவனது உடையில் நீளமான கறுப்புமுடி ஒன்றைப் பார்க்கிறாள் அவனது மனைவி. உடனே பெரிய சண்டை கிளம்புகிறது. ''உனக்கும் ஒரு இளம்பெண்ணுக்கும் கள்ளத் தொடர்பு இருக்கிறது. நீ இப்போ அவளது வீட்டுக்கு சென்று கும்மாளம்போட்டுவிட்டு வருகிறாய். அவளது தலைமுடி உனது சேட்டிலே ஒட்டியிருக்கிறது'' என்று ஏகத்துக்கு கத்தினாள் ஜானியின் மனைவி. ஜானி எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்பதாக இல்லை.

ஜோக்

அடுத்த நாள் ஜானி வேலையிலிருந்து வீடு திரும்புகிறான். அப்போது அவனது உடையில் நீளமான ஒரு நரைத்த முடி ஒட்டியிருக்கிறது. அதனைக் கண்ட அவனது மனைவி ''ஐயையோ நேற்று ஒரு இளம் பெண்ணுடன் கும்மாளம் போட்டாய் இன்று ஒரு கிழவியுடன் கும்மாளம் போட்டுவிட்டு வருகிறாயா? காமற் தகராறா... உன்னால் எனது வாழ்கையே பாழாய்ப் போச்சுதே!'' என்று கத்து கத்தென்று கத்தினாள்.

அதற்கு அடுத்த நாள் ஜானி வேலையிலிருந்து வீடு திரும்பினான். வழியிலே மனைவியின் நினைவு வந்தது. ஏதாவது முடி தனது உடையிலே ஒட்டியிருந்தால் களேபரம் ஆகிவிடும். எனவே உடையைக் கழட்டி நன்றாக உதறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

அன்றும் அவனது மனைவி வழக்கம் போல் அவனது உடையை வாங்கி உற்றுப்பார்த்தாள். முடி எதுவும் கிடைக்கவில்லை.

உடையை வாங்கி துருவித்துருவி சோதனையிட்டாள். அங்கும் எதுவுமே கிடைக்கவில்லை. ஜானிக்கோ பெரும்

சந்தோஷம். அப்பாடா தப்பித்தோம் என்று ஆறுதல் அடைந்தான்.

ஆனால் மனைவியோ ''அடப்பாவி இன்று, போயும் போயும் ஒரு மொட்டைத் தலைப் பெண்ணுடன் கும்மாளம் போட்டுவிட்டு வருகிறாயே... உனக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை எதுவுமே இல்லையா?'' என்று ஜானியைத் திட்டினாள்.

கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தில் சாய்ந்த சதுரங்கள் சில மத்தியில் வந்து சுழம்பு போல் இணைகின்றன. அந்த சதுரங்களை வட்ட வடிவக் கோடுகள் சில ஊடறுத்துச் செல்கின்றன. இந்த வட்ட வடிவக் கோடுகளில் தான் இந்த உருவத்தின் கண்ணாமூச்சி ஒளிந்திருக்கிறது. அதாவது இந்த வட்டங்கள் எல்லாம் ஒரே கோட்டில் இணைக்கப்பட்டுள்ளன போல்வும்-வெளிப்புறத்திலே ஆரம்பிக்கப்பட்ட கோடு-வளைந்து வளைந்து சுருங்கிச்சென்று மையத்தைத் தொடுவது போலவும் இருக்கிறது. ஆனால் இந்த் வட்டக் கோடுகளை கொஞ்சம் நின்று நிதானித்து ஆற-அமர - உட்கார்ந்து - ஆழமாகப் பாருங்கள். அவைகளெல்லாம் தனித்தனி வட்டங்கள்- ஒரு வட்டத்துக்கும் அடுத்த வட்டத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லவே இல்லை என்பது தெரியவரும்.

நெட் குறும்பு



தற்போதைய பெண்கள் அலங்காரத்துக்கு ஏகப்பட்ட பணத்தை அள்ளிச் செலவு செய்கிறார்கள். கண்ணுக்கு மை. உதட்டுக்குச் சாயம். கண் இமைக்கு சாயம். முகத்துக்குப் பவுடர். கன்னத்துக்குரிய பவுடர். இதனைவிட முகத்தை அழகுபடுத்த வென பேஷியல். ஐபிரோ பிளக்கிங். இப்படி ஏகப்பட்ட தடல் புடல்கள் பண்ணுகிறார்கள். இவ்வளவு அலங்காரங்களுக்குப்பின் வரும் ஏதோ ஒரு சிலர் தான் அழகாகத் தெரிகிறார்கள். அதிகமானவர்கள் உள்ள அழகையும் கெடுத்து அசிங்கமாகத் தெரிகிறார்கள். இவ்வாறான அதிகரித்த அலங்காரங்களால் எதிர்காலத்துப் பெண்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்ற கற்பனை இது.

நெட் கற்பனை

இது என்ன நாயா பெண்ணா- அல்லது நாய் போன்ற பெண்ணா- அல்லது பெண் போன்ற நாயா?

சித்திரச் சிரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன் பதில்கள்

க.கோபு — கல்மடு

கேள்வி:— விதவைப் பெண் திருமணம் பற்றி பித்தனின் கருத்து என்ன?

பதில்:— வரவேற்கப்பட வேண்டிய, வாழ்த்தப் பட வேண்டிய, வாழ வைக்கப்பட வேண்டியது.

ப.றொபின்சன் — கேவில் முள்ளியாள்

கேள்வி:— அன்பின் பித்தா! அடிக்கடி உமது மனைவியின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகிறீரே.. நீர் என்ன அடிவாங்கும் கராத்தே கற்று வைத்திருக்கிறீரா?

பதில்:— இல்லை. நான் கராத்தேயில் Black Belt தான். ஆனால், மனைவி அடிக்கும் போது தற்காப்புக் கலையை மட்டுமே பயன்படுத்துவேன். ஏனென்றால்; திருப்பி அடித்து விட்டு — அடுத்த வேளை பட்டினி கிடக்கவோ, இரவிலே வெளி விறாந்தையில் நுளம்புகளுக்கு மத்தியில் தூங்கவோ என்னால் முடியவே முடியாது.

யோ. நிக்ஸன் — மல்லாவி

கேள்வி:— பித்து மாமா! பெண்ணுக்கு அழகு பொறுமை என்று பாடல்களிலும், கவிதைகளிலும் கேட்டிருக்கிறோம். ஆனால், ஆண்களுக்கு அழகு என்ன என்பது, எந்த பாடல்களிலும் — கவிதைகளிலும் எழுதப்படவில்லையே ஏன் பித்து?

பதில்:— ஆண்களுக்கு எதிலுமே அழகில்லை என்று கவிஞர்கள் நினைத்து விட்டார்கள் போலும்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை செப்டம்பர் 18 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

கேள்வி:— ஆடையை மாற்றுவது போல், ஆடவரை மாற்றும் நங்கையர் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:— போதும் என்ற மனதுடன், கிடைத்ததைக் கொண்டு வாழ்வதற்குரிய மனப்பக்குவம் இவர்களுக்கு இல்லை போலும்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்பவேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு — 14.

இ. சஞ்சீபன் — விசுவமடு

கேள்வி:— பித்து மாமா! உங்களின் மனைவி வீட்டிலிருந்து 10 லட்சம் பணம் சீதனமாக வேண்டினீராமே உண்மையா? அது உமது அழகிற்காகவா? முகவரிக்காகவா தரப்பட்டது.

பதில்:— எனக்கிருக்கும் அழகிற்கும் — எனக்கிருக்கும் முகவரிக்கும், நான் தான் 10 லட்சம் கொடுத்துக் கல்யாணம் முடித்திருக்க வேண்டும். என்ன செய்ய அற்ப ஆசை. கேட்டுப் பார்த்தேன் கொடுக்க முடியாதென்று விட்டார்கள். சரி, இதையும் விட்டால் வாழ்க்கை முழுக்கப் பிரமச்சாரிதான் என்று நண்பர்கள் மிரட்டினார்கள். சரி என்று எதுவுமே வாங்காமல் தாலியைக் கட்டிவிட்டேன். ஆனால், நான் லட்சம் சீதனம் கேட்ட பாவம் இன்னமும் என்னைத் துரத்துகிறது. அடிக்கும் போதெல்லாம், உன்ரை மூஞ்சியின்ரை லட்சணத்தில 10 லட்சம் சீதனமோ கேட்டனீர் என்று கேட்டுக் கேட்டு அடிக்கிறாள். ஆனாலும், ஒரு திருப்தி.. கேட்டது மட்டுக்குமே இப்படியென்றால்.. வாங்கியிருந்தால்... எனது

கதை எப்போதோ காலியாகியிருக்கும்.

பி.வீருன் — கோண்டாவில்

கேள்வி:— பித்தா! அரசியல் கட்சி ஒன்றுக்கு உங்களைப் பொறுப்பாக நியமித்தால், இந்தத் துன்பத்தை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

பதில்:— இப்போதிருக்கும் காவி உடைக்காரர்களுக்கும், தாடி வாலாக்களுக்கும் மத்தியில், நான் என்ன சோப்ளாங்கியா? பிய்த்து உதறிவிட மாட்டேன்?

கே.கஜன் — மல்லாவி

கேள்வி:— பித்தா! மனிதனை பைத்தியமாக ஆக்குவது எது?

பதில்:— காதல்.

சி.முகுந்தன் — கரவெட்டி

கேள்வி:— பித்தா! உண்மையான நட்பை எப்படி புரிந்து கொள்ளலாம்?

பதில்:— கடன் கேட்டதன் மூலம். அல்லது கடன் கொடுப்பதன் மூலம்.

இ.கௌசிகன் — விசுவமடு

கேள்வி:— பித்து அண்ணா! உங்களுக்கு நன்றாக ஜோக் தெரியுமாமோ? நல்ல ஜோக் ஒன்றை அவிழ்த்து விடுங்களேன்?

பதில்:— வகுப்பு ஒன்றில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மேசையின் மேல் இரண்டு கண்ணாடிக் குடுவைகளை வைத்தார். இரண்டு குடுவைகளிலும் நான்கைந்து புழுக்களைப் போட்டார். ஒன்றில் பாதியளவுக்குத் தண்ணீரை ஊற்றினார். மற்ற குடுவையில் பாதியளவுக்குச் சாராயத்தை ஊற்றினார். பின்னர் மாணவர்களைப் பார்த்து தண்ணீருக்குள் போட்ட புழுக்கள் உயிருடன் நெளிவதை பாருங்கள். ஆனால், சாராயத்துக்குள் போட்ட புழுக்களோ இறந்து விட்டன. இதிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார். ஒரு மாணவன் எழுந்து சொன்னான். சேர் — சாராயத்தைக் குடித்தால் நமது வயிற்றிலே உள்ள புளுக்கள் — பூச்சிகள் எல்லாம் இறந்துவிடும் என்று தெரிகிறது என்றான்.

தனு — மல்லாவி

கேள்வி:— பித்தா! காதலித்து திருமணம் செய்த ஆண்கள் பலபேர், தமது மனைவியைச் சீதனம் கேட்டு அவளின் பெற்றோர் வீட்டுக்கு அனுப்பிவிட்டுத் தாம் வேறு இளம் பெண்களுடன் சுற்றித் திரிகின்றனரே ஏன்?

பதில்:— வீட்டுக்குப் போன மனைவி உடனே திரும்பி வரமாட்டார். சில சமயம் திரும்பி வரவே வரமாட்டார். ஏனென்றால் சீதனம் வீட்டிலே என்ன தயாராகவா இருக்கப் போகிறது? வீட்டிலே இருந்திருந்தால் இவன் மனைவியை அனுப்புவதற்கு முன்னர் தாங்களாகவே அவனது பெற்றோர் அந்தச் சீதனத்தை அனுப்பி வைத்திருக்க மாட்டார்களோ?... எனவே, எப்படியும் மனைவி திரும்பி வரக் கொஞ்ச நாளாகும். அதுவரை இவனுக்குப் பொழுது போக வேண்டாமோ... அதற்குத்தான்.

கி. வினோதினி — கனகாம்பிகைக்குளம்

கேள்வி:— பித்துக் குட்டி! யாழ். மாவட்டம் மற்றும் கொழும்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் போதியளவு ஆசிரியர்கள் இருந்தும், ஆசிரியர் பற்றாக்குறை உடைய வன்னி பிரதேசத்தில் ஆசிரிய நியமனம் வழங்க மறுக்கிறார்களே... என்ன காரணம்?

பதில்:— அது வன்னி என்ற ஒரே காரணம் தான். அங்கிருந்து தமக்கு ஓட்டு எதுவுமே கிடைக்கப் போதில்லை என்ற முழு நம்பிக்கை... அவர்களுக்கு உதவுவதால் எமக்கு என்ன கிடைக்கபோகிறது என்ற மனப்பான்மை. இவைகள் தான் காரணம்.

எஸ். சசி — வவுனியா

கேள்வி:— பித்தா! சொல்லாமல் இருக்கும் காதலைப் பற்றி நீர் என்ன கருதுகிறீர்?

பதில்: திறில் ஆன காதல். ஆனால், சில வேளைகளில் வாழ்க்கை முழுவதுமே சொல்ல முடியாமலே போய்விடுவதும் உண்டு. சிலர் சொல்லும் போது காலம் கடந்து போய் விடுவதும் உண்டு. எனவே எதனையும் On The Spot ஆக முடிக்கப் பார்ப்பதே நல்லது.

இரா. ரஜனி — உடுவில்

கேள்வி:— பித்தா! நீர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று வந்தால், அதனை ஞாபகச் சின்னமாக வைத்திருப்பீரா? அல்லது விற்றுச் செலவு செய்து விடுவீர்களா?

பதில்:— நானென்ன அவ்வளவு கேணப் பயலா என்ன? அந்த மெடலை பத்திரமாக வீட்டிலே வைத்து... வருபவர் போவபர்களுக்கெல்லாம் அதனைக் காட்ட — அதனை விற்று விட்டுத் திரும்ப தருகிறேன் என்று சொல்லிக் கொஞ்சம் கடன் வாங்கி விடுவேன்.

செ.வாகீசன் — யாழ்ப்பாணம்

கேள்வி:— பித்தா! போகிற போக்கைப் பார்த்தால், நமது ஊர்களிலும் ஆணும் — ஆணும் திருமணம், பெண்ணும் — பெண்ணும் திருமணம் எல்லாம் விரைவில் வந்துவிடும் போல் இருக்கிறதே என்ன சொல்கிறீர்?

பதில்:— ஐயோ வாகீசா அமுக்கி வாசியும்.. ஐயா... மேல் நாட்டவர்களைப் பார்த்து சகல நடவடிக்கைகளையும் எம்மவர்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள். இது ஒன்று தான் இன்னும் தொடங்கவில்லை. நீர் அதனையும் ஞாபகப்படுத்தி தொலைத்து விடுவீர் போலிருக்கிறதே. சும்மா... மூடிக் கொள்ளும்.

அழகேசன், புதுக்குடியிருப்பு.

கேள்வி:— Dear பித்தா! ஒரு புதுமணத் தம்பதிகளுக்கு இல்லறவாழ்வு பற்றி அனுபவமே இல்லாத மத போதகர் அறிவுரை கூறலாமா?

பதில்:— அவரையும் விட்டால் வேறு யாரை ஐயா அறிவுரை சொல்லச் சொல்லுறீர்? திருமணம் முடித்து இல்லற வாழ்வின் அனுபவம் பெற்ற ஒருவரை அறிவுரை சொல்லச் சொன்னால், அவர் புது மணத் தம்பதியினருக்கு எவ்வாறு புத்திமதி சொல்வார்? இவ்வளவு நாளும் சுதந்திரமாக மகிழ்ச்சியாக, சந்தோஷமாக இருந்தீர்கள். இனி அதெல்லாம் கிடையாது. இதுவரை காலமும் நீங்கள் நினைத்தபடி நடந்தீர்கள். இனி இப்படி நடக்க முடியாது. மனைவி — கணவனிடமும், கணவன் — மனைவியிடமும் ஆலோசனை கேட்டுதான் நடக்க வேண்டும். "இனி நீங்கள் உழைப்பதைக் கண்டபடி செலவு செய்ய முடியாது. குடும்பத்திற்கு செலவு செய்ய வேண்டும். பிற்காலத்தில் குழந்தைகள் பிறந்தால் சேமிக்க வேண்டும். முன்னைப்போல் கண்ட பெண்கள், கண்ட ஆண்களுடன் கதைக்க, பேச முடியாது. சாப்பிட முடியாது, விரும்பியதை போட முடியாது. வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்துவிட வேண்டும்." இவ்வாறு தான் தனது அனுபத்தில் இழந்தவற்றையெல்லாம் சொல்லிப் புலம்புவார். புதிதாக திருமணம் முடிக்க வந்தவர்கள், அப்போ எமக்குத் திருமணமே வேண்டாம் என்று ஓடிவிடுவார்கள்.

அன்பன் துரை — சங்கானை

கேள்வி:— சரியான முறையில் தமிழில் எழுதத் தெரியாத ஒருவருக்கு சமாதான நீதிவான், அதிலும் அகில இலங்கை சமாதான நீதவான் பதவி வழங்கப்படுகிறதே. அவர்கள் அதற்கு தகுதியானவர்களா பித்தா?

பதில்:— ஐயா — சமாதானம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாத சண்டைக்காரர்களுக்கெல்லாம் சமாதான நீதவான் பட்டம் கொடுக்கிறார்களே.. நீர்... என்ன எழுதத் தெரியாத கதை கதைக்கிறீர். சமாதான நீதவான் பட்டம் என்பது முன்னைய காலத்தில்தான் கௌரவமானது. இன்று அரசியல் வாதிகள் தங்களுக்கு தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், கூடப்படித்தவர்கள், அடுத்த வீட்டுக்காரர்கள், எடுபிடிகள் என்று எல்லோருக்கும் வாங்கிக் கொடுக்கிறார்கள். அண்மையில் வெளியான ஒரு வர்த்தமானியைப் பார்த்தேன். ஒரே வாரத்தில் இரண்டாயிரத்து அறுநூறு பேருக்கு சமாதான நீதிவான்பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. தற்போதே நாட்டிலே தடுக்கி யாருக்கு மேலாவது விழுந்தால் அவர் ஜே.பி. யாகத்தான் இருக்கிறார். போகிற போக்கில் இலங்கையிலே உள்ள சகல பிரஜைகளுமே சமாதான நீதிவான் ஆகினாலும் ஆகிவிடுவார்கள் போலிருக்கிறதே.

கு.குலரூபன் — ஸ்கந்தபுரம்

கேள்வி:— Hey பித்தா! என்னை ஒருத்தி — கழுதை, எருமை, நொண்டி, பைத்தியம், வளங்காமல் போவாய் என்றெல்லாம் திட்டுகிறாள். அவளுக்கு நான் திருப்பி பேசுவது எப்படி?

பதில்:—...... மௌனம், மௌனம் தான் இதற்குச் சரியான பதில். ஏனென்றால் நீர் அவளுக்குத் திருப்பிப் பேசப்போக, அவள் ஆத்திரப்பட்டு உம்மைப்பற்றி தெரிந்து வைத்திருக்கிற ஏனைய உண்மைகளையும் எடுத்துவிட்டு விடப் போகிறாள். தெருவிலே குலைக்கும் நாய்க்கு கல் எறியப் போகாதேயும். அது மேலும் குரைக்கும்.

அ.ஆரியமலர் — மன்னார்

கேள்வி:— ஐயா! அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வருகிறதே. இம் முறையாவது ஒரு அமெரிக்கப் பெண் போட்டியிட்டு ஜெயித்து அமெரிக்க ஜனாதிபதி ஆகமாட்டாரா?

பதில்:— இதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகன் கூறிய கூற்றுத்தான் நினைவுக்கு வருகிறது. பத்திரிகையாளர்கள் ரீகனைப் பார்த்து அமெரிக்க ஜனாதிபதியாக பெண் ஒருவர் பொறுப்பேற்கும் காலம் வராதா என்று கேட்டனர். அதற்கு நிச்சயம் ஏற்படவே ஏற்படாது என்றார் ரீகன். எப்படி அவ்வளவு தைரியமாகச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டனர் பத்திரிகையாளர்கள். அதற்கு அவர் சொன்னார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 35 வயது நிரம்பியிருக்க வேண்டும். ஆனால், அமெரிக்காவில் உள்ள எந்தப் பெண்ணும் தனக்கு 35 வயது நிரம்பிவிட்டது என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டள். அதனால்தான் என்றார் ரீகன்.

க.பார்வதி — வெள்ளவத்தை

கேள்வி:— பித்தா! அண்மையில் வந்திருக்கும் படங்களில், நல்ல படங்கள் பற்றி கொஞ்சம் எடுத்து விடுமேன்?

பதில்:— குடும்பத்துடன் பார்க்கக் கூடிய கதையம்சமுள்ள படங்கள் என்றால் — அழகிய தீயே, குடைக்குள் மழை. மசாலா ரேஸ்ட்டில் என்றால் வசூல்ராஜா M.B.B.S, மதுர.

எம். திவி — செல்வநகர்

கேள்வி:— டியர் பித்தா! கறுத்த நிறமுடைய ஆண்கள் தமக்குக் கிடைக்கப் போகும் மனைவி வெள்ளைப் பெண்ணாகவே இருக்க வேண்டுமென நினைக்கிறார்களே ஏன் பித்தா?

பதில்:— இருட்டிலே கணவனும் — மனைவியும் நடந்து செல்லும் போது, யாராவது வந்து இடித்து விடக் கூடாது பாருங்கள் அதற்காகத்தான்.

பித்தனின் கேள்வி

கேள்வி:— பிள்ளைகளின் காதலை பெற்றோர்கள் ஏற்காததற்குக் காரணம் யாது?

வாசகர் பதில்கள்

ரா.யோகேவரி, இரத்தினபுரி.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்" என்பதற்கு இணங்க, அவர்களைக் பாழ்கிணற்றில் தள்ளி, தான் பெற்ற துன்பத்தைப் பிள்ளைகளும் படக் கூடாது என்பதற்காக முன்னோடியே தடை போடும் ஓர் மூர்க்கணாங்கயிறு 'காதலின் எதிராளி'

இளவேனில், யாழ்ப்பாணம்.

பரம்பரைக் குணம் தான் இதற்கெல்லாம் காரணம்.

சுந்தா, திருகோணமலை.

தங்கள் ஆளுமை இல்லாது போய்விடுமோ என்ற பயமாக இருக்கலாம்.

யஸ்மினா, மீசாலை.

யார் சொன்னது ஏற்கவில்லை என்று, அதெல்லாம் அந்தக்காலம். காதலிப்பவர் நல்லவராக இருந்தால், எந்தப் பெற்றோரும் காதலை எதிர்க்கமாட்டார்கள்.

டினேஸ், கொழும்பு.

காதலிப்பவர்களின் காதல் தூய்மையாயின், காதலின் எதிரியான பெற்றோர்களே, காதலுக்குப் பச்சைக்கொடி காட்டி வெற்றி கண்ட காதலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் தேர்

சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அமைந்திருக்கும் சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயம் நல்லூர்க்கந்தசுவாமி கோயில். இந்த ஆலயம் ஈழத்திலுள்ள முருகன் ஆலயங்களுள் சிறப்புப் பொருந்தியதாகும்.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கிற முருகன், இந்தப் புனித நகரான நல்லூரிலே எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் இன்னல்களையும், இடுக்கண்களையும், துன்பங்களையும், துயரங்களையும் நீக்கியருள்கிறார்.

முருகப் பெருமான் அழகே வடிவானவர். அந்த அழகனான முருகன் நல்லைக் கந்தன் என்ற பெயரிலே இந்த ஆலயத்திலிருந்து அருளை அள்ளி வழங்குகின்றான்.

வினை தீர்க்கும் வேலன்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே ஆடி அமாவாசை வந்து ஆறாம் நாள் தன்னில் கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகும்.

தொல்லை வினை தீர்க்கின்ற நல்லைக்கந்தன் கலியுக வரதன் ஆனதன்மையினால் தன்னிடம் குறைகளை முறையிடும் அடியார்களுக்கு அருள் செய்து, இன்னருளை வாரி வழங்கி, துன்பங்களைக் களைகின்ற அருட்குமரனாக விளங்குகின்றான்.

வரனைத் தேடி செருப்புத் தேய்ந்து விட்டதா?
கைகளினால் குறிப்பைத் தேடிப் பார்த்து
கண்களும் கலங்கி விட்டதா!
இன்றே நாடுங்கள்
எங்கள் கணனிப் பணிமனைக்கு
இலகுவில் உங்கள் துணையைத் தேட
மாலையோகம்
இல. 10, பம்பலப்பிட்டி தொடர் மாடி சனசமூக நிலையம்
கொழும்பு - 04, இலங்கை.
தொலைபேசி இல.: 0094-11-2595983
E-Mail: malayogamlanka@yahoo.com
அலுவலக நேரம்: காலை 10.00 - 12.00 மணி பதிவுசெய்தல்.
மாலை 5.00 - 7.00 மணி தெரிவு செய்தல்.
(முன் ஏற்பாட்டின் படி By Appointment)

தமதுகொடியவினை போக்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு, நேர்த்திக்கடன்களைச்செய்துகொண்ட அடியவர்கள் காவடி, கரகம் எடுத்தும் பாற்காவடி, பன்னீர்க்காவடி, தூக்குக் காவடி எடுத்து அவற்றைப் பூர்த்தி செய்கின்ற பாங்கு இந்த நல்லூர் கோயிலிலே காணலாம்.

அலங்காரக் காட்சி

இத்தகைய நல்லூரிலே இன்று ரதோற்சவம். இந்த ரதோற்சவ நன்னாளிலே நல்லைப்பதியே விழாக் கோலம் பூண்டு பக்தி மயமாகக் காட்சியளிக்கும். எங்கு பார்த்தாலும் அடியார் கூட்டம்; பக்தர் வெள்ளம். கடலில் தெப்பம்ஒன்று மிதந்து

13 . 09

நல்லை நகரிலே ஆறுமுகன் இ

வருமாப்போல் இருக்கும் இந்தக் காட்சி, வெள்ளத்தின் நடுவிலே தோணி ஒன்று வருவது போன்று ஆடி ஆடி, அசைந்து அசைந்து ஆறுமுகப் பெருமான் தேரேறிவரும் காட்சி அற்புதமானது.

இந்த அருமையான அலங்காரக்காட்சியை நல்லூரைத் தவிர வேறெங்கும் காண முடியாது.

அத்தனையும் பொன்னாபரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற கந்தவேள் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராக ஜெகஜோதிமயமாக ஒளி வீசிய வண்ணம் ஆறுமுகப் பெருமான் தேரில்ஆரோகணிக்க வருங்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

கைமேற் பலன்

கதிர்காமத்திலே எழுந்தருளியிருந்து தன்னருள் பாலிக்கின்ற முருகப் பெருமானை அருட்கந்தன் என்றும், செல்வச் சந்நிதியிலே எழுந்தருளி இன்னருள்புரியும் கந்தன் அன்னதானக்கந்தன் என்றும், நல்லூரிலே எழுந்தருளி நல்லருள் பாலிக்கின்ற கந்தன் அலங்காரக்கந்தன் என்றும் அழைக்கப் பெறுவர்.

ஏனெனில் நல்லூரிலே ஒவ்வொரு

LG
Life's Good
இல்வாழ்க்கை இன்னும் சொகுசாக
LG யின் உலக பிரசித்தி பெற்ற நவீன படைப்புகள்

* உணவுச்சத்து பேணும் (PN) முறை
* CFC அற்றது
* பகுதி மின்னியக்கத்தால் உறைபனி அகற்றல்
* FRESH ZONE குளிரூட்டப்பட்ட பகுதி
* FIR (செந்நிற ஒளி)
* குளிரூட்டும் கதவு
* பல திசை காற்றோட்டம்
* 2லீ போத்தல் கொள்கலன்

* முழுமையான தன்னியக்க(Automatic) சலவை இயந்திரம்
* 6.5கிலோ
* (Fuzzy Logic) தொழில்நுட்பம்
* தண்ணீர் மின்சாரம் மீதப்படுத்தும்
* துவக்க கணக்கம் வசதி
* பாதுகாப்பு சாவி
* தண்ணீர் மட்ட காட்டி
* இருமடிப்பு மூடி

* தட்டைத்திரையில் தத்ரூபமான 350 watts ஒலிவன்மையுடைய தெளிந்த படங்கள்
* இரட்டை டியுனர் (PIP)
* டிஜிட்டல் turbo search
* நிகழ்ச்சி ஒழுங்குப்படுத்தல்
* சனல் பெயரிடல் நிரல் படுத்தல்
* 200 நிகழ்ச்சி சேகரிப்பு
* 5 ஒலி நிலைகள்
* தன்னியக்க சத்தம் சமநிலையாக்கம்

ABS GDH

மேலும் எம்மிடம் உள்ளது மேலைத்தேய உற்பத்திகள்
JVC Electrolux HOOVER Haier MITSUBISHI JBL ELBA TOTO

498, காலி றோட், கொழும்பு-03. தொலை பேசி: 565265-79.
யாழ் நகரில் எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.
யாழ்ப்பாண மின்னகம் (Jaffna Electricals), 94(6)-ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். உஷா ஏஜென்சி (Usha Agency),
145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். சுந்தர் சன் (Sundhar Son) - மானிப்பாய்
அபான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



. 2004

ன்று தேரில் பவனி வருகிறான்

நாளும் பல்வேறு விதத்தில், பல்வேறு கோணங்களில், பல்வேறு வண்ணங்களில் எம்பெருமான் முருகவேள் இங்கே காட்சி தருகின்றான்.

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒரு கை முகன் தம்பியே
நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்.

என்றபடி, முருகப் பெருமானை நாங்கள் நம்பிக்கையோடு வழிபாடு செய்தால் கைமேற் பலன் கிடைக்கும்.

தமிழ்க்கடவுள் முருகன். அவன் தேவர்கள் சிறை மீட்ட செல்வனாக, தேவசேனாதிபதியாக, குறவள்ளி மணாளனாக என்றும் இளமையுடன் அழகே வடிவாகக் காட்சி தரும்ஒரே ஆலயம் நல்லூர்.

பகல் திருவிழாவில் வேல் — வள்ளி — தெய்வானை வீதி வலம் வந்து அருள்பாலிக்கும் அழகிய காட்சி பார்ப்பதற்கு தெய்வீக உணர்வைத் தூண்டி விடும் அருட் காட்சியாகும்.

இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் ஆறுமுகப் பெருமான் அடியார் பெருமக்களுக்குக் காட்சி கொடுத்து அருள்பாலிப்பதற்காக வள்ளி ஒருபக்கம் இச்சா சக்தியாகவும், தெய்வானை மறுபக்கம் கிரியா சக்தியாகவும் அழகுற அமர்ந்துவர தங்கமயமான ஆபரணங்கள் ஜொலிக்க வெள்ளிப்பீடத்திலே தேரில் ஆரோகணிக்கப் புறப்பட்டுவருவார்.

மனத்தை ஈர்க்கும் மகோன்னதக்காட்சி

எல்லா அடியவர்களும் அரோஹரா கோஷமிட்டு பக்தி மேலீட்டினால் முருகா முருகா

மரபுக்கலைச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

என்று முழங்க, பஜனைக் கோஷ்டிகளும் கூட்டுப்பிரார்த்தனைகளும் காதுகளில் வந்து தேனாக இனிக்க, மங்கள இசையானது நாதஸ்வர, தவில் போன்றவற்றால். கான மழையாக முன்னே அதிர்ந்து ஒலிக்க, சித்திரத் தேரானது அசைந்து மெல்ல ஊர்ந்து வருங் காட்சி மனத்தை ஈர்க்க வல்லது; மகோன்னதமானது.

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவால் கட்டி விடப்பட்ட இந்த நல்லைக் கந்தன் ஆலயத்தில், இப்போதும் சுவாமி வீதிவலம் வருவதற்குப் புறப்படும்போது —கட்டியங்கூறும்போது — ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு சமுகா என்று இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சைவம் வளர்த்த இடம்

தமிழ் மன்னன் சங்கிலியனால் இராசதானியாக்கப்பட்டு புனித நகராகப் பிரகடனஞ் செய்யப்பெற்ற இந்த நல்லூர் ஒரு புண்ணியம் செய்த இடமாகும்.

ஏனெனில், சைவம் வளர்த்த சைவச் சான்றோர்கள் பலர் தோன்றி, வாழ்ந்து மறைந்த இடமாகவும் விளங்குவது இந்த நல்லூரே.

இங்கு திருவிழாத் தொடங்கி, அதாவது கொடியேற்ற நாள் முதலாக பூங்காவனம் ஈறாக ஆலயச் சுற்றாடலிலுள்ள தெருக்கள் யாவும் மூடப்பட்டுவிடும். எக்காரணம் கொண்டும் திருவிழா நேரத்தில் வீதிகளில் வாகனப் போக்குவரத்து நடைபெற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

உள்ளத்தைத் தொடும் காட்சி

அதிகாலை 4.30 மணிக்கே அடியார் பெருமக்கள் இங்கே வரத்தொடங்கிவிடுவார்கள். பிரதிஷ்டை எனப்படும்.

அங்கப்பிரதட்சணம் செய்து நேர்த்தியைப் பூர்த்தி செய்யும் அடியார்கள், முருகனுக்கு அரோஹரா, கந்தனுக்கு அரோஹரா, கடம்பனுக்கு, கார்த்திகேயனுக்கு, வள்ளி மணாளனுக்கு, புள்ளிமயில்வாகனனுக்கு என்றெல்லாம் உச்சரித்தவண்ணம் வரிசையாக உருண்டு வரும் காட்சி உள்ளத்தைத் தொட வல்லது.

அதே போன்று பெண் அடியார்களும் வீதி எங்கும் பக்தி மணங்கமழ அன்பின் வயப்பட்டு அடியழிக்கும் காட்சியையும் அழகுறக் காணலாம்.

அவனருளே வேண்டும்

இத்தனை பெருமையும், கீர்த்தியும், புகழும் மிக்க இந்த ஆலயம் யாழ்ப்பாணத்து மக்களுக்குப் பெருமையையும், புகழையும் அள்ளித் தருகிறது என்று கூறினால் மிகையாகாது.

வாழ்த்த வாய், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் இறைவன் தந்தது எதற்காக? தம்மை வழிபட்டு முக்தியின்பம் பெறும் பொருட்டே.

ஆகவே இன்றைய தேர்த் திருவிழா நன்னாளில் எல்லாம் வல்ல முருகப்பெருமானை, ஷண்முகா வா வா, சங்கடம் தீர்ப்பாய் வா என இரு கரங்கூப்பிச் சிரந் தாழ்த்தி வழிபாடு செய்து, கந்தனை மனதிலே சிந்தித்து நின்று, சேவித்து வந்தித்து வாழ்க்கை வளமுடன் அமைய அவனருளாலே வேண்டி, அவன் தாள் பணிந்தேத்துவோமாக.

தொல்லை வினை போக்கும்
நல்லைக் கந்தனே
இல்லையெனாது
வரமீந்தருள்புரிவாய்
ஐயனே!

தேரேறி வருகின்ற தேவாதி தேவனே!

தொல்லைவினை தீர்க்கும் கந்தனே குகனே
நல்லூரில் வீற்றிருக்கும் ஞானவடிவேலவனே!
கல்லையொத்த மனமும் கசிந்தே உருகிட
தேரறி வருகின்ற தேவாதி தேவனே!
இல்லையெனாது வரமீந்தருளும் சண்முகனே
வள்ளிதேவயானையுடன் திருக்காட்சிதாராய்!
நல்லைப்பதியுறையும் ஞானவேல் முருகா
நிம்மதி வேண்டித் துதிக்கின்றோம்
தினமும்!

ஆறுபடை வீடுகொண்ட திருமுருகா அவனியெல்லாம்
சிறந்த அருள் புரிவாய்
EverVision
Videography & Still Photography
Video Camera, VCR, & TV Repairs
Color Film Processing & Printing
Album Making & Didital Imaging
Audio Dubbing, Video Mixing & Titling
எவர்விஷன்
வீடியோ மற்றும் படப்பிடிப்பு
கணனி உதவியுடனான
டிஜிட்டல் முறை அல்பம் தயாரித்தல்.
கணனி மூல வீடியோ மிக்ஸிங்.
டைட்டில் ஓடியோ டப்பிங்.
வீடியோகமரா வீடியோடெக் ரீ.வி
பழுது பார்த்தல்.
Preserve your memorable events forever

ஆறுபடை வீடுகொண்ட திருமுருகா அவனியெல்லாம் சிறந்த அருள் புரிவாய்

நல்லி சில்க்ஸ்
கல்யாண பட்டுப் புடைவைகளின்
கைராசி நிறுவனம்...
Nalli Silks
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 2225573

புதிய
ராசி சில்க்ஸ்
திருமண பட்டுச் சாறிகள்,
சோளி கிற், சேட்டிங், சேட்ஸ்,
ஸ்கேட் & பிளவுஸ்,
இந்தியன் சாறி வகைகள்,
சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற
றெடிமேட் ஆடைகள்...
NEW
RASI SILKS
70,71A, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2225571

யாழ் Online
இணையத்திலும் உங்களுக்கு ஓர் இடம்!!
www.yarlonline.com
Services.....
1. Web Directory
2. Sub Domain
3. E-mail
& much.... much.... More.........
நிலவு.com
Dream Solutions Pvt Ltd.
275, Jaffna Road,
Manipay
Ph:- 0777-769751
0777-917599
Branch:- 0714801391

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி எனப் போற்றப்படும் ஈழ வள நாட்டில், கந்தபுராணக் கலாசாரம் மிக்க யாழ்ப்பாணத்தின் நல்லூரில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் முருகப்பெருமான் பல்லூர் மக்களுக்கும் அருள்சுரந்து கொண்டிருக்கிறார்.

அருள் தரும் நல்லைக் கந்தன் அலங்காரக் கந்தனாக, கலியுக வரதனாக, சித்தர்கள் கண்கண்ட தெய்வமாக, சைவத்தமிழ் மக்கள் இடர்தீர்க்கும் குமரனாக, வீற்றிருந்து பொன்னான நேரம் தவறாத பூசைகள் நடைபெற, அழகுமிகு திருக்கோயிலில் அருளாட்சி செய்கிறார்.

நல்லைக்கந்தன் தேர்த்திருவிழாவானது, மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படும் மகோற்சவத்தின் சிகரமான அமையும் திருவிழா ஆகும்.



சைவசமயத்தின் எழுச்சிவிழா, சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் பெருவிழா. உயர்ந்த கலாசாரமும் பண்பாடும் மிக்க யாழ்ப்பாண சைவ மக்களின் தேசியத் திருவிழா.

அழகிய சித்திரத்தேரில் ஆறுமுகப் பெருமான் ஆரோகணித்து வருகின்ற தெய்வீக அழகுக் காட்சியை நாங்கள் காண்கின்ற போது எமது உள்ளத்து அழுக்குகள் அகன்று, உள்ளம் தூய்மையும், அழகும் பெற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

கார்மயில் வாகனனை சாந்துணைப்
போதும்
மறவாதவர்களுக்கு தாழ்வில்லையே!

என்பதை மெய்ப்பித்துக் காட்டவும், 'துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்' என்பதற்கேற்பவும் ஆறுமுகச் செவ்வேள் பெருமான், வள்ளி, தெய்வயானை சமேதரராக, பக்தர்களுக்கு அருள்மழை பொழிய இன்றைய தினம் தேரேறி வருகிறார்.

அசையும் கோயிலாகவும், நடமாடும் மரச் சிற்பமாகவும், விளங்கும் தேரிலே மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் நல்லைக் கந்தன் ஆரோகணித்து வரும்போது, அப்பெருமானை நாங்கள் நாடி எங்கள் மனங்களை வெல்வோம்.

தேரின் இதயம் என்று சொல்லப்படும் பீடத்தில் முருகப் பெருமான் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது.

எங்கள் இதயத்தில் முருகப் பெருமானை இருத்தினால் எங்கள் வாழ்க்கை என்று தேர் சிறப்பாக ஓடும்.

தேர்த்திருவிழா அழித்தற் தொழிலைக் குறிக்கும். எமது உள்ளத்தில் உள்ள ஆவணம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் பேராசை, பொய், களவு, காமம் என்பவற்றையும் ஒடுக்கவே நல்லைக் கந்தன் தேரேறி வருகிறார்.

நல்லைக் கந்தனின் தேரின் கோபுரம் குவிந்து சென்று தேர்க்கலசத்தில் முடிய வெள்ளிக்குடை தெரிகிறது.

எமது மனம் ஒருமித்த ஒருமித்த சிந்தனையுடன் முருகப் பெருமானைத் தீர்மானிப்பதில் அவனது அருட்குடை நிழல் எம்மை இன்னல்களில் இருந்து காக்கும்.

நல்லைக்கந்தன் தேர்த்திருவிழாவின் போது ஏராளமாகக் குவிக்கப்பட்ட தேங்காய்கள் சிதறடிக்கப்படுகின்றன.

எங்கள் துன்ப, துயரங்களை சிதற வைப்பதையும், தேங்காயின் கடின ஓடு உடைந்து வெண்மையான உட்பகுதி தெரியச் செய்து மல நீக்கத்தைக் குறைப்பதாக உள்ளது. நல்லைக்கந்தன் ஆலயத்தில் முருகப் பெருமானை நாடி பக்தர்கள் செல்வார்கள். ஆனால் தேர்த்திருவிழா வந்து பக்தர்களை நாடி முருகப் பெருமான் வருவார்.

-நந்தன்-

இவ்வாறு பக்தர்கள் நாடி வரும் முருகப் பெருமானை நல்ல மலரெடுத்து நல்ல மனதோடு நாம் பணிந்தால் அப் பெருமான் எங்களைத் தேற்றி சிந்தனை தெளிவிப்பார்.

முருகா கலியுக வரதா சரணம் சரணம். உன் பாதம் பணிந்தோம் சரணம் என்று உள்ளம் உருகி அஞ்சலித்து நிற்கின்ற பக்தர்களுக்கு உள்ளத்தில் ஏதேனும் அச்சம் தோன்றுமாயின் உடன் ஆறுதல் வழங்கி காப்பாற்றவும், கொடிய போரில் ஈடுபட்டால் அஞ்சாதே இதோ நான் இருக்கிறேன் என்று காப்பதற்காக பக்தர்களின் அன்பு உள்ளத்



தின் மீதுதேரில் மிதக்கும் நல்லைக் கந்தன் வருகிறார்.

நல்லைக் கந்தன் தேரின் வடம் பிடித்திழுத்தால் முருகனிடம் நல்லதோர் இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பெரியோர்கள் சொல்லியதை எண்ணி திருத்தேர் வடம்பிடித்தால் ஆண்மை, அழகு, செல்வம்,எவரும் மதிக்கும் வளம் யாவும் பெருகும்.

முருகப் பெருமானை விரும்பி வழிபடும் அடியவர்கள் காதலால் கசிந்து கண்ணீர் மல்க உடல் புளகம் பெற்று பேரானந்தம் மென்மேலும் பெருக' முருகனுக்கு அரோகரா' என்ற கோஷம் வானைப்பிளக்க, கலியுகத்தின் பயன்தரு பஜனை காற்றில் கலக்க நாதஸ்வர கானமழை பொழியும்.

சித்திரத் தேரில் வருகின்ற முருகப் பெருமான் எமது இடர்களையெல்லாம் போக்கி இந்த நாட்டில் சாந்தியையும், அமைதியையும் ஏற்படுத்துவாராக.

அல்லல் வினைகள் தீர்த்தருளும் நல்லைக் குமரேசன் திருநாமம் போற்றி

Nature Lanka Travels and Tours (Pvt) Ltd.

உங்களுக்கு வேண்டிய சகல உள்ளூர், வெளியூர் நாடுகளுக்குமான

விமான பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சிரமமான பயணத்தை

சிரமமின்றி சொகுசு

பயணமாக வழங்குபவர்கள்

Nature Lanka Travels and Tours (Pvt) Ltd.,
7-2/6, 2nd Floor Orchard Complex, Colombo 06. (opp. Savoy Cinima)
Tel No.: 2 585977, 2 595025. Fax: 2 504725
(Air Ticketting and Tour Operators)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரி பிரச்சினையில் நழுவும் கர்நாடகாவும் காங்கிரஸின் துரோகமும்

தமிழ்நாட்டுக்கும் கர்நாடாகாவுக்குமிடையிலான காவிரி நீர்ப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆனால், பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகளுக்குத்தான் இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. காரணம் முற்றுமுழுக்க தமிழக அரசியல் வாதிகளே.

காலம் காலமாக மத்திய ஆட்சியைத் தீர்மானிப்பதில் தமிழகம் பெரும் பங்கு வகித்திருக்கிறது. லோக்சபா தேர்தல்களில் தமிழகத்தில் வெல்லும் கட்சி அல்லது கூட்டணியே மத்தியில் ஆட்சி அமைத்து வந்துள்ளது.

1980 முதல் நடந்த ஏழு லோக்சபா தேர்தல்களில் 6 தேர்தல்களில் இதுவே உண்மை. ஒரேயொரு விதிவிலக்கு 1989 தேர்தல் மட்டுமே.

ஆக, தமிழக எம்.பிக்கள் இன்றேல் மத்திய ஆட்சியே இல்லை என்னும் நிலையே இருந்துவந்துள்ளது. அதிலும் குறிப்பாகக் காங்கிரஸ் கட்சி தனது ஏகதர்பாரை இழந்து கூட்டணி ஆட்சிதான் இந்தியாவின் தலைவிதி என்றாகிவிட்ட 1989க்குப்பின்னான 15 ஆண்டுகளிலும் தமிழக எம்.பிக்கள் இன்றேல் டில்லி ஆட்சி கவிழும் என்ற நிச்சயமான நிலை இருந்துவந்துள்ளது.

இப்படி இருக்க, தமிழகத்துக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய காவிரி நீர் ஏன் கர்நாடகாவினால் தரப்படவில்லை? இதை அடுத்தடுத்து வந்த மத்திய அரசுகள் ஏன் தட்டிக்கேட்கவில்லை? இங்கு தான் தமிழக அரசியல்வாதிகளின் சுயலாபம் தோலுரித்துக்காட்டப்படுகிறது. தமிழகக் கட்சிகளோ, எம்.பிக்களோ காவிரி நீர் தராவிட்டால் மத்திய அரசுக்கு ஆதரவு அளிக்க மாட்டோம் என்று ஒரு போதும் நிர்ப்பந்திக்கவில்லை. நரசிம்மராவ், தேவகவுடா, குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன் சிங் என சகல பிரதமர்களும் தமிழக அரசியல் வாதிகளுக்கு மத்திய மந்திரிசபையில் உச்சப் பதவிகளை வழங்கி, அவர்களை வாயைத் திறக்காமல் பார்த்துக்கொண்டனர்.

சிதம்பரம் உயிரோடு உள்ளவரை அவரே காங்கிரஸ் நிதியமைச்சர் என்னுமளவுக்கு செல்வாக்குமிக்க பதவி அவருக்கு வழங்கப்படுகிறது. பிரதி அமைச்சர் பதவிகளும் அள்ளி வழங்கப்படுகின்றன.

இம் முறை பதவி ஏற்ற மன்மோகன் சிங் அரசில்தான் வரலாற்றில் தமிழகத்துக்கு அதிக அமைச்சர் பதவிகள் தரப்பட்டுள்ளன. மன்மோகன் சிங் அனுபவமிக்க அரசியல் வாதி அல்ல. எனினும் காவிரிப்பிரச்சினையில் தமிழக அரசியல்வாதிகளுக்கு வாய்ப் பூட்டுப்போட நல்ல உத்தியை அவர் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை மறுக்க முடியாது.

தி.மு.க முரண்டுபிடித்து முக்கிய அமைச்சர் பதவிகளை வாங்கிக் கொண்டது. வைகோ அமைச்சர் பதவியை ஏற்கவில்லை. காரணம் பொடா சட்டத்தை நீக்குவது அவருக்கு மிக முக்கியம். அமைச்சர் பதவியை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்பது அவர் எண்ணம். பா.ம.க. தலைவர் ராமதாஸோ தனது மகனான டாக்டர் அன்புமணிக்கு முக்கியமான சுகாதார அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டுவிட்டார். இதைவிட இக்கட்சிகளுக்குத் தேவை வேறென்ன?

கருணாநிதி — ஜெயலலிதா — மன்மோகன் சிங்

மேற்கூறிய வாதத்தை ஜெயலலிதாவும் முன் வைக்கிறார். கர்நாடகாவிலும், மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சியே உள்ளது. எனவே காங்கிரஸின் கூட்டாளியான தி.மு.க.வும் பா.ம.க.வும் காவிரிநீரைப் பெற்றுத்தர வேண்டும் என்பது அவரது வாதம். இதே ஜெயலலிதா ஆதரவில் தான் 1998–1999 வரை பி.ஜே.பி அரசு நடந்துவந்தது. அப்போது மாநிலத்தில் தி.மு.க அரசை பதவி நீக்க வேண்டும் என்பது தான் ஜெயலலிதாவின் பிரதான கோரிக்கையாக இருந்தது. அதைச் செய்ய வாஜ்பாய் மறுத்ததால் அவரது அரசை ஜெயலலிதா கவிழ்த்தார். கவிழ்த்து விட்டுச் சொன்ன காரணம், காவிரி நீர் தரவில்லை என்பது. ஆக, எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே என்பது தெளிவு.

1991–1996 காலத்தில் முதல்வராக இருந்தபோது ஜெயலலிதா காங்கிரஸ் அரசை நிர்ப்பந்திக்கத் தவறினார். வெறுமனே தமிழகத்தின் காங்கிரஸ் அமைச்சர்களான சிதம்பரம், வாழப்பாடி முதலானோரை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றார். சிதம்பரம் மறுக்கவே அவருக்குத் தமிழகத்தில் கல்லெறியப்பட்டது. வாழப்பாடி ஜெயலலிதாவுக்குப் பணிந்து மத்திய அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்தார்.

திராவிடக் கட்சிகளின் கூத்து இப்படி இருக்க காங்கிரஸின் துரோகமோ எல்லை மீறிச் சென்றுகொண்டிருக்கிறது. 8 ஆண்டுகள் மத்தியில் அரசாட்சியை இழந்து தடுமாறிய காங்கிரஸ், இன்று டில்லி அரியணையில் ஏறியிருக்கிறது என்றால் காரணம் தமிழகமே.

தமிழகத்தின் சகல 40 தொகுதிகளிலும் காங்கிரஸ் கூட்டணி வென்றது, காங்கிரஸ் ஆட்சியமைக்க முக்கிய காரணம். இந்த எம்.பிக்கள் அனைவரும் இணைந்தால் மன்மோகன் அரசுக்கு கல்தா தான். ஆனால் அது தான் நடக்கப்போவதில்லையே.

வெறும் 6 எம்.பிக்கள் தான் கர்நாடகாவில் காங்கிரஸுக்கு உண்டு. ஆனால், கர்நாடகாவில் காங்கிரஸ் ஆளும் கட்சி, தமிழகத்திலோ 1967க்குப்பிறகு காங்கிரஸ் ஆட்சி வரவேயில்லை. மூன்றாவது, நான்காவது இடத்தில் தான் கட்சி உள்ளது. இது தான் காவிரி நீர்ப்பிரச்சினையில் காங்கிரஸின் நிலைப்பாட்டுக்குக் காரணம். காவிரியால் கர்நாடகாவில் தமிழர்களுக்குஎதிரான இனக் கலவரம் கூட நடந்தது காங்கிரஸ் ஆட்சியில் தான்.

தமிழகத்துக்கு காவிரி நீர் கொடுத்துவிட்டால், தமிழக ஆட்சியை காங்கிரஸிடம் தமிழக மக்கள் தாரை வார்த்துக் கொடுக்கப்போவதில்லை. மாறாக காவிரிநீரை தமிழகத்துக்குத் தந்தால் கர்நாடகாவில் காங்கிரஸ் என்ற கட்சியே இல்லாமல் போய்விடும்.

ஏற்கனவே கர்நாடகாவில் பி.ஜே.பியின் செல்வாக்கு சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. சமீபத்திய சட்டசபை மற்றும் லோக்சபா தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி கணிசமான தோல்வி கண்டது. எனினும் முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கட்சி பி.ஜே.பியை எதிர்ப்பதற்காக காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதால் காங்கிரஸ் கட்சி காவிரிநீரைத் திறந்துவிட முடிவு எடுத்தாலும், தேவகவுடா கட்சி அதற்கு இணங்காது.

இந்த நிர்ப்பந்தங்களால் தான் சோனியா காந்தி இது விடயத்தில் தலையிடாததற்கு காரணம். கடந்த தேர்தலில் சோனியா தமிழகத்தில் பெரிதாகப் பிரசாரம் செய்யவில்லை.

எனினும், அவரது கட்சியையும் கூட்டணியையும் தமிழகம் தெளிவாக ஆதரித்தது. எனினும் கர்நாடகாவை மீறி தமிழகத்துக்கு நீர் தர சோனியா முன்வரவில்லை.

காவிரி நடுவர் மன்றத்தின் உறுப்பினர்களை மாற்ற வேண்டுமென கர்நாடகா அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது. காவிரி நீரைத் திறந்துவிட வேண்டும் என்று நடுவர் மன்றம் பலமுறை தீர்ப்புக்கூறியும் கர்நாடகா மசியவேயில்லை. உச்ச நீதிமன்றில் பல பொதுநல அமைப்புகள் தமிழகம் சார்பில் மனுச் செய்து, அவற்றை ஆதரித்து நீதிமன்றம் பலமுறை தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. காவிரி நீர் தான் வரவில்லை.

காவிரி நடுவர் மன்றம்தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதிகளுக்கு விஜயம் செய்ய இருந்தது. அதை எதிர்த்து பெங்களூர் காந்தி சமுர்த்தி என்ற அமைப்பு மனுப் போடவே உச்ச நீதிமன்றம் நடுவர் மன்றத்தின் விஜயத்துக்கு தற்காலிகத் தடை போட்டுள்ளது. நடுவர் மன்ற விஜயத்தால் காவிரி டெல்டா பகுதிகளின் பரிதாப நிலை தெரிய வரக்கூடாது என்பதே இந்த பெங்களூர் அமைப்பின் நோக்கம்.

கர்நாடகத்தில் ஆட்சிக்கு இந்தா வருகிறோம் என்று பலமான நிலையிலுள்ள பி.ஜே.பிகூடத் தமிழகத்துக்காக குரல் கொடுக்கத் தயாரில்லை.

ஏனெனில் காங்கிரஸ் போலவே தமிழகத்தில் பி.ஜே.பியும் ஆட்சிக்கு வரக்கூடிய கட்சி அல்ல. ஆனால், கர்நாடகத்திலோ நிலைமை வேறு. இப்படி எல்லோராலும் கைவிடப்பட்ட தமிழகம் நீதி, நியாயத்தை எதிர்பார்த்து இன்னும் காத்திருக்கிறது.

-எஸ். சுரேந்திரஜித்

சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
6.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா		
6.59	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீ லங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	நிகழ்ச்சி ஆரம்பம்	நிகழ்ச்சி ஆர[illegible]
7.00	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி		
7.05	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் [illegible]கா
7.30	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங்[illegible]கா
8.00	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	சங்கீதமேடை 7.55 அன்பு மடல்	குட்மோர்னிங் [illegible]கா 7.55 அ[illegible]மடல்
8.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்டி சுட்டி	ஒருகதையின் [illegible]த
9.00	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்டி சுட்டி	சிறுவர் நிகழ்[illegible]
9.30	இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம்	இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம்	இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம்	கோலங்கள்	கோலங்கள்	ஹொலிவூட் மூவி	அரட்டை அரங்[illegible]
10.00	பெப்சி உங்கள் சொய்ஸ்	தில்லானா தில்லானா	பாட்டுக்குப்பாட்டு	இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம்	இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம்	குட்டி சுட்டி	ஞாயிறு சமை[illegible]
10.30	நெஞ்சில் நின்ற ராகங்கள்	சுகமான ராகங்கள்	ஆடலும் பாடலும்	நம்ம நேரம்	கொண்டாட்டம்	ரீபீஏ	சப்தஸ்வரங்க[illegible]
11.00	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	இனிய கானங்கள்	இசைத் தென்றல்	ரீபீஏ	டாப்10 மூவிஸ்
11.30	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	இப்படிக்கு நீங்கள்	கோல்டன் மூமன்ஸ் ஒப் [illegible]கெட்
12.00	நட்சத்திரம்	திரை வானம்	சண்டே சமையல்	ஆனந்தம்	ஆனந்தம்	சினி சொய்ஸ்	சின்ன சின்ன ஆசை[illegible]கள்
12.30	செய்திகள்(எம்.ரீ.வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	மங்கை	மங்கை	ரிலாக்ஸ் டைம்	சின்ன சின்ன ஆசை[illegible]கள்
1.00	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	செய்திகள்(எம்.ரீ.வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	ரிலாக்ஸ் டைம்	ஸ்டார் ஸ்பெஷ[illegible]
1.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	வீக் என்ட் மேடனி	வீக் என்ட் மேட்னி
2.00	(றொமான்ஸ்)	(அக்சன்)	(கொமடி)	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
2.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	(கிளசிக்)	(பமிலி)	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.00	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
4.00	டிஸ்னி வேல்ட்	டிஸ்னி வேல்ட்	ஒரு கதையின் கதை	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
4.30	கார்ட்டூன் நிகழ்ச்சி	கி–மேன்	தமிழ் கார்ட்டூன்	கில்லி	கில்லி	விக்கிரமாதித்தன்	ஜீ பூம்பா
5.00	கொண்டாட்டம்	சினி சொய்ஸ்	ஸ்டார் ஸ்பெஷல்	தமிழ் கார்ட்டூன்	மலரும் மொட்டும்	விக்கிரமாதித்தன் சின்புமடல் 4.55	ஒப்போடு
5.30	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	சுப்பர் சீன்ஸ்	என்றும் கலாட்டா	மிஸ்டர்.பீன்	"24" அக்ஷன் ந[illegible]கம்
6.00	களம்	இளைய கானம்	ஒப்போடு	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	ஸ்டாருடன் ஒரு நாள்	"24" அக்ஷன் ந[illegible]கம்
6.30	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	பாடல்கள்/இளந்தளிர் 6.15	கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட்	ஸ்டாருடன் ஒரு நாள்	மின்னல் 5.55 அ[illegible]மடல்
7.00	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	திமி தக்க தா	மின்னல்
7.30	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	அலையஸ்	வேலன்
8.00	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	அலையஸ்	வேலன்
8.30	அண்ணாமலை	அண்ணாமலை	அண்ணாமலை	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திக[illegible]
				அண்ணாமலை	அண்ணாமலை	ருத்ர வீணை	இளைய கான[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகும் போதும் அறிவாளியாகச் சாக விரும்பிய உத்தம் சிங்

அண்டைய நாட்டு வரலாற்றில் ஓர் பார்வை

''அன்புள்ள நண்பா,''

''என்னை கருணை மனுப் போடச் சொல்லுகிறாய்? தயவுசெய்து உன் சக்தியையும், பணத்தையும், நேரத்தையும் இப்படிப் பட்ட காரியங்களில் ஈடுபட்டு வீணடிக்காதே.

''சிறையில் வெறும் கைதியாக நான் இல்லை! மாட்சிமை தாங்கிய அரசின் விருந்தினராகத்தான் தங்கி இருக்கிறேன். தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நாளை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

என் உடல் எடை கூடக் கூடியுள்ளது என்றால் பார்த்துக்கொள்ளேன். எனது மகிழ்ச்சியையும், பூரிப்பையும் உணர்த்த இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் உனக்கு.

''இப்போதாவது என்னைச் சரியாகப் புரிந்து கொள்! நல்ல புத்தகங்கள் கிடைத்தால் தாமதிக்காமல் உடனே எனக்கு அனுப்பிவை. அதைத்தான் உன்னிடம் எதிர்பார்க்கிறேன். சாகும் போது, நான் முன்னிலும் அறிவாளியாகச் சாக விரும்புகிறேன்.''

''தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் இப்படிக் கடிதம் எழுதுவார் எனில் அவரின் நெஞ்சுறுதி தான் எப்படிப்பட்டதாக இருக்க முடியும்? அதற்கு ஆதாரமான இலட்சிய உறுதியை என்னவென்று சொல்வது? அதுவும், அந்த இளைஞன் 21 வருடம் அக்கினிக் குஞ்சை அடைகாத்து வைத்திருந்து செய்து முடித்தான் என்றால் வரலாற்றில் மறக்கக்கூடிய பெயரா அது?

அவன்தான் உத்தம் சிங். 1899 டிசம்பர் 26 ஆம் நாள் டெகால் சிங் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தான். இரண்டு வயதில் தாயையும், ஏழு வயதில் தந்தையையும் இழந்துவிட்டான். இவனது அண்ணன் சாந்த சிங். இருவரும் புத்லிகர்அனாதை விடுதியில் தங்கிப் படித்தனர்.

1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன் வாலா பாக் கொடுமையை கண்ணால் பார்த்தவன் உத்தம் சிங். தன் பள்ளி நண்பர்களுடன் லாந்தர் விளக்கைக் கையிலேந்தி இருள் சூழ்ந்த ஜாலியன் வாலாபாக் மைதானத்துக்குள் நுழைந்து குண்டடிபட்டு நா வறண்டு கிடந்த பலருக்குத் தண்ணீர் கொடுத்தான்.

சிலர் ஒருமிடறு தண்ணீரோடு துடிக்கத் துடிக்க இறந்ததைக் கண்ணால் பார்த்தான். பலரை வெளியே கொண்டு சென்று உறவினரிடம் சேர்த்தான். அப்போதே தன் நண்பர்களிடம் ஜெனரல் டயரையும், கவர்னர் டயரையும் பழி தீர்ப்பேன் எனச் சபதம் பூண்டான்.

அதற்காக அவன் காத்திருந்தது நாட்களல்ல, வருடங்கள்21.

இதில் ஒரு விசித்திர சம்பவம் என்னவென்றால், 1918ஆம் ஆண்டு லாகூர் சதி வழக்கில் நவீன அபிமன்யு என்று அழைக்கப்பட்ட விஷ்ணு கணேஷ் பிங்களேக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அங்கு கவர்னராக இருந்த டயர் சிறையைப் பார்வையிட வந்தபோது விஷ்ணு கணேஷிடம், ''நீங்கள் ஏன் கருணை மனுப் போடவில்லை?'' என்று கேட்டபோது, அவர் சீறிப்பாய்ந்தார் ''சுத்தமான இந்தியன் எவனும் இதைச் செய்யமாட்டான்.

நீங்கள் தான் எங்கள் இந்திய இளைஞர்களிடம் கருணை மனுப்போட்டு உயிர்ப் பிச்சை கேட்க வேண்டும். இல்லையேல் நீங்கள் இங்கிலாந்துக்குப் போனாலும் அங்கே துரத்தி வந்து தண்டிப்போம்'' என்றார்.

விஷ்ணு கணேஷ் தூக்கிலிடப்பட்டு விட்டார். உத்தம் சிங் அவரது வாசகத்திற்கு உயிர் கொடுத்தார். இரண்டு டயர்களும் லண்டனுக்குப் போய்விட்டனர். இருவரையும், அவர்களுடன் இந்திய மந்திரி ஷெட்லாண்டையும் தீர்த்துக்கட்ட லண்டன் போகத் திட்டமிட்டான் உத்தம்சிங்.

ஒரு வழியாகத் தென் ஆபிரிக்கா செல்லும் வர்த்தகக் கப்பல் ஒன்றில் பணியாளராக தென் ஆபிரிக்கா சென்றான். அங்கிருந்து அமெரிக்கா சென்றான். அங்கிருந்து 1923இல் இங்கிலாந்துக்குப் பொறியியல் கல்லூரி மாணவனாய் பறந்து சென்றான். இப்படிச் செல்ல வெளிநாடுகளில் வாழ்ந்த புரட்சியாளர்கள் உதவினர்.

இந்த நிலையில் ''உத்தம் சிங்! புரட்சி இயக்கத்திற்கு உன் போன்ற சுத்த வீரர்களின் சேவை தேவைப்படுகிறது. உடனே புறப்பட்டு வந்து சேர்! பகவத் சிங்கின் அழைப்பு வந்தது. இந்த அழைப்பைப் பார்த்தும் இந்தியா வந்தான் உத்தம் சிங். ஆனால், இந்தியாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டான்.

சிறை மீண்டதும் ஜேர்மனிக்குப் பறந்தான். அங்கிருந்து கார் மெக்கானிக் பயிற்சி பெறச் செல்லும் பொறியியல் கல்லூரி மாணவனாக லண்டன் போய்ச் சேர்ந்தான்.

அங்கு பல நாட்கள் தனது கனவை ஈடேற்ற டயரையும், ஷெட்லாண்டையும் தேடி அலைந்தான்.

ஜெனரல் டயர் பக்கவாதம் தாக்கி உயிரிழந்து விட்டார். கவனர் டயரும், ஷெட்லாண்டும் மட்டுமே உயிருடன் இருப்பதை அறிந்தான். அவர்களையாவது கொன்று பழி தீர்க்க வெறி கொண்டான். அவர்கள் பற்றிய விவரங்களைத் துல்லியமாகச் சேகரித்தான்.

இதற்கிடையில் 1940 மார்ச்13 அன்று லண்டன் காகஸ்டன் ஹோலில் ஒரு கருத்தரங்கில் டயரும், ஷெட்லாண்டும் பேசப்போகின்ற செய்தியைப் படித்த உத்தம்சிங், மகிழ்ச்சி கொண்டான்.

இருவரையும் ஒரே நேரத்தில் கொல்ல வாய்ப்புக் கிடைத்த மகிழ்ச்சி.

நிகழ்ச்சி தொடங்கியது. மேடைக்கு முன் புறத்தில் நாலாவது வரிசையில் உத்தம்சிங் உட்கார்ந்து கொண்டான். டயர் சிறப்புரை ஆற்றி விட்டு அமர்ந்தார். மேடைக்குச் சென்ற உத்தம்சிங் ரிவால்வரை எடுத்து டயரை ஆறு முறை சுட்டான், பின்பு ஷெட்லாண்டையும் நோக்கி இரண்டுமுறை சுட்டபின் பொலிஸாரிடம் சரணடைந்தான்.

விசாரணையின் முழுவிபரமும் பத்திரிகைகளில் வெளியிடப்படவில்லை. காரணம் உத்தம்சிங் கூறிய பதில்கள் பிரிட்டிஷாருக்கு தர்மசங்கடத்தை உருவாக்கின. எனவே இரகசியமாக விசாரணை நடத்தினர். ஆயினும், ஆவணங்களிலிருந்து சில செய்திகள் வெளிவந்துள்ளன. உன் பெயர் என்ன? —ராம் முகமது சிங் ஆசாத்

நீ இந்துவா? சீக்கியனா? முஸ்லிமா? —நான் இந்தியன்

உன் முகவரி?— இந்தியா

இப்படிப் பதில் கூறினான் உத்தம் சிங். மதங்களுக்கு அப்பால் தம்மை இந்தியன் எனப் பிரகடனப் படுத்திக் கொண்டான். உத்தம்சிங்கின் பெயரைத் துப்பறிய பிரிட்டிஷாருக்கு பெரும் சங்கடம் ஏற்பட்டது.

ஜாலியன் வாலா பாக் சம்பவத்திற்கு பழி வாங்கவே தாம் இதைச் செய்ததாக கம்பீரமாகப் பிரகடனம் செய்தான் உத்தம்சிங்.

அவர்கள் தாய் நாட்டு மக்களின் உணர்ச்சிகளை நசுக்க முயன்றனர். அதனால் நான் அவர்களை நசுக்க விரும்பினேன். திட்டமிட்டேன், நசுக்கினேன் என்றான் அவன்.

1940 ஆண்டு ஜூலை 31ஆம் திகதி பென்டோன் வில்லி சிறையில் உத்தம்சிங் தூக்கிலிடப்பட்டான்.

சாந்தையூரான்

ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 13—09—2004, 19—09—2004

பொ. சந்திரன்

இவ் வார கிரகநிலை

	ராகு		சனி
	செவ்வாய் உத்தரம் சூரியன் சுக்கிரன் பூசம் ஆயிலி சனி புத புதன் பூரம் சுக்கிரன் சூரியன் உத்தரம் சூரியன் குரு உத்தரம் சூரியன் சனி புனர்பூசம் குரு		சுக்கிரன்
			புதன் சூரியன் செவ்
		கேது	குரு

ஆவணி 21 முதல் ஆவணி 27 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.

ராசிக்குரிய செவ்வாய் ஐந்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால், சூரிய சாரம் பெற்று இருப்பது ஆறுதல் உண்டு. ராசியில் ராகு இருப்பது கூடாது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது திருமண பலன் உண்டு. கையில் பணம் இருக்கும். 7இல் கேது இருப்பது குடும்ப அமைதியைக் கெடுக்கலாம். சுக்கிரன் நாலில் சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது தொழில்துறை முன்னேறும். இருப்பினும் குரு ஆறில் மறைவது நல்ல பலனுக்குத் தடை வரக்கூடும். ஒன்பதாம் ஆதித்தியம் குரு பெறுவதால் பிதாவுக்குக் கூடாது. அதிஸ்டம் இருக்காது.12ஆம் ஆதித்தியம் பெறுவதால் சயன சுகம் குறையலாம்.

இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2

ராசிக்குரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது சிறப்பானது. மேலும் சனி, புதன் ஆகிய கிரக சாரத்தில் இருப்பதும் விசேஷமான பலனைச் செய்யும். எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. நலாம் வீடு பலம் பெற்று இருந்தாலும், அங்கு இருக்கும் கிரகங்கள் அவ் வீடுகளில் நன்மை செய்ய வாய்ப்பு இல்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய செவ்வாய் நாலில் இருப்பது நல்லதல்ல. ஆனால் குரு ஐந்தில் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பைக் கொடுக்கலாம்..தர்மகர்மாதியனான சனி இரண்டில் இருப்பது தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் இருக்காது. இரண்டில் சனி இருப்பது பணப்பற்றாக்குறை இருக்கும்.

மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

(1,4) உரிய புதன் மூன்றாம் வீட்டில் இருப்பது நல்லதல்ல. ஆனால் சுக்கிர சாரம் பெற்று இருப்பது, ஓரளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். ராசியில் சனி இருப்பது மன அமைதியைக் குழப்பலாம். இரண்டில் சுக்கிரன் இருப்[illegible]ம் இருக்கும். (7,10) உரிய குரு நாலாம் வீட்டில் இருப்பது நன்[illegible] செய்யாது. மாறாக கேந்திராதிபத்திய தோசம் கொடுக்கலாம். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ராகு, கேதுக்கள் எல்லாக் கிரகங்களையும் அடைப்பது பின்னடைவைத் தரலாம்.

கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

ராசியில் சுக்கிரன் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வார இறுதியில் (வாரக்கடைசியில்) பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டில் சூரியன், செவ்வாய் இருப்பினும் புதன் இருப்பதால் கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் உதவுவர். மூத்த சகோதரத்துக்கும் நல்லபலன் உண்டு. (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்புத் தடைப்படலாம். 10 இற்குரிய செவ்வாய் 2இல் இருப்பதால் தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. ஆனால், பக்க உதவிகள் கிடைக்கும். குரு மூன்றில் மறைவது குறை.

சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.

ராசிநாதன் சூரியன் ஆட்சியாக இருப்பது நல்லது. தன் சொந்த சாரத்தில் இருப்பதும் சிறப்பு. புதன் அங்கு இருப்பது விசேஷம். செவ்வாய் அங்கு இருப்பது நன்மை இல்லை. மேலும் சனி பார்ப்பதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டாம் வீட்டில் குரு இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. பெற்றோருக்குக் கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ராசிக்கிருபுறமும் சுபக்கிரகங்கள் இருப்பது சிறப்பானது. குருவின் இருப்பும் நல்ல பலனைக் கொடுக்கும்.

கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1,10) உரிய புதன் 12 இல் இருப்பது சிறப்பில்லை. சுக்கிரனின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலனைக் காட்டும். (4,7) உரிய குரு ராசியில் இருப்பது சிறப்பில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழிலுக்குரிய புதன் 12இல் இருப்பது தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ராகு, கேது எல்லா கிரகங்களையும் அடைப்பது முன்னேற்றத்துக்குத் தடை. புதனைச் சனி பார்ப்பதும் கூடாது.

துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.

ராசிக்குரிய சுக்கிரன் பத்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால், ஆரம்பத்தில் சனியின் சாரத்திலும், பின்பு புதனின் சாரத்திலும் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ராசியில் கேது இருப்பதும் நல்லதல்ல. குரு 12 இல் மறைவதும் கூடாது. (2,7) உரிய செவ்வாய் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு.7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம்.10இல் சுக்கிரன் இருப்பதால் தொழில்துறையில் [illegible] முன்னேற்றம் இருக்காது. குரு மறைவதால் நல்ல [illegible] தாமதமாகலாம்.

விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை

ராசிக்குரிய செவ்வாய் 10இல் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. சூரிய சாரத்தில் இருப்பதால் ஓரளவு ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி பாதிக்கலாம். (2,5) உரிய குரு 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம்.இளைய சகோதரத்துக்கும் நல்லதல்ல. (7, 12) உரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10இல் சூரியன் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராகு, கேதுவை விட்டு ராசி விலகி இருப்பது மன அமைதியையும், சுதந்திரத்தன்மையையும் கொடுக்கும்.

தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.

(1,4) உரிய குரு 10இல் இருப்பது அதிகம் நன்மை செய்ய வாய்ப்பில்லை. ஆனால், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (2,3) உரிய சனி 7இல் இருப்பது கையில் பணம் இருக்காது. (7,10) உரிய புதன் 9இல் இருப்பது நன்மை செய்யாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசியை சனி பார்ப்பதும் தொல்லை தான். மன அமைதி இருக்காது. தேவையில்லாத பிரச்சினை வீடு தேடிவரும். ராசியும் அதற்கும் இருபுறமும் கிரகங்கள் இல்லாது இருப்பது பாதுகாப்பற்ற நிலை.

மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாகும். கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் நல்லதல்ல. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம்.7இல் சுக்கிரன் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் அமைதி இருக்காது. இருப்பினும் குரு 9இல் இருந்து ராசியைப் பார்ப்பதால் குடும்பத்தில் சுபகாரியம் நடக்கப் பலன் உண்டு. பத்துக்குரிய சுக்கிரன் 7இல் இருப்பதால் தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பதை நஞ்சுச் சனி என்பர். நன்மை செய்யாது. ஆனால், குருவின் சாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம்.(4,9) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தொழிலுக்குரிய செவ்வாய் 7இல் இருப்பதால் தொழில் துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது.7இல் புதன், செவ்வாய், சூரியன் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்ப அமைதியும் கெடலாம்.

மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

(1,10) உரிய குரு 7இல் இருப்பது சிறப்பானது. மேலும் சூரியனின் சாரத்தில் இருப்பதும் விசேஷமானது. எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் 6இல் இருப்பது கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. (4,7) உரிய புதன் 6இல் இருப்பது வீடு, வாகனம் லாபம் தரும். தாய்க்கு நல்ல பலன் காட்டும். திருமண வாய்ப்பு உண்டு. 10ஆம் வீட்டையும், ராசியையும், 7ஆம் அதிபன் புதனையும் சனி பார்ப்பது கூடாது. தடைகளை ஏற்படுத்தலாம். இருப்பினும் 7இல் உள்ள குரு ராசியைப் பார்ப்பதால் சகல தோசத்தையும் நிவர்த்தி பண்ணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்தை வென்று சாதித்தார் பாலஸ்தீன வீரர் ஹசாம் அசம்

நம் நாடு ஒலிம்பிக்கில் ஏன் சாதிக்க வில்லை என்றால்....? போதிய வசதிகள் இல்லை என்பர். இன்னும் சிலர் வெளிநாடு சென்று பயிற்சிகளை மேற்கொள்ள இயல வில்லை என்று சாக்குப் போக்கு சொல்வர். இவர்கள் மத்தியில் ஊனத்தைவென்று சாதித்திருக்கிறார் ஒருவர்.

அவர்தான் ஹசாம் அசம். பாலஸ்தீன வீதிகளில் இவரது பெயர் ரொம்பவும் பிர பலம். மூன்று வயதில் போலியோ பாதிப்பில் கால் ஊனம். வசிப்பதோ அகதிகள் முகா மில். அன்றாட பிழைப்போ உதவித்தொகை யில். குறுகிய வீதிகளில் சக்கர நாற்காலி யில் பயணம்.... என ஏகப்பட்ட கஷ்டங் களைக் கடந்து சாதித்துக் கொண்டி ருக்கிறார் இவர்.



கடந்த 2000 சிட்னியில் நடந்த பாராலிம் பிக்கில் குண்டு எறிதல் போட்டியில் வென்ற வெண்கலத்துடன் ஹசாம் அசம்.

பாராலிம்பிக்

ஒலிம்பிக் போட்டி முடிந்த நிலை யில் இன்னொரு மாபெரும் விளை யாட்டு போட்டிக்குத் தயாராகிறது கிரீஸ் தலைநகர் ஏதென்ஸ். எதிர்வரும் 17 ஆம் திகதி ஊனமுற்றோருக்கான பாராலிம்பிக் போட்டியே அதுவாகும்.

இதில் உலகம் முழுவதிலும் இருந்து 145 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற் கின்றனர். இப்போட்டியில் தங்கம் வென்று சாதிக்க காத்திருக்கிறார் ஹசாம் அசம். கடந்த முறை சிட்னியில் (2000) நடந்த பாராலிம்பிக் குண்டு எறிதலில் இவர் வெண்கலம் வென் றுள்ளார்.

கடினப் பாதை

ஹசாம் கடந்த பாதை மிகவும் கடினமானது. இவருக்கு 3 வயதிருக் கும்போது போலியோ நோய் இவரைத் தாக்கியது. இதனால் கால்கள் ஊன மானது. நடக்க முடியாத போதும் இவருக்கு விளையாட்டு மீது தணியாத தாகம். பத்து வயதில், இந்த சமூகத் துக்கு ஏதாவது ஒரு முறையில் பய னுள்ளவனாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். அதன்படி விளை யாட்டு மூலம் நாட்டுக்கு பெருமை தேடித்தர முடிவும் எடுத்தார்.

இதன் முதல்கட்டமாக மேசைப்பந்து விளையாட முயற்சித்தார். ஆனால் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் கேலி செய்தனர். இந்தக் கிண்டல் பேச்சுகளால் இவர் துவண்டு விடவில்லை. மாறாக இவரது மன உறுதிதான் அதிகரித்தது.

"இந்தக் கிண்டலுக்கு முற் றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். தேசத்துக்கும் குடும்பத்துக்கும் பெருமை சேர்க்க உறுதி மேற் கொண்டேன். இளம் வயதுப் பிரிவை எட்டியதும் குண்டு எறிதல், தட்டெறிதல் போட்டி களில் முழுமையாக கவனம் செலுத்தினேன். விளைவு...? சிட்னி ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றேன். இனி ஏதென்ஸி லும் சாதிப்பேன்" என்கிறார் நம்பிக்கையுடன் ஹசாம்.

தீவிர பயிற்சி

சர்வதேச அரங்கில் ஹசாம் பிரகாசிப்பதற்கு அவரது தீவிர பயிற்சியே முக்கிய காரணம். வாரத்தில் 6நாட்கள் பயிற்சி செய்கிறார். வெள்ளிக்கிழமை தொழு கைக்கான நாள் என்பதால் மட்டும் ஓய்வு எடுத்துக் கொள் கிறார். இவரது ஆர்வம் கண்டு ஜெர்மனி அரசு இவருக்கு 'ஜிம்' அமைக்கத் தேவையான உபகரணங்களை நன்கொடை யாக அளித்தது. இந்த 'ஜிம்' காசா தெருவில் உள்ளது.



ஏதென்ஸ் பாராலிம்பிக்கில் தங்கம் வெல்லும் முனைப்புடன் பயிற்சியாளர் முஹமது டமான் உதவி யுடன் பயிற்சி மேற்கொள்ளத் தயாராகும் ஹசாம்

இங்கு வந்து எடை தூக் கிப் பயிற்சி செய்யவும் இவர் மிகவும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. சக்கர நாற்காலியையும் தூக்க வேண்டும் என நினைத்து கார் ஓட்டுனர்கள் என்னை ஏற்ற மறுத்து விடுவார்கள். சிலர் நடு வீதியிலேயே இறக்கி விட்டுச் செல்கின்றனர். பின்னர் பல கிலோமீற்றர் சக்கரநாற்காலியில் சென்று பயிற்சி செய்வேன்" என்றார் பரிதாபமாக ஹசாம்.

தடை தாண்டி

தற்போது 29 வயதான இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். காசா பகுதியில் உள்ள ஒரு லட்சம் பேருக்கும் அதிகமானோர் உள்ள அகதிமுகாமில் ஒருவாரமாகத் தங்கி உள்ளார் ஹசாம். இவருக்குப் பாலஸ்தீன ஊனமுற்றோர் தடகளக்கூட்டமைப்பு மாதந்தோறும் உதவித் தொகை அளித்து ஊக்கமளிக்கின்றது.

இதை வைத்துத்தான் பயிற்சி, குடும்பம் என இரண்டையும் சமாளிக்கிறார் ஹசாம். "இத்தனைத் தடைகளையும் தகர்த்து எப்படி சாதிக்க முடிகிறது?" என்று ஹசாமிடம் கேட்டதற்கு "பாலஸ்தீனம் பதக்கம் வெல்ல முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்து விட்டேன். எனது உடலில் ஊனமே தவிர மூளையில் இல்லை. எனது குறையைக் காட்டிலும் மனம் வலிமைமிக்கது. இது தான் எனது பலம்" என்றார்.

உலகிலேயே மிகவும் ஆபத்தானது காசா பகுதிதான். இங்கு இஸ்ரேல், பாலஸ்தீன படைகள் எப்போது மோதிக்கொள்ளும் என்றே சொல்ல முடியாது. இப்படி ஓயாத துப்பாக்கி குண்டுச் சத்தங்களுக்கு மத்தியில் குண்டு எறியும் ஹசாம், ஏதென்ஸில் சாதிக்க அனைவரும் வாழ்த்துவோம்.



"அடப்பாவமே... என்னதப்பு செய்தார்கள் இந்தக் குழந்தைகள்? வீட்டுப் பாடம் எழுதாமல் போனதற்குத்தானா பள்ளிக்கூடத்தில் இப்படித் தண்டனை...?" என்றெல்லாம் நினைத்தீர்களானால்... தவறு! 2008 பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டி யில் ஒரு தங்கம் கூட விடக்கூடாது என்ற ஒரு முடிவுடன் களமிறங்கி விட்டது சீனா. 4 முதல் 10 வயதுள்ள குழந்தைகளைத் தேடிப் பிடித்து, தற்போதே இப்படிக் கடுமையான பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். காயப்போட்ட துணிபோல கம்பியில் பரிதாகமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் இந்தச் சிறுவர்களில் ஒருவர் அடுத்த ஒலிம்பிக்கில் 'ஜிம்னாஸ்டிக்' பிரிவில் தங்கப் பதக்கம் வெல்ல லாம்... யாருக்குத் தெரியும்?

டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தடை!

"அவுஸ்திரேலியாவின் கெய்ன்ஸ், டார்வின் ஆகிய மைதானங்களில் 2007ஆம் ஆண்டுவரை டெஸ்ட் ஆட்டங்களை நடத்த மாட்டோம்"– என அந்நாட்டு கிரிக்கெட் கட் டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் தென்பகுதி நகரங் களில் அமைந்துள்ள இவ் ஆடுகளங்கள் டெஸ்ட் ஆட்டங்களுக்கு பொருத்தமான தன் மையைக் கொண்டிருக்கவில்லை என சர்வதேசக் கிரிக்கெட் பேரவை குற்றம் சாட்டி யிருந்தது. இதனையடுத்தே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியக் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபைதெரிவித்துள்ளது.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவிற்கு சமீபத்தில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது முதலாவது டெஸ்ட் ஆட்டம் டார்வினில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸில் வீரர் ரொனால்டோவின் முதல் காதல் கால்பந்தாட்டம் மீது. அடுத்த காதல்....? அருகில் அமர்ந்து அழகாகச் சிரிக்கும் இளம் பெண் டானிலி மீதுதான். கால்பந்து விளையாட்டில் ரொனால்டோ எவ்வளவு பிரபலமோ அதே அளவுக்கு பிரேஸில் நாட்டு "மாடலிங்' துறையில் டானிலி பிரபலம். அவரைப் பார்த்தால், ரொனால்டோவைத் தனியாகப் பார்க்கவேண்டியதில்லை என்னும் அளவுக்கு இருவரும் ஒன்றாக ஊர் சுற்றுகிறார்கள். டானிலி கண்களை மூடி வெட்கப்படும் அளவுக்கு ஜோக்கடித்தபடியே பயிற்சியிலிடுபட்டிருக்கும் ரொனால்டோவைப் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசுபிசுத்துப் போன....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆதரவாளர்களான சிங்களவர்களே கல் முனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

தமிழரும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற முன்மாதிரிப் பூமியான கல் முனையில் இந்நிகழ்வு அரங்கேற்றப்பட்டி ருப்பதன் பின்னணி குறித்து பல்வேறு சந் தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ் கின்ற மாவட்டம் அம்பாறையாகும். மா்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபினால் முன்மொழியப்பட்ட தென்கிழக்கு சுயாட்சி மாநிலத்தின் தலைநகர் கல்முனை. ஆனால் அரசியல் உணர்வுமிக்க முஸ்லிம்களின் பங்களிப்பு இந்நிகழ்வுக்குக் கைகொடுத்து உதவும் என அதன் ஏற்பாட்டாளர் கள் எதிர்பார்த்திருக்கலாம்.

அவ்வாறான பங்களிப்புடன் இம்மாநா டும், பேரணியும் இடம்பெற்று வெற்றிக் கொடி கிடைக்குமானால், அதனை வைத்துக் கொண்டு வடக்கு – கிழக்கைப் பிரித்து விடு மாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க லாம் – அரசுக்குள் இருந்து கொண்டே கிழக் கின் உதயத்திற்காகப் புரட்சி செய்யலாம் என அவர்களின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப் பட்டிருக்கலாம்.

இதனை விடத் தமிழ் மக்களின் விடு தலைப் போராட்டத்திற்கு குறுக்கே முஸ்லிம் சமூகம் நிற்கிறது என்னும் உணர்வை ஏற் படுத்தி, அதன் மூலம் தமிழ் – முஸ்லிம் நல் லுறவை சீர்குலைக்கலாம் என பேரினவாதி கள் நப்பாசை கொண்டிருக்கலாம்.

தமிழ் முஸ்லிம் உறவுக்கு வேட்டுவைத்து, தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதி ரான கோஷத்தையும், நடவடிக்கைகளையும் முஸ்லிம் மக்கள் மூலம் சாதிக்கலாம் என அவர்கள் நினைத்திருக்கலாம்.

படுதோல்வி

ஆனால் எல்லாமே புஸ்வாணமாகப் போய்விட்டன. 'கிழக்கின் உதயம்' மாநாடும், ஆர்ப்பாட்டப் பேரணியும் பிசுபிசுத்துப் போய் விட்டன. அதனால் பேரினவாதிகளின் எண் ணங்கள் யாவும் தவிடுபொடியாகிவிட்டன. அந்த நிகழ்வின் பெறுபேறு அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது.

அந்தமாநாடும்,பேரணியும் பலத்த பொலிஸ், இராணுவ பாதுகாப்புக்கு மத்தியிலேயே நடைபெற்றன. போதாக்குறைக்கு பொலிஸ் மோப்ப நாய்களும் காவலில் ஈடுபடுத்தப்பட் டதானது, ஏற்பாட்டாளர்களின் பீதியை வெளிப்படுத்தியிருக்கிறது.

அரசின் முழுமையான அனுமதி – ஆதர வுடன் ஜே.வி.பியினர், இந்நிகழ்வை அரங் கேற்றியுள்ளனர் என்கின்ற விடயம் சாதா ரணமாக நோக்கக்கூடிய ஒரு விடயமல்ல. ஒரு மாதகாலமாக அதற்கான வேலைத்திட் டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு, கண்டி, கம்பஹா மாவட்டங் கள் உட்பட நாடு முழுவதும் நிகழ்வுத் தினத் திற்கு பல வாரங்களுக்கு முன்னரே 'கிழக் கின் உதயம்' எனும் பெயரில் பலவர்ணப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது. ஜே.வி.பியினரின் நன்கு திட்டமிடப்பட்ட 'கிழக்கின் உதயம்' நிகழ் வைத் தோற்கடித்ததன் மூலம், முஸ்லிம் சமூ கம் சிங்கள, தமிழ் தேசங்களுக்கு ஒரு செய்தி யைச் சொல்லியிருக்கிறது.

அண்ணன் - தம்பி முரண்பாடு

"தமிழ் – முஸ்லிம் பிரச்சினை என்பது உள்வீட்டு முரண்பாடு, அது அண்ணன் – தம்பி பிரச்சினை, அதை எமக்குள் பேசித் தீர்த்துக்கொள்வோம். அதில் பக்கத்து வீட்டுக் காரன் தலையிட்டு, இருவருக்கும் பொல்லு தடிகள் தந்து சண்டையை மூட்டிவிட வேண் டாம்" என்பதே சிங்கள தேசத்திற்கு செல் லப்பட்ட செய்தியாகும்.

அதேவேளை தமிழ் மக்களுக்கும் ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. "முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவோ, அவற்றுக்குக் குறுக்கே நிற்கவோ விரும்பவில்லை. ஒருபோதும் அதற்கு முற்படப்போவதுமில்லை. நமக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை பேசித்தீர்த் துக் கொள்வோம்" என்று நேசக்கரம் நீட் டப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் மக்களின் இந்த அழைப்புக்கு தமிழ் சமூகமும் காத்திரமான பதிலைக் கொடுத்திருக்கிறது. 'கிழக்கின் உதயம்' தொடர்பாக தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் வெளியிட்ட அறிக்கைகளில், முஸ்லிம் களை அரவணைத்து – அவர்களின் ஒப்பு தலுடன் – கூட்டிணைந்து தமக்கான உரிமை களை வென்றெடுப்பதற்குத் தயார் என்ற சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது.

ஆகையினால், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக் களும் கைகோத்துச் செயற்பட தமிழ், முஸ் லிம் தலைவர்கள் வழிவகுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் 'கிழக்கின் உதயம்' நிகழ்வுச் சூட்டோடு உடனடியாக மேற்கொள் ளப்படவேண்டும்.

தத்தம் அரசியல் இலாபங்களுக்காக இன் னும் இன்னும் தமிழ் – முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தும் அறிக்கைகளையும், மேடைப் பேச்சுக்களையும், வீர வசனங் களையும் வெளியிடாது தவிர்த்துக் கொள் வதற்கு இரு சமூகங்களினதும் தலைவர்கள் முன்வர வேண்டும்.

களுத்துறை தமிழ்க் கைதிகளின் 'சிறைமலர்' செப்டெம்பர் மாத இதழ்

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் 'சிறைமலர்' செப்டெம்பர் மாத கையெழுத்துப்பிரதி வெளிவந்துவிட்டது.

தமிழீழ விடுதலைப்போரின் முன்னோடி களில் ஒருவராகத் திகழ்ந்து அஹிம்சைப் போராட்டத்துக்கே உரிய வரைவிலக் கணத்தை எடுத்துக்கூறிய லெப்.கேணல் திலீபனின் உருவப்படத்தை தாங்கி விசேட சிறப்பிதழாக இது வெளிவந்துள்ளது.

சிறைமலரின் முன் பக்க அட்டையில் தியாகி திலீபனின் படம் அழகாக வரையப் பட்டுள்ளது. உள்ளே புரட்டினால், தேசியத் தலைவரின் சிறப்புச்சிந்தனை மலருக்கு அழகு செய்கிறது.

அனவிடையான் எழுதிய "தலைவனின் பாதையில் உங்கள் பாதங்களும் பயணிக் கட்டும்" என்ற கருத்தாழம் மிக்கக் கவிதை, வி.லூக்காஸ் எழுதிய கவிதை ஆகியன இடம்பெற்றுள்ளன. சிறைக்கைதிகளாக எவருக்கும் உபயோகமற்ற நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை தனது கவிதை வரி கள் மூலம் உணர்ச்சிகரமாக வெளிக்காட்டி உள்ளார் லூக்கஸ்.

அனவிடையானின் மற்றொரு படைப் பும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. 'அகிம்சை அக்கினி' என்ற தலைப்பில் லெப் கேணல் திலீபனின் வரலாற்றுச் சிறப் புக் கட்டுரை ஒன்றை இவர் வரைந்துள்ளார்.

"உண்மைச் சம்பவம்" என்ற பகுதியில், தான் கைது செய்யப்பட்டதையும் சித்திர வதை செய்யப்பட்டதையும் வேதனையுடன் வடித்துள்ளார் வீ. பத்மநாதன்.

மற்றும் அறிவானந்தத்தின் 'S' அஜென் னின் 'ராஜந்தி' என்ற தொடர் அரங்கத்தின் முதலாவது அங்கம் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்ந்து வெளிவரும்.

ஓகஸ்ட் 2 முதல் செப்டெம்பர் 2 வரை இடம் பெற்ற நிகழ்வுகளும் இந்த மலரில் இடம் பெற்றுள்ளன. "நிகழ்ந்தவற்றில் நினை வுக்கு" என்ற தலைப்பில் இவை வெளி யாகி இருக்கின்றன.

"வல்லையைச் சேர்ந்த ஆறுமுகம் கன கரட்ணம் என்பவருக்கு 15 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது"

"மயில்வாகனம் விஜயரட்ணத்தின் ஆயுள் தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டது."

"நிமலகுமார் என்பவரது வழக்கில் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது" போன்றவை இந்த ஒரு மாத நிகழ்வுகளில் இடம் பெற்றுள்ளன.

இந்து மத குரு பிரம்மஸ்ரீ சி.ஐ.இரகுபதி சர்மாவின் "நல்லூர்க் கந்தனுக்கு" என்ற தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட கவிதையுடன் இம் மாத சிறைமலர் பூத்துக் குலுங்குகிறது.

சிறைமலரின் பின் பக்க அட்டையில் ஏதென்ஸ் ஒலிம்பிக் மைதானம் சிறப்பாக வரையப்பட்டுள்ளது. அத்துடன், மற்றொரு படமும் உள்ளது. தமிழீழ வரை படத்தில் இருவர் நிற்கிறார்கள். ஒருவரது கையில் தமிழ் மக்களின் இலட்சியக் கொடியான புலிக்கொடி பறந்து கொண்டிருக்கிறது. "இலட்சிய வீரனுக்கு ஒலிம்பிக் அரங்கம் வெகு தூரத்தில் இல்லை. மலரும் தமிழீழம். ஒலிம்பிக் அரங்கிலும் பறக்கும் தமிழனின் புலிக்கொடி" என்ற கவிதையும் பின் அட் டையைஅலங்கரிக்கிறது. சிறைமலரின் அட் டைப் படங்களை சுஜென், கேதீஸ் ஆகியோர் அழகுறவடிவமைத்துள்ளனர்.

கே.சிவகுமார் (ரகு), கே.றொபட் (கல்லடி) வி.வரதன், பிரம்மஸ்ரீ சி.ஐ.இரகுபதிசர்மா ஆகியோர் சிறை மலரின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். மலரின் ஒவ்வொரு இதழையும் சுவையூட்டியவர் பிரம்மஸ்ரீ சி.ஐ. இரகுபதிசர்மா. சிறைமலர் ஆகஸ்ட் இதழுக்கு உரிய இடம் கொடுத்து சுடர்ஒளி பிரசுரித்த துக்கு சுடர் ஒளிக்கு சிறைமலரில் நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொற்சிலம்பம் போட்டி இல.125

சொற்சிலம்பம் 125 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் செப்டெம்பர் 19 ஆம் திகதி ஆகும். விடைகள் செப்டெம்பர் 26 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 03 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.122க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியி ருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

சொற்சிலம்பம் போட்டி இல.125

1	2	3		■	4	5	
6			■	7			■
	■	8	9		■	10	11
12	13	■		■	14		
15		16			■	17	
■	18			■	19	■	
20			■	21		22	■
23		■	24				

சொற்சிலம்பம் போட்டி இல.122

1 ச	2 தா	3 வ	4 தா	ணி	■	5 ச	6 பா
7 க	ண்	ட	ம்	■	8 அ	ம	ளி
9 தி	டு	ம்	■	10 ப	ல	ன்	■
■	த	■	11 ப	ல	ம்	■	12 நீ
13 நா	ல்	14 வ	கை	■	15 ப	கு	தி
ற்	■	16 ச	மை	17 த	ல்	■	ப
18 ப	19 த	ம்	■	ரு	■	20 பா	தி
21 து	ம்	பு	க்	க	ட்	டை	■

சொற்சிலம்பம் போட்டி இல.125

இடமிருந்து வலம்

1. கூட.
4. குளிர்மை / பசிய தன்மை.
6. தலை.
7. தீமை அல்ல.
8. ஆட்களை இதில் வைத்துத் தூக் கிச் செல்வர்.
10. பரத்தைப் பெண்.
12. பிரி.
14. நிதியோடு தொடர்புடைய நிறு வனம்.
15. மடல் / கடிதம்.
17. மலை / குண்று.
18. காலில் பத்து, கையில் பத்து.
20. தேங்காய் மட்டை.
21. அந்தரப்படல்.
23. திக்கு.
24. சுயதேவையைப் பூர்த்தி செய் தல்.

மேலிருந்து கீழ்

1. அம்பிகாபதி மனம்கவர்ந்தவள்.
2. வலிமை / பலம்.
3. இறுதி.
4. பல என்பதைக் குறிக்கும்.
5. பாரம் தாங்குவது.
7. ஆபரணம்.
9. இது வருவது குடல் பெருப் பதால் என்பர்.
11. குகை ஓவியம் உள்ள இடம்.
13. மா மரத்தில் ஒட்டி வளரு வது.
16. தோல் வாத்தியம். பேரிகை போல முழங்குவது.
19. அவதானி.
20. மூடை.
21. உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை விகுதி இது.
22. வரி.

சொற்சிலம்பம்-122 பரிசு பெறுவோர்.

1. திருமதி.ஜெ.சண்முகவடிவு,
250/6, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு–15.
2. சி.பால்ராஜ்,
யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
3. த.ரஜிதரன்,
பி.மா.சுகாதார சேவைகள் பணிமனை,
திருகோணமலை.

பாராட்டுப்பெறுவோர்

1. சி.மனோகரன்,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
2. கே.அரசேஸ்வரன்,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
3. பா.லஜிதா,
அம்பன்,
குடத்தனை.
4. இ.இலட்சுமியம்மா,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
5. சதா.சிவகுமாரன்,
கைதடி தெற்கு,
கைதடி.
6. சி.சிற்றம்பலம்,
பிரதான வீதி,
கொட்டகலை.
7. வீ.எம்.ஜோசப்,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.
8. சி.பரமசாமி,
புளியம்பொக்கணை,
பரந்தன்.
9. இ.பாலரட்ணம்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு–13.
10. கே.சரஸ்வதி
அம்பன்,
குடத்தனை.

சொற்சிலம்பம் போட்டி 122 இன் விடைக் குப் பதிலாக கடந்த வாரம் 123 இன் விடை தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. அதனால் 122 இன் விடை இவ்வாரம் பிரசுரமாகிறது
- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தார்த்தின் எடுப்பு

ஷங்கர், மணி ரத்தினம் படங்களில் நடித்த ஒரே தகுதியை வைத்துக் கொண்டு சித்தார்த் செய்கிற பந்தாக்களுக்கு அளவேயில்லை. தன்னை எந்த வகையிலாவது மெருகூட்டச் செய்யும் பாத்திரங்களில் தான் நடிப்பாராம். உப்புச்சப்பில்லாத, எனக்கு முக்கியத்துவம் தராத சாதாரண படங்களில் நடித்தால் என் ரசிகர்களுக்குப் பிடிக்காதே என்கிறார் சித்தார்த்.

கே.வி ஆனந் தயாரிப்பாளராக அறிமுகமாக இருக்கும் படத்தில் பிரசாந்தும், ஸ்ரீகாந்தும் இணைந்து நடிக்கின்றனர். இப் படத்துக்கு, கமலுக்கு விருப்பமான திரு ஒளிப்பதிவு செய்கிறார்.

ரீமா சென்

மும்தாஜின் அளவு கும்தாஜுக்கு இல்லை

ராஸ்கல் படத்தில் நடித்துவிட்டு கோயம்புத்தூரிலிருந்து ரயிலில் சென்னை திரும்பிக்கொண்டிருந்தார் குலுக்கல் நடிகை கும்தாஜ்.

அப்போது சக பயணி ஒருவர் ''என்ன பட ஷூட்டிங் எனக் கேட்க... ''ராஸ்கல்'' என கும்தாஜ் சொல்ல... தன்னைத்திட்டுவதாக நினைத்துக்கொண்டு அந்தப் பயணி கும்தாஜிடம் தகராறு பண்ண... பதிலுக்கு கும்தாஜும் குஸ்தி போட... அந்தப் பெட்டியில் பயணம் செய்த அ.தி.மு.க. ராஜ்யசபை எம்.பி. கோவிந்தராஜர் தலையிட்டுச் சமாதானம் செய்து வைத்தார்...என ஒரு செய்தி உலவியது. ஆனால்...

நான் ராஸ்கல் பட ஷூட்டிங் போனது உண்மை. கோவையிலிருந்து ரயிலில் வந்தது உண்மை. என்ன படம் என ஒருவர் கேட்டதும், நான் சொன்னதும், நான் திட்டுவதாக அவர் நினைத்ததும், படப் பெயர் என நான் சொன்னதும்,அவர் சிரித்ததும் உண்மையோ உண்மை.

மற்றபடி நான் குஸ்தி போடவும் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர் வந்து பஞ்சாயத்துப் பண்ணவும் இல்லை என்றார்.

மும்தாஜுக்குப் போட்டியாப் பரபரப்பாக் களம் இறங்கினீர்கள். ஆனால் பெரிய அளவில் பரபரப்பாகவில்லையே?

கும்தாஜுனு பேர் வச்சிட்டா உடனே... மும்தாஜுக்கு போட்டி என்று அர்த்தமா?

துபாயில் நட்சத்திர ஒட்டல்களில் ஸ்டார் நைட் நடத்தும் தொழி அதிபர் ஒருவரை கல்யாணம் பண்ணிக்கொண்டு துபாயிலேயே நீங்கள் செட்டில் ஆகப்போறதாக செய்தி வந்ததே?

''அவரை எனக்குத் தெரியும். அவர் மூலமாக நான் துபாயில் நிகழ்ச்சிகள் செய்திருக்கிறேன். கல்யாணம் செய்து செட்டில் ஆகிறதுதான் இலட்சியம் என்றால் நான் நடிக்க வந்திருப்பேனா? என்னோட இலட்சியம் ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டு வயசுப்பசங்களின் மனசைக் கொள்ளையடிப்பதுதான்.

சிம்ரனின் சில....

பெயர் — சிம்ரன்

பிறந்த திகதி —ஏப்ரல் 4

எழுதப் பேசத் தெரிந்த மொழிகள்— இந்தி, ஆங்கிலம்,தமிழ்(ஓரளவு)

படிப்பு — டிகிரி

பிடித்த நிறம் — நீலம்

பிடித்த உணவு —சிக்கன்65

பலம் —ரசிகர்கள்

பலவீனம் —எனது கோபம்

பிடித்த பானம் —கோகா கோலா

பிடித்த இதழ் —சினி பிட்ஸ்

பிடித்தமான பொழுதுபோக்கு—இசை மற்றும் சுற்றுலா

பிடித்த படங்கள் — துள்ளாத மனமும் துள்ளும் மற்றும் கண்ணெதிரே தோன்றினாள்.

எரிச்சலடையச் செய்வது— கரப்பான் பூச்சி, கரப்பான் பூச்சி போன்ற மனிதர்களையும் பிடிக்காது. காரணம் நட்பை மதிக்கத் தெரியாதவர்களை, முகத்துக்கு முகம் பேசாமல் புறம்பேசும் மனிதர்களை எனக்குப்பிடிக்காது.

மிகப் பெரிய சொத்து— தன்னம்பிக்கை

பிடித்த நடிகைகள்— ஸ்ரீதேவி மற்றும் ஹேமமாலினி.

மந்திரா

தனுஷுக்கு சிகிச்சை

ரசிகர்களைச் சந்தித்தபோது ஏற்பட்ட திடீர் விபத்து காரணமாகக் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு உடைந்த அந்த எலும்பை ஸ்டீல் பிளேட் மூலம் இணைத்து அறுவைச்சிகிச்சை செய்துகொண்டு நடித்து வருகிறார் தனுஷ். தற்போது அந்தப் பகுதியில் வலி அதிகமாகிவிட்டதால் அவஸ்தைப்படும் அவர், ஸ்டில் பிளேட் அப்படியும், இப்படியும் நகர்வதால் அய்யோ அம்மா என்று கதறித் துடிக்கிறார். எனவே விரைவில் அதே கையில் ஒரு அறுவைச்சிகிச்சை செய்து அங்கு பொருத்தப்பட்ட ஸ்டில் பிளேட்டை வெளியே எடுத்துவிட முடிவு செய்துள்ளார் தனுஷ். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரை அவர் ஓய்வு எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறியதால் , எப்போது அறுவைச்சிகிச்சை செய்து கொள்ள நேரம் குறிப்பது என்று தெரியாமல் தவிக்கிறார். வரிசையாகப் புதுப்படங்கள். இடைவிடாத படப்பிடிப்புகள். இவற்றை எப்படி நிறுத்தி வைப்பது என்று நிறையவே குழம்புகிறாராம்.

என்ன செய்வது?

கே.ஆர். விஜயா தங்கை கே.ஆர்.சாவித்திரி மகள் ராகசுதா மற்றும் சுவாதிகா தமிழ்த்திரையுலகில் ஒரு நிலையான இடத்தைப்பிடிக்க முடியாமல் அலைக் கழிக்கப்பட்டு வருகின்றனர். தங்களுக்கு நாகதோஷம் இருப்பதால் தான் எல்லா முயற்சிகளுக்கும் தடை ஏற்படுகிறது என்று நினைத்த அவர்கள், திடீரென்று காளஹஸ்தியிலுள்ள சிவபெருமான் கோவிலுக்குச் சென்று ரகசிய பூஜை செய்துவிட்டு சென்னை திரும்பி இருக்கின்றனர். இப்போது அவர்களுக்கு மன நிம்மதி கிடைத்து இருந்தாலும், பழையபடி கதாநாயகியாக அமையாதது குறிப்பிடத்தக்கது.

சோற்றைக் கொட்டினால் அள்ளிவிடலாம். சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது. அதனால் ஜோதிகாவைப் பற்றிப் பேசுகிறவர்கள் கன்னாபின்னான்னு பேசக்கூடாது. நாக்கு அழுகிவிடும்.

-சூர்யா



காதல் வைரஸ்
அப்பாஸ்- ஸ்ரீதேவி

அஜித்
பூஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் பலிக்குமா?

வடிவேலுவின் எதிர்பார்ப்பு

ஹீரோவாக விவேக் நடிக்க ஆரம்பித்து இருப்பது வடிவேலுவுக்கு 'புல்' சந்தோஷம். தனக்கு இருக்கும் ஒரே போட்டியான விவேக், காமெடியன் ஸ்தானத்தை நழுவ விட்டு விடுவார் என்பது வடிவேலுவின் கணிப்பு. அதன்பின்பு கருணாஸ், வையாபுரி, மயில்சாமியையெல்லாம் ஈஸியாக ஊதித் தள்ளிவிட்டு தானே தனி ராஜ்யமாக இருக்கலாம் என்கிற எதிர்பார்ப்பு வடிவேலுவுக்கு.

அஜித்தின் உறுதிமொழி

தொடர்ந்து தன் படங்கள் அடி வாங்கியதால் கதி கலங்கிப்போயிருக்கும் அஜித், சினிமா வட்டாரத்தில் முதல் இடத்தை லபக் செய்வதே தன் இலட்சியம் என்று அறிவித்துள்ளார். கோடம்பாக்கத்து சினிப் பந்தயத்தில் வெற்றி பெறாமல், கார் பந்தயப் பக்கம் போவதில்லை என்று உறுதிமொழி ஒன்றையும் எடுத்துள்ளார் அஜித். பொறுத்திருந்து பார்க்கலாம்.

பிள்ளைப்பெறு ஆசை

சுயேச்சை எம்.எல்.ஏ படம் எப்போ முடியும் என்று தவிப்பில் இருக்கிறார் மந்த்ரா. தெலுங்குப்பட உதவி இயக்குநரை லவ்வி கல்யாணமும் செய்து கொண்டு குடும்ப ஸ்திரீ ஆகிவிட்ட மந்திரம், பிள்ளை பெற்றுக்கொள்ள ஆவலாக இருக்கிறார். ஆனால் சு. 'எம்.எல்.ஏ.' படத்தில் இன்னும் சில காட்சிகளில் அம்மணி திறமை காட்ட வேண்டியுள்ளதால் படம் முடியும் வரை அவரது பிள்ளை ஆசைக்கு மட்டும் தடா போட்டுள்ளார் தயாரிப்பாளர். மந்திரமும் கட்டுப்பாட்டுடன் இருக்கிறார். கட்டுப்பாடுள்ள கடமையுணர்வப்பா..!



விவேக்கைப் பாத்தீங்களே!

திருடா திருடி படத்தை எடுத்த இந்தியன் தியேட்டர்ஸ் புரடக்‌ஷனில் சாயாசிங் நடிக்கும் இரண்டாவது படம். இந்தப் படத்தில் முதல் முறையாக கதாநாயகனாகக் களம் இறங்குகிறார் சின்னக் கலைவாணர் விவேக்.

திருடா திருடி படப்பிடிப்பு நடந்த அதே திருச்சி ஏரியாவில், இந்தப்படத்தையும் செப்டெம்பர் 1ஆம் திகதி தொடங்கியிருக்கிறார்கள். சென்டிமென்ட் என்பதும் ஒரு காரணம். கதை நடக்கிற இடமும் அதுதான் என்கிறார் படத்தின் இயக்குநராக அறிமுகமாகும் எஸ்.ஏ.சி.ராம்கி.

படப்பிடிப்புக்காகச் சென்றுகொண்டிருந்த சாயாசிங்கிடம் ஒரு பேட்டி.

'அருளில்' விக்ரமோட சேர்ந்து ஒரு பாட்டுக்கு ஆடினீங்க. இப்போ விஜயோட சேர்ந்து திருப்பாச்சியில் ஒரு பாட்டுக்கு ஆடி முடிச்சிருக்கீங்க. இன்னொரு பக்கம் விவேக் ஜோடி. புரிஞ்சுக்கவே முடியலையே.. என்று கேட்டால், தெத்திப்பல் தெரியச் சிரித்துவிட்டு தொடர்ந்தார்...

'ஸார்... 'திருடா திருடி'க்கப்புறம் டான்ஸ் மட்டும் ஆட வந்த வாய்ப்புக்களை ஒப்புக்கிட்டு நடிச்சிருந்தால், நான் லைஃப் டைம் செட்டிலாகியிருக்கலாம். இப்ப ஆடியிருக்கிற இரண்டு படத்திலும் பெரிய ஹீரோக்கள். அதனால் தான் அதற்கு ஓ.. போட்டேன். விவேக் ஸார் கூட ஜோடி சேர்ந்ததுக்குக் காரணம் கதை அந்த மாதிரி. தலைப்பைப் பார்த்தால் தெரியவில்லையா...? சொல்லி அடிப்பேன். படம் பார்த்ததுக்கு பின்னர் சொல்லுங்க... என்றபடி சொல்லி அடிக்கிறார்.

மிஷாவின் விசேஷம்

அட மிஷாவில் அப்படி என்ன விசேஷம். மும்பை வரவாக இருந்தாலும் கூட புகை பிடிக்க மாட்டாராம், மது அருந்த மாட்டாராம் கவர்ச்சிப்புயல் மிஷா. இதென்ன மும்பை வரவுகளின் அடிப்படை இலக்கணத்தையே உடைத்தெறிந்துவிட்டீர்களே என்று கேட்டபோது, எல்லா மும்பை வரவுகளும் ஊதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்று பாடுவார்கள் என்று நினைக்காதீர்கள். சில விதிவிலக்குகளும் உண்டு. உதாரணத்துக்கு என்னையே எடுத்துக்கொள்ளுங்கள். சிகரெட் வாடை பட்டாலே எனக்கு அலர்ஜி. மது எப்படி இருக்கும் என்றே எனக்குத் தெரியாது. அந்தளவுக்கு என்னைக் கட்டுப்பாடாக வளர்த்தார்கள். படத்தில் சிகரெட் பிடிப்பதுபோல நடிக்கச் சொன்னாலும், ஸாரி சொல்லிவிடுவேன் என்றார் கண்டிப்பான குரலில். நிஜமாகவே மிஷா வித்தியாசமான மும்பை வரவு தான்.



'சொல்லி அடிப்பேன்' விவேக் சாயாசிங்

அரிவாளோடு அண்ணன்-தங்கைப் பாசம்

திருப்பாச்சி என்றாலே அரிவாளுக்கு பெயர் பேன இடம். இப்போது திருப்பாச்சி படத்துக்காக உங்கள் கையில் அரிவாளை ஓங்கியபடி போஸ் கொடுக்கிறீர்களே. இது வன்முறைப்படமா என்று கேள்வியை முன்வைத்தோம். கேட்டுவிட்டுச்சிரித்தார் விஜய். கையில் அரிவாளை ஓங்கினாலே அது வன்முறைப்படம்தான் என்று நீங்களாகவே ஒரு முடிவுக்கு வந்துவிடாதீர்கள். இந்தப்படத்தில் அண்ணன், தங்கைப் பாசம் தான் கரு. மற்ற விடயங்கள் எல்லாம் அதற்கு அடுத்தது தான். 'ஆட்டோ கிராப்' மூலம் தமிழ் நாட்டையே கலக்கிய மல்லிகா எனக்குத் தங்கையாக நடிக்கிறார். அவருக்கு நான் ஒரு பாசமுள்ள அண்ணன். கதையைப் பற்றி மேற்கொண்டு ஒரு வரி கூடச் சொல்ல மாட்டேன். படத்தில் எனக்கு என்ன வேலை தெரியுமா? ஒரு கொல்லன் பட்டறையில் அரிவாளைத் தயாரித்து விற்கிறேன். அதைத் தயாரிக்கும் நான், அதைத் தூக்க என்ன காரணம் என்பதைப் படத்தைப் பார்த்தால் தெரியும் என்றார். வரவர விஜய் பொடி வைத்துப் பேசுகின்ற அமசடக்கி ஆகிவிட்டார்.

'போஸ்' ஸ்ரீகாந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் சொல்லும் பழமொழி



அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன.

அவை என்ன பழமொழி என்று கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். கடந்த 23 ஆம்திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடை எழுதி அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:

1. யோ.வினோதினி, தரம் 10, கிளி.அ.ம.வி. 2.சி. ரவிச்சந்திரன், கோப்பாய் வடக்கு கோப்பாய். 3.சி.சயந்தன், அழகரத்தினம் வீதி, வட்டக்கச்சி. 4. அ. சகானா, 394, நுவரெலியா ரோட், புசல்லாவ. 5. செ.யசோதா, அராலி மத்தி வட்டுக்கோட்டை.

அனுப்பவேண்டிய முகவரி:

'படங்கள் சொல்லும் பழமொழி',
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14

விடுகதையும் விடையும்

1.வாழ்நாள் முழுவதும் வாய் மூடாதவன், அவன் யார்?
தபால்பெட்டி

2. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு உயிரில்லை அது என்ன?
அகப்பை

3.கழுத்துண்டு, தலை இல்லை, கை உண்டு கால் இல்லை அது என்ன?
சட்டை

4. இரண்டு வீட்டுக்கு நடுவில் ஒரு சுவர் அது என்ன?
மூக்கு

5. ஆட்டிவித்தால் ஆடாமல் இருக்காது?
ஊஞ்சல்

பா.யதுர்சனா
யாழ். கல்லூரி

படித்ததில் பிடித்தவை

1.வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் இருக்கிறது.
2.முடியும் என்று நினைப்பவனால் எதையும் செய்ய முடியும்.
3. ஊக்கமுள்ளவனுக்கு எல்லாமே எளிதாய் தோன்றும்
4.அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக்கூடத்திறக்கும்.
5.உன் கடமையைச் செய் அதுவே உன் தகுதியை அறிந்து கொள்ள உதவும்.
6.வெற்றியின் இரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.
7.உண்மையான அடக்கமே நல்ல பண்புகளுக்கெல்லாம் அடிப்படை.
8.மன உறுதியுடைய உத்தமனுக்கு உலகம் வளைந்து கொடுக்கும்.

அருட் செல்வம், பிறின்சியா.
தரம் – 06, கிளி/பிரமந்தனாறு. ம.வி.

விண்வெளி பொதுஅறிவு

1.ரஷ்ய விண்வெளி வீரர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
காஸ்மோநொட் – பிரபஞ்ச மாலுமி

2. நெப்ரியூன் கோள் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது? 1846

3.கதிரியக்கம் முதன் முதலில் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1846 இல் பிரான்ஸ் விஞ்ஞானி ஹென்றி பெக்ரல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

4.முதல் கருத்தாக்கம் யாரால்? எப்பொழுது நிகழ்த்தப்பட்டது?
இத்தாலிய விஞ்ஞானி என்றிக்கோ பேமி என்பவரால் 1942 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்டது.

5.அண்மையில் ரஷ்யாவில் சோயுஸ் விண்வெளிக்கப்பல் மூலம் விண்வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்ட முதலாவது விண்வெளி உல்லாசப் பயணி யார்?
டென்னிஸ் டிட்டோ

6.2001 ஆம் மார்ச் மாதம் தென் பசுபிக் சமுத்திரத்தில் வீழ்த்தி அழிக்கப்பட்ட ரஷ்ய விண்வெளி ஆய்வு கூடம் எது? மிர்

7. மிர் விண்வெளி ஆய்வு நிலையத்துக்கான கட்டுப்பாட்டு நிலையம் எங்கு அமைந்துள்ளது?
மொஸ்கோவிற்கு அருகிலுள்ள கோரோஸ் யோங் எனுமிடத்தில்

இ.நிசோத்பவன்
ஆண்டு – 8B
மு/மல்லாவி/மத்திய/கல்லூரி

சிறார்களின் கைவண்ணம்

சி.துஷானி
தரம் 10
யாழ். இந்து மகளிர் கல்லூரி.



யே. அன்ரன் கஜில்காந்
தரம் 6
யா/புனித அந்தோனியார் கல்லூரி.

ஞா. லெனோரா
சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம்
மஸ்கெலியா.

வி.ஷாலினி
தரம் 11
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமாக இருக்கச் சிரியுங்கள்

பெண்கள் சிரித்தால்போச்சு, புகையிலை விரித்தால் போச்சு என்ற பழமொழியை எம் வீட்டிலிருக்கும் பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சிரித்தல் என்பது ஆரோக்கியமான ஒரு செயல்பாடே!

பரபரப்பு நிறைந்த இன்றைய உலகில் இந்தச் சிரிப்பு எமக்குப் பல வழிகளில் நன்மை தருகிறது.

வாய் விட்டுச்சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் மட்டும் தான். சந்தோஷத்தின் வெளிப்பாடே சிரிப்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால், மனதில் சந்தோஷமோ, உற்சாகமோ இருந்தால் கூட வாய்விட்டுச் சிரிக்கப் பயப்படும் பெண்கள் தான் இங்கு அதிகம். வாய் விட்டுச்சிரிப்பதால் மன அழுத்தம் குறைகிறது. சிரிக்கும்போது முகத்துக்கு நல்ல பயிற்சி ஏற்படுகிறது. இதனால் இளமை அதிகரிக்கிறது.

சிரித்த முகத்தோடு இருப்பவர்களைத் தான் எல்லோருமே விரும்புவார்கள். வாய் விட்டுச்சிரிக்கும்போது நுரையீரலுக்கு அதிக சக்தி கிடைக்கிறது. சிரிக்கும் போது மூளை, ஹார்மோன்களையும் வெளியிடுகிறது. இது நரம்புத் தளர்ச்சியைத் தவிர்க்கிறது. நரம்பு மண்டலங்களை வலுவூட்டுகிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

சிரிப்பதால் தொண்டை வழியாக வரக் கூடிய நோய்கள் தடுக்கப்படுகின்றன. மனம் விட்டுச்சிரிக்கும்போது இயற்கையாகப் புற்றுநோய் மற்றும் வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கும் 'டி' செல்களின் உற்பத்தி அதிகரித்து நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது.

லக்னோவில் ஒரு ஆராய்ச்சி மையம் நீரிழிவு நோயாளிகளுக்கு முன் ஒரு நகைச் சுவை நிகழ்ச்சியை அரங்கேற்றியது.

இது சிரிக்காதவர்களையெல்லாம் சிரிக்க வைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியை எல்லோரும் பார்த்து இரசித்து, சிரித்து மகிழ்ந்தார்கள். அதன் பின்பு சிரித்த நோயாளிகளின் இரத்தத்தைப் பரிசோதித்த போது, சர்க்கரையின் அளவு கணிசமான அளவு குறைந்து காணப்பட்டது. இன்சுலின் போடாமல் இனி சிரித்தே சர்க்கரையின் அளவைக் குறைக்கலாம் என்ற நிம்மதி அவர்களுக்கு. ஆம்! வாய்விட்டுச்சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்பது எவ்வளவு பெரிய உண்மை என்பது புரிகிறது அல்லவா?

இந்தியாவில் 1995ஆம் ஆண்டு மும்பையில் டாக்டர் மதன் கட்டாரியா பலநாள் ஆராய்ச்சிக்குப்பிறகு சிரிப்புக் கிளப்பை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் நூற்றுக்கும் குறைவான அங்கத்தவர்களே இருந்தனர். எனினும் பின்பு 300க்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்ததும் இந்தச்சிரிப்புக் கிளப் மிகவும் பிரபலமடைந்தது.

எல்லோரும் வட்டமாக உட்கார்ந்த பிறகு, ஆரம்ப கட்டமாக நடுவில் பயிற்சியாளர் சிறு பிரார்த்தனைக்குப்பிறகு சிரிக்க ஆரம்பிப்பார். அவரைத் தொடர்ந்து உறுப்பினர்கள் சிரிக்கத் தொடங்குவார்கள்.

இது முதல் கட்டம். பிறகு இடம் விட்டு வரிசையாக அமர்ந்து, மென்மையாக சின்னத் தொனியில் ஆரம்பித்து தொடர்ந்து குரல் ஒலிக்க இடி முழக்கம் போல் சிரிப்பார்கள். இரண்டு கைகளை மேலே தூக்கி ஹா..ஹா.. என்று அட்டகாசமாக மனம் விட்டுச் சிரிக்க வேண்டும். இரண்டு கைகளைத் தட்டித் தட்டி சிரிப்பது ஒரு வகை. ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டி கேலியாகச் சிரிப்பது இன்னொரு வகை. உதடுகளை மூடிக்கொண்டு அடக்கமாகச் சிரிப்பதை புறாச் சிரிப்பு என்று சொல்கிறார்கள். இப்படி சிரிப்புகள் பலவகை. முதலில் இடதுபக்கம் மட்டும் இழுத்து சிரிக்க வேண்டும். பின்பு வலது பக்கம். இப்படி மாறி மாறி ஒரு நிமிடம் செய்தால் போதும். இது முகத் தசைகளுக்கு அற்புதமானபயிற்சியைக் கொடுக்கிறது. இதனால் முகச்சுருக்கங்களுக்கு குட்பை சொல்லிவிடலாம். இவ்வாறு சிரித்த பின்பு உடலும், மனமும் சுறுசுறுப்படைந்து நாள் முழுவதும் உற்சாகத்துடன் செயற்படுகிறோம் என்று இந்தக்கிளப்பில் உள்ளவர்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை தான்.

பொதுவாக இன்று மன இறுக்கத்தால் வரும் நோய்களே அதிகம் எனலாம்.எனவே, மருந்தில்லாமல் எளிய பயிற்சியான சிரிப்பைப் பயன்படுத்தி நோயை விரட்ட நீங்கள் தயாரா?

சமையல் குறிப்பு

சோயா ஐஸ்கிரீம்

தேவையான பொருட்கள்

சோயாப்பொடி	1/4 கப்
முந்திரிப் பருப்பு	1/4 கப்
பால்	21/2 கப்
சர்க்கரை	1/4 கப்+ ஒரு தேக்கரண்டி
கார்ன் ப்ளோர்	1 மேசைக்கரண்டி
கெட்டிப்பால்	2 மேசைக்கரண்டி
வெனிலா எசென்ஸ்	4 சொட்டு
குங்குமப் பூ	சிறிது
ஏலக்காய்	5

செய்முறை

சோயாப் பொடியை 1/4 கப் பாலிலும், முந்திரிப் பருப்பை 1/4 கப் பாலிலும் தனித்தனியாக 1/2 மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய முந்திரியை மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ளவும். ஏலக்காய் வாசனை விருப்பமுள்ளவர்கள் முந்திரி சோயாவுடன் குங்குமப் பூ, ஏலக்காயையும் சேர்த்து அரைத்துக்கொள்ளவும். 2 கப் பாலை 1 கப் அளவு ஆகும்படி காய்ச்சி வைத்துக்கொள்ளவும். 1 தேக்கரண்டி கார்ன் ப்ளோரை சிறிது ஆறிய பாலில் கரைத்துக், காய்ச்சிய பாலுடன் சேர்த்து நன்றாகக் கொதித்த பின் இறக்கி வைத்துக்கொள்ளவும். சர்க்கரையை தூளாக்கிக் கொள்ளவும்.

பாலில் அரைத்த சோயா, முந்திரி விழுது, கெட்டியான பால் ஆடை, தூளாக்கிய சர்க்கரை ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு நன்றாகக் கலக்கவும். வனிலா சுவை விரும்பினால் 4 சொட்டு வனிலா எஸென்சும் சேர்த்து ப்ரீசரில் 1 மணி நேரம் வைத்து, திரும்பவும் ப்ரீசரில் வைத்து 1 மணி நேரத்தில் தயாரானவுடன் பரிமாறிக் கொள்ளவும்.

வேலைகளைச் சுலபமாக்க...

வேலை என்பது இன்று ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லா வேலைகளையும் எல்லோரும் செய்யும் காலம் வந்துவிட்டது. ஆனால், அதிகப்படியான வேலையில் ஈடுபடுபவர்கள் மன ரீதியான பாதிப்பில் ஈடுபடுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். வீட்டிலும் வேலை, அலுவலகத்திலும் வேலை என்று நாள் முழுக்கத் துன்பப்படுபவர்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். வாரத்தில் ஆறு நாட்கள், 12 மணி நேர வேலை என்று தொடர்ந்து சில ஆண்டுகள் வேலை செய்தால், அவர்களுடைய வேலைத்திறன் குறைந்து போகிறது என்று கூறப்படுகிறது.

பெண்கள் வேலை செய்யும் முறையை எடுத்துக்கொள்ளும்போது, வீட்டில் காலை எழுந்தது முதல் அலுவலகம் வரை வேலை, வீட்டுக்குச் சென்றால் மீண்டும் வேலை காத்திருக்கும்.

இவ்வாறு கஷ்ரப்பட்டு வேலை செய்வதும், வேலை செய்யும் வழிமுறைகளைக் குறித்து சிந்திப்பதுமாய் கவலையுடனேயே பெரும்பாலான நேரத்தைச் செலவிடுவதால், பெண்களின் சந்தோஷம் என்பதே தொலைந்து போகிறது. எனவே நாம் செய்யும் வேலையை கஷ்டம் இல்லாமல் செய்ய சில வழிமுறைகளைப் பார்ப்போமா?

*வீட்டில் வேலை செய்யும்போது, வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்களையும் வேலைக்கு அழைத்துக்கொள்ளுங்கள்.

*அலுவலகத்தில் வேலை செய்யும் போது, மற்றவர்களின் உதவியை நாடுவதில் தப்பில்லை. ஆனால் எமக்குக்கீழ் வேலை செய்பவர்கள் தானே என்ற எண்ணத்தில் மற்றவர்களை அவமதித்தீர்களானால், வெகு விரைவில் நீங்கள் ஒதுக்கப்பட்டவர்களாக மாறிவிடுவீர்கள்.

*நன்கு நிம்மதியாகத் தூங்குங்கள்.

சத்தான, உங்கள் உடல் நிலையைப் பாதிக்காத உணவு வகைகளை உண்ணப் பழகிக்கொள்ளுங்கள்.

*நிறையத் தண்ணீர் குடியுங்கள்.

*நிறைய மூச்சு விட வேண்டும். அவ்வப்போது மனக் கவலையோ, பரபரப்போ, பிரச்சினையோ ஏற்படும்போதெல்லாம் ஒரு நிமிடம் மவுனமாய் இருந்து, பெருமூச்சு விட்டுச் சிறிது ஆசுவாசப் படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்களோடு மிகவும் நெருங்கியவர்களாக இருப்பவர்களிடம் உங்கள் குறையை, கஷ்டங்களை எடுத்துச் சொன்னால், அவர்கள் தீர்வு சொல்வார்கள்.

இது எதுவுமே முடியாத பட்சத்தில், இடத்தை விட்டு எழுந்து சற்று நேரம் உலாவி விட்டு வாருங்கள்.

இவ்வார பொன்மொழி

வளமுடன் வாழும் போது நண்பர்கள் உன்னை அறிவர்; வறுமையில் நீ நண்பர்களை அறிவாய். – ரஸ்கின் –

பெண்

சசி

பெண்கள் தற்கொலை செய்வது எதற்காக!

புகழ் ஏணியின் உச்சியில் இருக்கும் நடிகைகள், நன்கு படித்த இளம் பெண்கள், இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயான பெண்கள், பெரிய பதவிகளில் இருக்கும் சில பொறுப்பு மிக்க மனிதர்கள் போன்ற பலர் தற்கொலை மூலம் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றார்கள், பிரச்சினைகளுக்கெல்லாம் தற்கொலை கண்டிப்பாகத் தீர்வாகாது.

ஒவ்வொரு ஆண்டும், அமெரிக்காவில் சுமார் 51 லட்சம் பேர் தற்கொலைசெய்து கொள்ள முயல்கிறார்கள். அதில் 80, 000 பேர் வெற்றியும் பெறுகிறார்கள் என்று அமெரிக்க புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. இந்திய நாட்டைப் பொறுத்த மட்டில் ஆண்டு தோறும் பத்தாயிரத்துக்கு ஐந்து பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

தற்கொலை என்பது இன்று, நேற்று ஏற்பட்டிருக்கும் ஒரு புதிய செயலல்ல. காலங் காலமாகச் சிலரால் செயல்படுத்தப்பட்டும், மற்றவர்களால் பரபரப்பாகப் பேசப்பட்டும் வந்த ஒரு செயல்பாடுதான். மனிதன் தனது பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், பிற விலங்குகளைக் கொல்வது போல தன்னைத்தான் கொன்று கொள்ள முடியுமென்று கண்டு கொண்டான். அன்று முதல் அவனது வாழ்க்கை தடம் மாறிவிட்டது.

தப்புவதற்காகத் தற்கொலையை கைக்கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன. தற்கொலை செய்து கொள்வதைச் சிறந்த தீரச்செயல் என்று கிரேக்கர்கள் பாராட்டிய காலம் கூட இருக்கிறது. ஏறத்தாழ கி.மு. 582ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் தற்கொலை தவறானது என்ற கருத்து வெளிப்படத் தொடங்கியிருக்கிறது.

தற்கொலை செய்து கொள்வது தவறு என்று கருத்து மக்களிடையே பரவ ஆரம்பித்ததிலிருந்து தற்கொலை நிகழ்வுகள் ஓரளவு குறைய ஆரம்பித்தன. தற்கொலைக்கு முயன்று தோற்றவர்களைச் சமுதாயம் தாழ்வாக நினைக்க ஆரம்பித்தது. 1854 ஆம் ஆண்டில் தற்கொலை முயற்சியும் தண்டிக்கத் தக்க குற்றமாகக் கருதப்பட்டது. இதனால் தற்கொலை செய்து கொள்வது பாவமானது என்ற நிலை மாறி மிகத்தாழ்வான செயல் என்று கருதப்பட்டது.

ஒரு பெண் வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் நலிவுற்று பின் தன்னுடைய தன்னம்பிக்கை, கடும் உழைப்பு ஆகியவற்றை மூலதனமாக்கி போராடி வாழ்க்கையில் வெற்றி பெற்று பரிணமிக்கிறாள்.

வாழ்வில் அவள் மிகவும் வேண்டியது கிடைக்கவில்லை, மற்றவர்கள் மூலம் பெறத் துடிக்கிறாள். தேர்ந்தெடுக்கும் நபர் சரியில்லை எனில் வாழ்க்கையில் பிரச்சினைகள் பெரிதாகின்றன.

சின்ன பிரச்சினைகள் பெரிதாகி மன அழுத்தத்தை உண்டாக்கி, துன்பத்தை ஏற்படுத்தி சாவின் முடிவிற்குச் செல்லத் துடிக்கிறாள்.

நாம் அடிக்கடி படிக்கிறோம். இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. இன்பம் வருகின்ற போது மகிழ்ச்சி அடைவது, துன்பம் வருகின்ற போது துயரப்படுவதும் மனித இயல்பு. நாம் எல்லோரும் இந்த இரண்டு நிலைக்குள்ளும் இருந்து வாழப் பழகிக் கொள்கிறோம்.

எனினும் நம்மில் சிலர் இதிலிருந்து மாறுபடுகின்றனர். மாற்றமுடியாத மனக் கலக்கமும், மனத்தொய்வும் அடைகின்ற போது மருட்சியடைய ஆரம்பிக்கின்றனர். தன் மனக் கட்டுப்பாட்டை இழக்கின்றனர். தற்கொலைதான் தீர்வு என்று கருதி அதைத் தஞ்சமடைகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்த வரை பல தற்கொலைகள் வெளிச்சத்திற்கு வராமலும், மறைக்கப்பட்டும் போய் விடுகின்றன. தற்கொலை செய்து கொள்கின்றவர்களில், ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது எல்லா நாடுகளிலும் காணப்படக்கூடியதாக உள்ளது.

அதாவது 3:1 என்ற விதத்தில் உள்ளது. ஆயினும் தற்கொலை முயற்சி செய்கிற பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட மூன்று பங்கு அதிகமாக உள்ளது என்கின்றனர்.

எத்தனையோ சாதனைகள் படைத்த பெண்கள் இன்னும் சரித்திரத்தில் உலா வருகின்றார்கள். வேதனைகளைக் கண்டு வாழ்வை முடித்துக் கொள்ளாது, எதிர் கொண்டு வெற்றி பெறுவதே இலட்சியமென்பதை மனதிற்கொண்டு சாவல்களை எதிர் கொள்ளுங்கள். வெற்றி உங்கள் பக்கம்.

எவ்வாறு அழகு படுத்தலாம்?

பொதுவாகப் பெண்களின் உதடுகளை கொவ்வைப் பழத்துக்கு ஒப்பிடுவார்கள் கவிஞர்கள். கவர்ச்சிகரமான உதடுகள் என்பது எல்லாப் பெண்களுக்குமே அமைந்துவிடுவதில்லை. எனவே இன்று உதடுகளை எவ்வாறு அழகுபடுத்தலாம் என்பது பற்றிப் பார்ப்போம்.

முதலில் தங்களது உடலின் நிறத்தைப் பொறுத்தே பெண்கள் உதட்டுச்சாயத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே அவர்களுக்கு அழகு சேர்க்கும்.

உதடு மட்டுமன்றி, முடி, கண்களின் கருவிழி ஆகியவற்றுக்கு ஏற்பவும் உதட்டுச் சாயத்தைத் தெரிவு செய்வது அவசியம்.

பகல் நேரத்துக்கு மென்மையான வண்ணம் கொண்ட உதட்டுச்சாயம் போதுமானது. ஆனால் இரவு நேரத்தில் சற்று அடர்த்தியான நிறம் கொண்ட உதட்டுச்சாயமே ஏற்றது. உதட்டின் அழகை மேலும் எடுப்பாகவும் காட்டும்.

உதடுகள் கோடை காலத்தில் விரைவில் வெடிக்க ஆரம்பித்து விடுகின்றன. இதனால் என்ன தான் நிறங்கள் கொண்ட உதட்டுச்சாயம் பூசினாலும், அது உதட்டின் அழகைக் கெடுத்துவிடும். ஆகவே வெயில் நாட்களில் அவ்வப்போது தண்ணீர் அருந்துவதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

மிகவும் சூடான பானங்கள் குடிப்பதைத் தவிர்த்திடுங்கள். மிகவும் குளிர்ச்சியான பானங்களும் உதடுகளின் அழகைக் கெடுத்து விடும்.

இவையெல்லாவற்றையும் விட தரமான உதட்டுச்சாயம் உபயோகிப்பது மிகவும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
கண்டுக்குளி கிளை

டேஸ்ட் கடை தணிகாசலம்

இன்று வெள்ளிக்கிழமை, தணிகாசலம் அண்ணன் கோயிலுக்குப் போய் சுவாமி கும்பிட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந் தார். அப்போது தூரத்தே நான்கு பேர் தலையில் முக்காடிட்டபடி வந்து கொண்டிருந் தனர்.

யாரடா இது? காலையிலேயே இப்படி வருவது என்று ஆச்சரியத்துடன் அப்படியே நின்று விட்டார். காரணம் என்ன தெரியுமா? அத்தனை பேரும் தோட்டக் கமிட்டித் தலைவர்கள்.

தணிகாசலம் அண்ணனை நெருங்கியதும் ''வணக்கம் அண்ணே'' என்று கோஷ்டியாகக் கூறினர்.

''வணக்கம் தம்பிகளே, இது என்ன கோலம். காலையிலேயே இப்படி அலங் கோலமாக தலையில் முக்காடுடன்?'' என்றார் ஆச்சரியத்துடன்.

''ஆமாங்க அண்ணே! எல்லாம் எங்க பெரிய தலைவர் செய்த மோசம்தான். இப்படி எங்களைத் தலை குனிய வைத்து விட்டது.''

''அப்படி என்ன தம்பி தலைவர் புதுசா செய்து போட்டார்.''

''புதுசா ஒன்னையும் செய்யவில்லை. அவரை நம்பிய எங்களைத் தான் மோசம் பண்ணி, எங்கள் தலையை மொட்டை அடிக்க வைத்துவிட்டார்.''

''என்னது மொட்டை அடிக்க வைத்து விட்டாரா?''

''ஆமாங்க அண்ணே! எங்க தலைவர் ஒன்னும் மானம் கெட்டவர் அல்ல. அப்படி ஒன்றும் ரோஷம் கெட்டுப் போய் விடமாட்டார். எங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டார் என்று நம்பிக்கையுடன் பந்தயம் பிடித்தோம்.''

''அடப்பாவமே! இது என்ன தம்பி பெரிய அநியாயமா இருக்கு. காலம் காலமா அவங்களோட இருக்கீங்க.

வசதிக்காக மரத்துக்கு மரம் தாவுறது ஒன்னும் புதுக்கதை இல்லியே! அதுக்காக நீங்க எல்லாம் இப்படி மொட்டை அடித்துக் கொள்ள வேண்டுமா?''

''என்னங்க அண்ணே செய்றது, எங்களுக்கு மானம், ரோஷம் என்று ஒன்று உண்டே.''

''அதுக்காகத் தலைவர்மாரான நீங்க, இப்படி மனம் உடைந்து போகலாமா?''

''எங்களை என்னங்க அண்ணே செய்யச் சொல்லுறீங்க. இந்தப் பாவி மனுசன்களை நம்பித்தானே யானைக்கு ஓட்டுப் போடு, பூனைக்கு ஓட்டுப் போடு என்று தோட்டம் தோட்டமாப் போய் பிரசாரம் செய்தோம். கட்சி தோத்துப் போனவுடன் நாங்கள் தான் உதை வாங்கினோம், எங்கள் வீடுகளுக்குத் தான் நெருப்பு வைத்தாங்க, எங்க புள்ளை குட்டிங்க தானே காடுகளில் போய் ஒளிந்து இருந்தாங்கள்.''



மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

''என்ன தம்பி செய்யிறது? இவுங்களை நம்பி நாம ஓட்டுப் போடுறதும், உதை வாங்குறதும் நம்ப தலை விதியாப் போச்சு.''

''நாங்களும் கடைசிவரை நம்பவே இல்லை. ஐந்து மாதமா இருந்த மனுசன், இப்படிக் கடைசி நேரத்தில காலைவாரி விடுவார்னு''

''மனுசனும் அப்படித்தான் இருந்தார். கடைசி நேரத்தில காதர் ஹாஜியாரை ரிமாண்டில போட்டவுடன், இவருக்கும் வயித்த கலக்கிப்புடிச்சாம். கோடி கோடியா தான தர்மம் செய்த காதர் ஹாஜியாரை பத்து லட்சரூபா மோசடின்னு சொல்லி உள்ளுக்குள் போட்டுப்புட்டாங்க. நம்ம ஐயா என்னமோ எழுநூறு கோடி ரூபா கொந்தராத்து விசயத்துல மாட்டிக்கிட்டாராம்.''

''ஆமாங்க அண்ணே! நாங்களும் சாடைமாடையாகக் கேள்விப் பட்டோம். இந்த விவகாரத்தில ஒரு இந்தியப் பொண்ணும் சம்பந்தமாமே.''

''பொண்ணுங்க விசயம் ஒன்னும் புதுசு இல்லையே! அவர்களுக்கு அது சர்வ சாதாரணம்.''

''என்னமோங்க அண்ணே! எங்க தலைவர்மார், எங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்று பந்தயம் பிடித்தோம். ஆனால், மொட்டை அடிக்க வைத்து விட்டார்கள். அது தான் கவலை.''

''இதுல என்ன தம்பி கவலைப்பட இருக்கு. முடி போனதால் தலைக்கும் கொஞ்சம் குளிர்ச்சியா இருக்கும்.''

''என்னங்க அண்ணே! நீங்களும் எங்களைக் கிண்டல் அடிக்கிறீங்க.''

''வேறு என்ன தம்பி சொல்றது. நானும் உங்களோடையே இருப்பவன் தானே.

இப்ப ரோசமா மொட்டை அடிச்சிட்டீங்க, சில நாட்களில் மயிர் வளர்ந்தவுடன், பழைய குருடி கதவைத் திறடி என்று, நீங்களும் தலைவருக்கு ஜே! என்று கொடி பிடிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.''

''நிச்சயமா அந்தப் பருப்பு இனிமேல் வேகாது. காட்டிக் கொடுத்தவங்க பின் போக மாட்டோம். எங்கள் வழி தனி வழியாகத் தான் இருக்கும்.''

''எப்படியோ தம்பி, எந்த வழி நல்ல வழியோ அதுதான் இந்தத் தணிகாசலத்தின் வழியும். எப்பவுமே நல்லவர்களின் பக்கம் தான் இருப்பேன்.''

''நன்றீங்க அண்ணே, உங்கள் துணை ஒன்றே போதும்'' எனத் தலைவர்கள் விடை பெற்றனர்.

பூனைக்கு மணி கட்டுவது யார்? புரியாத தடுமாற்றம் ஏன்?

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு பெற்றுக் கொடுப்பது யார் என்ற விடயம் பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற நிலையாகிவிட்டது.

தோட்டத் தொழிற்சாலைகளை தீவைத்துக் கொளுத்திய ஜே.வி.பி.யினர் – தொழிலாளர்களின் தேசிய அடையாள அட்டைகளை அபகரித்து ஓட்டுப் போட விடாமல் தடுத்த ஜே.வி.பி.யினர் – தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதாக கொக்கரிக்கின்றனர்.

அதேவேளை, அமைச்சரவையில் முக்கிய பொறுப்பை வகிப்பவர் பிரியதர்ஷன யாப்பா. இவர் பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்கே பொறுப்பான அமைச்சராகவும் இருக்கின்றார்.

பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல, அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டியது, இந்த அமைச்சர்களின் கடமை.

அதனால்தானோ என்னவோ அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 400 ரூபாவைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று பகிரங்கக் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், காலம் காலமாகத் தொழிலாளர்களின் சந்தாவான உண்டியல் பணத்தில் சுக போகம் அனுபவித்துவரும் பெரும் தொழிற் சங்கங்கள் என்ன செய்கின்றன?

பேசுகிறோம், பேசுகிறோம் என்று பம்மாத்துக் காட்டுகின்றனர். பலமுறை பேசி விட்டோம் என்கின்றனர்.

தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக என்ன பேசினார்கள்? என்ன திட்டங்களை முன் வைத்துள்ளனர்? சம்பள உயர்வாக இவர்கள் கேட்டிருக்கும் தொகை என்ன? அதற்கு தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் பதில் என்ன?

இந்த விவரங்களை இவர்கள் வெளிப்படுத்தாமல் மூடிமறைப்பது ஏன்? உண்மை நிலை வெளிப்பட்டால் குட்டு அம்பலமாகி விடும் என்று கூட்டு ஒப்பந்தப் பங்காளிகள் பயப்படுகின்றனர்.

சென்ற முறை ஒப்பந்தம் செய்தபோது தொழிலாளர்களுக்கும், பிற தொழிற்சங்கங்களுக்கும் கூடத் தெரியாமல் கூட்டு ஒப்பந்தத்தை செய்து மொத்து வாங்கிக் கொண்டனர். இரண்டு வருடங்களுக்கு சம்பள உயர்வு கேட்கமாட்டோம், வேலை நிறுத்தம் செய்ய மாட்டோம் என்று ஒப்பம் வைத்து விட்டு, வம்பில் மாட்டிக் கொண்டதோடு கோர்ட்டுக்கும் செல்ல நேரிட்டது.

இந்தக் கூட்டு ஒப்பந்தக் கூட்டாளிகள் ஏற்கனவே சூடுபட்டவர்கள். ஆனாலும், இவர்களுக்குச் சூடு சொரணையே இல்லை.

147 ரூபாவை நாட்சம்பளமாகப் பெற்றுக் கொடுத்து விட்டோம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டனர். ஆனால், உண்மை அதுவல்ல. அடிப்படைச் சம்பளம் 121 ரூபா மட்டுமே. ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம், லீவு போனஸ், சேவைக் காலப்பணம் என்பனவற்றை கணிப்பிடும் போதும், ஆக 121 ரூபாவை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படுகின்றன. இதை மறுக்க முடியாது.

வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கும் போது தோட்டத் துரைமார் 15 ரூபாவுக்கு மேல் ஒரு சதமேனும் வழங்க முடியாது என்று கைவிரித்து விட்டனர். இதில் ஒரு ரூபாவாவது கூட்டமுடியாது என்றும் கூறுகின்றனவாம்.

இப்பொழுது திரை மறைவுப் பேச்சுகள் ஆரம்பித்து விட்டன.

மலையகத்தில் இப்பொழுது எட்டு லட்சம் தொழிலாளர்கள் தோட்டங்களில் கடமையாற்றுகின்றனர். ஒரு நாளைக்கு ஒரு ரூபா என்றாலும், தினசரி எட்டு லட்சம் ரூபாவை தோட்டக் கம்பெனிகள் இழக்க நேரிடும். அப்படியே 30 நாட்களுக்கு அதாவது, ஒரு மாதத்திற்கு 240 லட்சம் ரூபா இழக்க நேரிடுகின்றது. இதன்படி ஒரு வருடத்துக்கு 28 கோடி 80 லட்சம் ரூபாவை இழக்கின்றது.

ஆனால், இந்தத் தொழிற்சங்கங்கள் என்ன செய்கின்றன?

வருடா வருடம் இழக்கப் போகும் பலகோடிகளில் சில கோடிகளைச் சந்தோஷமாக வழங்கினால், இந்தத் தொழிற்சங்கங்களை சரிக்கட்டி விடலாம் என துரைமார் சம்மேளனம் வாடிக்கையான மாமூல் பேச்சுக்களை ஆரம்பித்து விட்டதாம்.

வழமையாகவே ஆமாம் சாமி போடும் கூட்டு ஒப்பந்தக் கூட்டாளிகளான தொழிற் சங்கத்தினரும் பச்சைக் கொடி காட்டிவிட்டனராம்.

பேரம் முடிந்து சந்தோஷம் கைமாறும் வரை, இந்தக் கூட்டு ஒப்பந்தப் பேரமும் இழுத்தடிக்கப்படும் என்று விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்து தோட்டத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், செத்து மடிந்து கொண்டிருக்கும் தேயிலை, றப்பர் தொழில்துறைக்கான சம்பள நிர்ணய சபைக்கு மீண்டும் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும்.

நேர்மையான, தொழிலாளர்களின் நலனில் அக்கறை உடையவர்கள் சம்பள நிர்ணய சபைக்கு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

வழமையாக சம்பள நிர்ணய சபைக்கு தொழிலாளர் சார்பில் ஏழுபேரும், நிர்வாகத்தினர் சார்பில் ஏழு பேரும், அரசாங்கத்தின் சார்பில் மூன்று பேரும் நியமிக்கப்படுவர்.

ஆனால், இங்கேயும் கூட தோட்டக் கம்பெனிகளிடம் சந்தோஷம் வாங்கிக் கொண்டு அவர்களுக்காக கை தூக்குபவர்களும் இருக்கின்றனர்.

எனவே, சம்பள நிர்ணய சபைக்கு சுத்தமான புதிய இரத்தம் ஊட்டப்பட வேண்டும். இப்பொழுது தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட ஜே.வி.பி.யும், அமைச்சர் பிரியதர்ஷன யாப்பாவும் இருக்கின்றனர். அதேபோன்று மூத்த தொழிற்சங்கவாதியான அமைச்சர் அத்தாவுட செனவிரத்னவும் தொழில் அமைச்சராக இருக்கின்றார்.

எனவே, அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்களை, சுயநலவாதிகளான தொழிற் சங்கங்களின் பிடியில் இருந்து விடுவித்து, சம்பள நிர்ணய சபையின் மூலம் நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். தொழிற்சங்கச் சுரண்டல் கும்பல்களின் கொட்டம் அடக்கப்பட வேண்டும்.

நாவல் பழத்தை ஞாபகப்படுத்தும் ஒரு நகரின் அருகில் இருக்கும் ஒரு பாடசாலையில் ஒரே பரபரப்பாம். காரணம் என்ன தெரியுமா?

வகுப்பில் இருந்த மாணவி ஒருவருக்குத் திடீரென வயிற்றுவலி ஏற்பட்டதாம்.

ஆசிரியைகள் சிலர் அவசர அவசரமாக அம்மாணவியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனராம்.

அங்கே பெண் டாக்டர் ஒருவரால் அம் மாணவி பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டாராம். தொடர்ந்து அந்த டாக்டர் கூறிய விடயம் [illegible] ஆசிரியர்களை திக்குமுக்காடச் செய்து விட்டதாம்.

டாக்டர் என்ன கூறினார் தெரியுமா?

இன்னும் சில நிமிடங்களில் இந்த மாணவி குழந்தை ஒன்றைப் பிரசவிக்கப் போகின்றாள். உடனே லேபர் றூமுக்கு கொண்டு செல்லுங்கள் என்று உத்தரவிட்டாராம்.

உடன் வந்த ஆசிரியைகள் ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் அம்மாணவியை ஒப்படைத்து விட்டுத் தலைகுனிந்தபடி சென்றனராம்.

பாவம் மாணவியாக ஆஸ்பத்திரிக்குச் சென்றவர் தாயாகத் திரும்பினராம்.

இதன் தாக்கம் என்னவென்றால், வெள்ளிக்கிழமை பள்ளிக்கு சென்று வருகிறேன் என்று கூறி விட்டுச் சென்ற இளம் ஆசிரியர் ஒருவர், இச் சம்பவத்தின் பின் காணாமல் போய் விட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீம் கெமிக்கல்ஸின் புதிய அறிமுகம்.

பண்டைய மன்னர்களினால் தொன்று தொட்டு பாவிக்கப்பட்டு வந்த பல வித மூலிகைச் சாற்றைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட ஹெயார்ஓயில்.

தலைவலி, தலைப்பாரம், கண்பார்வை குறைந்தவர்களுக்கும் ஞாபகமறதி, உள்ளவர்களுக்கும் சிறந்த ஓர் ஹெயார் ஓயில். இதை தொடர்ச்சியாகப் பாவிப்பதால் தலைமுடி நன்றாக வளர்ந்து கறுப்பாகவும் பளபளப்பாகவும் திகழும்

இதை இலங்கையில் உள்ள சகல பாமசிகளிலும், ஆயுர்வேத மருந்துக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்

Beam Chemicals (PVT) Ltd.
No 18/263, 1/4, Kethsiri Place
Kottawa
pannipitiya.
Tele - 0112 782625
Fax - 0112 782947.

திருகோணமலையில்... சுடர்ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

011 4734401 - 3 011 2399668 - 70

தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.

ஹங்ரி பிளஸ்

பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290

நல்லைக் கந்தன் அருள் அவனியெங்கும் பரவ வாழ்த்துகிறோம்!

Yaso Motors & Hardware

Importers & Dealers in Motor Cycles & Spare Parts

No.: 163, Stanley Road, Jaffna.
Tel.: 021 222 2544

பொன்னம்பலம் அரிசி ஆலை

PONNAMPALAM RICE MILL

வன்னி மண்ணின் தரமான நெல், அரிசிகளை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.....!

ஆறுபடை வீடுகொண்ட திருமுருகா அவனியெல்லாம் சிறந்த அருள் புரிவாய்

பொதி செய்யப்பட்ட அளவுகளில் கிடைக்கும்

பொன்னம்பலம் அரிசி ஆலை, யாழ் சாலை, பரந்தன், கிளிநொச்சி. தொ.பே.: 021 228 5742

PROFESSIONAL COMPUTER COURSES

- DIPLOMA IN MULTI MEDIA (With Video Mixing)
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE (Online)
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- DIPLOMA IN INTERNET TECHNOLOGY
- DIPLOMA IN AUTOCAD (With New South Wales University Syllabus And Guide Books)

அனைத்து மாணவர்களுக்கும்
FREE HANDOUTS
FLOPPY DISKETTE
SOFTWARE CD & FREE COMPUTER CONSULTING
இவை அனைத்தையும் ஒன்றாகப் பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA
T.P :- 021 4 590222

EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது ரோல்ஸ் ரொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்டமார்க் சென்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 செப். 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.